The devotees took their turn and prostrated before Swamigal. His Holiness then gestured to me to go near him to the hall, which I did. He asked me to sit down and said "You have been coming to my camp and seeing me for last six occasions with a view to express something. Now is the suitable time and tell me what is it that you wanted to say". Then he called one of the organisers Sri G.R. Natarajan, Contractor (an old friend of mine) and told him that the puja that day was to be performed in the hall and a temporary dias of 15' x 15' be erected at the place with dry bricks packed with sand. He accepted the commands and left. Then Swamigal turned towards me and I started my conversation with His Holiness :

Self: The work in connection with the construction of the Sankara Mandir at Kurnool has been fairly completed. Shall I sketch the plan of the Mandir and its elevation, in a chalk piece on the floor here ?

Koviloor Digital Library

His Holiness : No it would not be necessary. Here, look at this Sankara Matom. It will be just similar to this, but in place of the open hall here, you would have erected walls to make a closed room with doors and windows. Then all around there would be varandahs and an open patio in front. That's all isn't it?

I was astonished at this, for His Holiness explained in few words the exact nature of the construction of the Sankara Mandir at Kurnool. Obviously His Holiness saw it all through his 'jnana drishti' - divine vision. His Holiness is truly a Thrikala Jnani (a Jagatguru capable of knowing and seeing the past, present and future).

Self : I now seek your blessings and guidance and directions as to where the idol is to be installed and also the installation of the padukas of Adi Sankara Bhagavadpadal.

His Holiness : There is no need for an idol (Vigraham). It is enough if you install the padukai of Adi Sankara in the Hall against the wall facing the entrance. On the wall, have a painting of Adi Sankara and his four disciples, in as large a size as feasible.

His Holiness continued : so far, I have installed Adi Sankara's vigraham in many places - why, even in Lalgudi Sankaralaya I installed an Adi Sankara vigraham.

Self : Yes. The Sankara Matom at Lalgudi was constructed at that time by my grandfather Late Sri Rengasami Sivan and others, on the banks of a tank, centrally approachable from the township.

Koviloor Digital Library

His Holiness : You know, they commenced the work on construction initially as Natraja Mandapam. They then wanted it to be known as Bajanai Matom. Because of my presence the devotees suggested it be Sankara Matom and had the installation of Adi Sankara vigraham.

"In the present changed times, such vigraha prathishtai (idol installation) is not necessary. It is sufficient if Adi Sankara paduka is installed, as it has more significance, especially as Sankara was not stationery at a fixed location and was moving from place to place. Further, as we see, there is less and less importance or attention given to the principles governing the ethical, moral and spiritual aspects in the life of humanity. There aren't many pundits well versed in the art to perform daily poojas - as you go further north their number gets diminished ! Henceforth wherever a Sankara Matom is constructed, it is sufficient if the padukai is installed.

Having spoken thus His Holiness continued

"As I said arrange for the painting of Adi Sankara and his four disciples, on the wall. It will enable all those who see the painting to recollect and recognise instantly our Jagatguru Adi Sankara. And have the padukas installed. That's all - now you may proceed."

Having thus spoken with clarity and kindness His Holiness gave me prasadam and blessed me. I took leave of His Holiness and proceeded on my return journey to Hyderabad.

It is of importance in this connection to draw pointed attention to the fact that His Holiness was fully aware of the number of attempts made by me earlier, travelling all the way from Kurnool/Hyderabad to Madras/Kanchi, to gain an audience with Him and discuss the various points in which I very much needed His guidance and

Koviloor Digital Library

clarification. His greatness is boundless as also his keen observation and the concern he showed to His devotees and to me in particular.

There were exchanges of correspondence too between me and the Mutt office at Kanchi, wherein I used to communicate the progress of work on the Mandir and sought minor clarification that I needed. It was extremely gracious on the part of His Holiness to have had time to persue my letters and to direct replies to be sent to me. I got replies delivered to me on the 4th or 5th day, barring the transmission time by post. It was astonishing as to how His Holiness found time to read and reply correspondence, in the midst of his busy daily schedules, poojas, anugrahams, visits, discourses, lectures and interviews, listening to the woes of disciples and devotees and granting solace to them and blessing them.

The mutt office sent me a blue print of the paduka. I got a marble paduka made over a padmam and peedam, in Agra Marble stone, at Hyderabad. It was nice piece of worksmanship by a muslim sculptor. Caste is no barrier to the Divinity and the service to His cause. The whole job was done in one single piece of marble stone to the exact specification and dimension as outlined in the blue print received from the mutt office.

Giving some serious thought to the painting of the picture of Adi Sankara and his four disciples, it occurred to me that instead of painting on the wall, which would be subject to the vagaries of climate, etc., we should get the painting done in brilliant colours, on a suitable canvas of good quality, with a fitting frame work. This would enable the whole picture to be moved in case it necessitates touch-up or repainting, to ward off any tarnishing of the images due to efflux of time. On enquiry, I was told that a smartha brahmin lady, Smt. Rajam Murthy (Mr. Murthy her husband was chartered accountant at Basheerbag) of Hyderabad, was engaged in the painting work of pictures of Gods and Goddesses and that her service could

8971
R65(குடு)

requisitioned for this good cause.

Rekhta Digital Library

I located Smt. Rajam and Mr. Murthi and they were kind enough to show me the various pieces of painting done which impressed me immensely. I was really astounded that a brahmin family lady in the midst of her daily domestic chores, could find time for pursuing the excellence of art and producing oil paintings of scintillating quality.

I explained to the couple my mission and althrough the lady was somewhat hesitant initially to undertake the work, not knowing how it will turn out especially as it was to be a life size oil painting on which no attempt so far had been made by her, she readily agreed when I impressed upon her that it was as per the commands of His Holiness (whose devotee she was) that a painting be got done and that she will have the full blessings of His Holiness. I pleaded that she takes up the job, so that it could be completed within a matter of 4 to 6 weeks. I assured her that the picture would turn out to be excellent with His blessings and that I would supply the canvass of an imported variety and the paints needed for work. Mr. Murthy extended his full support to her and the work was taken up.

I was making frequent visits to Kurnool, to look into the finishing stages of the construction of the Mandir, electrification as also the erection of a suitable pedestal.

The polishing of the Shahabad slabs with which the flooring was paved, was done by special artisans well versed in this type of work, from Hyderabad. Instead of constructing within the hall, a separate sanctum sanctorium, as per the direction of His Holiness a sizeable portion of 5 ft. was earmarked adjacent to the wall facing the entrance, and here a suitable pedestal was erected, with proper and elegant trellis work around, adding a small gate for entry inside. The whole arrangement added beauty to the architectural splendour and was well conceived and superbly executed.

Koviloor Digital Library



H. H. JAGATGURU CHANDRASEKHARENDRA SARASWATHI SWAMIGAL

Koviloor Digital Library

Koviloor Digital Library

PART - II

ஆதிசங்கரர் 4 சிஷ்யர்களுடன் கையால் வரைந்த படம் ஸ்ரீ பெரியவாள் ஆதரவு:

ஸ்ரீ மதி ராஜம் மூர்த்தி வரைந்த (Oil-Painting) 4 சிஷ்யர்களுடன் ஆதிசங்கரர் படத்தை, போட்டோ எடுத்து, Water-Colour Paint செய்து, Hyderabad லிருந்து கர்நூல் சென்று பிறகு சென்னை வந்து சேர்ந்தேன். பெரியவாள் முகாம் திருவான்மியூர் என்று தெரிந்து போட்டோவை எடுத்துக்கொண்டு அங்கு சென்றேன். இரவு சுமார் 8 மணி இருக்கும். பழைய கால ஒட்டு வீடுகள் 4-5 இருந்தது. 2-வது வீட்டு திண்ணையில் ஸ்ரீ பெரியவாள் வீற்றிருந்தார். கையில் இருந்த போட்டோவை முதல் வீட்டில் மடத்து ஆபிஸில்-வைத்து விட்டு பெரியவாள் சன்னதிக்குப் போய் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தேன் பெரியவாள் 'நீ கர்நூலிருந்து வருகிறுயா! நான்! இல்லே, Hyderabad லிருந்து வருகிறேன். HH நீ கர்நூலுக்கு போகவில்லேயா? ஆமாம் நான் Hyderabad லிருந்து புறபட்டு சென்னைக்கு வரும் வழியில் கர்நூலில் தங்கினேன். நீ Hyderabad லிருந்து வருகிறேன் என்று சொன்னாயே ? Hyderabad லிருந்துது புறப்பட்டு வந்ததால் அப்படிக் கூறினேன் என்றேன். HH ஆமாம், யாரோ ஒரு அம்மாள் ஆதிசங்கரர் படத்தை எழுதுகிருள் என்ருயே, எங்கே கொண்டுவா அந்தப் படத்தை! நான் திடுக்கிட்டேன். ஓடிப்போய் பக்கத்து வீட்டில் வைத்த Photoவை எடுத்து வந்து, ஸ்வாமிகளிடம் கொடுத்தேன். அவர் திண்ணையில் உட்கார்ந்திருந்தார் என்னேயும் அருகில் உட்காரச் சொன்ஞர். பிறகு Lease கொண்டு வரச் சொன்ஞர். அந்த Lease மூலம், Torch Light வெளிச்சம் போட்டு, மிகவும் ஊன்றி Photo ன் ஒவ்வொரு பாகத்தையும் பார்வையிட்டார்கள். நான் சொன்னேன் 'இது Potrait லிருந்து எடுத்த Photo. இன்னும் அது எழுதிய இடத்தில் தான் இருக்கிறது. கர்நூல் கொண்டுபோகவில்லே. ஏதாவது மாருதங்கள் (Correction) செய்ய 'பெரியவாள்' உத்திரவு கொடுத்தால், அதை செய்த பிறகு (Modification) Potrait ஐ மாட்டலாம் என்றேன்' ஸ்வாமிகள் சுமார் 10 நிமிஷங்கள், விவரமாகப் பார்த்துவிட்டு, ''எல்லாம் சரியாகத்தான் இருக்கிறது. ஒன்றும் மாற்ற வேண்டிய அவசியமில்லே . . . .

'ஒய் மடத்துசிப்பந்தியை அழைத்து, நமது பூஜைக்கு பின் இருக்கிறதே

Koviloor Digital Library
படம், அதுவும் இதுவும் ஒன்று போல இருக்கிறதே பார்த்து வா என்றார். அவன் அதை எடுத்துப் போய் பார்த்துவிட்டு, திரும்பி வந்து ''ஆமாம்'' என்றான். H.H:'சரி, அப்படியே சுவரில் மாட்டி விடு' என்று உத்திரவு இட்டார்.

இரவு நேரம் ஆய்விட்டது. ஸ்வாமிகள் முன் 4 or 5 மதருஸ் பிரதமகைஸ்கர்யம் செய்யும் சிஷ்யர்கள், G.R. நடராஜன், ஸ்ரீனிவாஸன், கண்ட்ராக்டர் எல்லோரும் இருந்தார்கள். பெரியவாளிடம் விடைபெறுமுன், 'ஓர் விக்ஞாபனம்' என்றேன். HH:''என்ன'' என்றார்கள். நான் கர்நூல் மடம் பிரதிஷ்டை ஆனவுடன் நமது ஆச்சார்யாள் காஞ்சி மடத்தின் பேரில் மாற்றி விடலாம். நான் கூடிய சீக்கிரம் அந்த ஊரை விட்டு போவேன் என்று நினைத்தபடி நான் Hyderabad போய்விட்டேன். அங்கே சரியான பொறுப்பாளர் இல்லாவிட்டால், யாராவது: எந்த Organisation ம் கட்டிடத்தில் நுழைந்து, பலவித Meeting முதலியவைகள் செய்யக் கூடும். நம் மடத்தைச் சேர்ந்து விட்டது என்றால், அந்த மாதிரி சூழ்நிலையைத் தடுக்கலாம். மடத்தை (காஞ்சி மடத்தைச்) சேர்ந்தது என்று Register செய்து, அங்கே Local Committee. ஒன்று அமைத்து தினசரி பூஜைகள் விவரங்களும் அவர்கள் பார்த்துக் கொள்ளும்படி ஏற்பாடு செய்தால் நல்லது என்று எனக்குத் தோன்றுகிறது என்றேன். 'பெரியவாள் பொறுமையாய் நான் சொன்ன விஷயங்களைக் கேட்டு விட்டு, உள்ளே மேனேஜர் விஸ்வநாதய்யர் இருக்கிறார், அவரைக் கூப்பிடு என்றார்! அவரும் வந்தார். HH:''நீ என்னிடம் சொன்ன அவ்வளவு விஷயங்களையும், மறுபடியும் மேனேஜரிடம் கூறு'' என்றார். நானும் கூறினேன். மேனேஜர் எல்லாம் கேட்டு விட்டு, அவருக்கே ஏற்ற சுபாவ மொழியில் ''இதெல்லாம் எங்களுக்கு எதற்கு பொறுப்பு. நாங்கள் எங்கே இருக்கிறோம். கர்நூல் எங்கே இருக்கிறது. பூஜை முதலியவைகளை எப்படிக் கவனிப்பது. நாளைப் பூஜைகள் நடக்கா விட்டால், யார் ஜவாப்தாரி. எங்கள் தலையில் இதையெல்லாம் கட்ட வேண்டாம். . .'' என்றார்.ஸ்வாமிகளும் கேட்டுக் கொண்டுதான் இருந்தார்.'பெரியவாள்' என்னைப் பார்த்து மெதுவாக சமாதானம் கூற ஆரம்பித்தார். HH:''அவர் என்ன சொல்லுகிறார் என்றால், மடத்துக்கு ஏற்கெனவே பல

Koviloor Digital Library

பொறுப்புகள் இருக்கிறது. இப்பொழுது இருக்கும் சொத்து விவரங்களுக்கே கணக்கு கொடுக்க வேண்டியிருக்கிறது. நிலவரி இன்னும் அநேக சங்கடங்கள் இருக்கின்றன. இன்னும் மேலும் சொத்து சேர்த்தால் கஷ்டம் தானே. ஆகையால் நீ ஒன்று செய். அங்கே சில பொறுப்பாளிகளை ஏற்படுத்தி, 'சங்கர மந்திர்' 'Trust' என்று அமைத்து, ரிஜிஸ்தர் செய்து, அவர்கள் பேரில் சாஸனம் செய்து விடு. உள்ளூரில் உள்ள பக்தர்களைக் கொண்டு ஓர் கமிட்டி ஏற்படுத்தி 'பூஜைகள்' எல்லாம் அவாளை பார்த்துக் கொள்ள சொல். இங்கேயும் அப்படித்தான் அநேக Trust ஏற்பாடு செய்துதான், ஒவ்வொரு காரியமும் நடக்கிறது. இதோ இருக்கிறானே, நடராஜன்-உன் ஸ்நேகிதன்-அவனைக் கேட்டு இங்கிருக்கும் Trust ன் நகலை (Copy) எடுத்துப்போய், அது பிரகாரமே செய்'' என்று அன்பான வார்த்தைகளால் உத்திரவு இட்டார். நானும் ஒத்துக் கொண்டு சாஷ்டாங்க நமஸ்காரங்கள் செய்து விட்டு, விடை பெற்றேன்.

நான் வெளியில் வந்தவுடன் அந்த சிஷ்யர்கள் எனது நண்பர்கள்,காரில் புறப்பட இருக்கையில் மேனேஜர் என் அருகே வந்து, ''நாளைக்கு விசேஷம் - லட்டு சமாராதனை. சாப்பிட வந்து விடுங்கோ'' என்று மிக ஆதரவுடன் சொல்லிப் போனார். பிறகு கொஞ்சகாலம் மேனேஜருடன் நேரில் பழகிய பிறகுதான், அவர் மடத்துக்கு செய்து வரும் பெரிய சேவையும், பெரியவாள் அவரிடம் வைத்திருக்கும் விசேஷ அன்பையும், அவர் சுபாவமாகவே மடத்தின் நலனை உத்தேசித்து அபடி கண்டிப்பாக பேசுபவர் என்றும் தெரியவந்தது. பிறகு அவர்தான் மடத்தில் எனது ஆப்த நண்பராக ஆகிவிட்டார்.

பங்களூர் ஸ்ரீ மான் சுப்பையா சாஸ்திரிகளை உபந்நியாசம் செய்ய ஒத்துக் கொண்டது.

மறுநாள், பூஜைக்கும் சமாராதனைக்கும், போக முடியவில்லை. சாயந்திரம் திருவான்மியூர் சென்றேன். 'பெரியவாள்' திண்ணையை ஒட்டிய ஓர் சிறிய அறையில் இருந்து, ஜன்னல் வழியாகவே தரிசனம் கொடுத்தார்கள். நான் திண்ணைமீது ஏறி சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து, ஓர் விக்ஞாபனம் என்றேன்: ''கர்நூல் சங்கரமடம் பிரதிஷ்டை சமயம், பங்களூரைச் சேர்ந்த,ஸ்ரீ மான் சுப்பையா சாஸ்திரிகள் என்பவரை வரவழைத்து, 'ஆதிசங்கரர்' அவதார சரித்திரத்தை அவர் கன்னட

Koviloor Digital Library

பாஷையில் பாடி உபந்நியாஸம் வெகு நன்றாக செய்கிறார். செகந்திராபாத்தில் செய்தார். காதுக்கு இனிமையாகவும் பக்தர்கள் மனவசப்படும் படியும், செய்தார். மிகவும் பிடித்திருந்தது. பெரியவாள் உத்திரவு செய்தால், அவரை உபந்நியாஸம் செய்யச் சொல்லலாமா! பெரியவாளை ஓர் சமயம் காஞ்சியில் தரிசித்து, ஆதிசங்கரர் வரலாறுகளை சொன்னதாகவும் அவர் சொல்லியிருக்கிறார். . .'' HH: ''அவரா'' என்று சொல்லி புன்னகையுடன் . . . இதோ இருக்கிறார்களே அவருடைய சிஷ்யாள் . . .'' என்றார். எனக்கு புரியவில்லை. மறுபடியும் HH: ''இதோ பார் அவாள் சிஷ்யர்கள்'' திரும்பித் திரும்பி பார்த்தேன். கீழே தாழ்வாரத்தில் சில பெண்களும், சிறிய குழந்தைகளும் நின்று கொண்டிருந்தார்கள். 'ஸ்வாமிகள்' அந்தக் குழந்தையை கூப்பிடு என்றார். அந்தப் பெண் குழந்தைகளை அழைத்தேன். அவர்கள் பெரியவர்கள்' முன்னே வந்தவுடன், 'யார் அங்கே. உங்க அம்மா வந்திருக்கிறாளா' என்றார் 'ஆம்' என்று சொன்னதும், 'கூப்பிடு' என்றார். 'பெரியவாள்' நான் சொன்னதை புரிந்து கொள்ளவில்லையென்று, ''அவர் இங்கே இல்லை, பங்களூரில் இருக்கிறார். அவரை ஏற்பாடு செய்யலாமா'' என்று கூறவே. ஓர் நடுவயது சுமங்கலி அம்மா வந்தார். எங்கே நீங்கள் ஆதிசங்கரர் மேல் பாடுவேளே, அதைப்பாடு என்றார். குழந்தைகள் தாயார் எல்லோரும் சேர்ந்து பாடினார்கள். நான் குறிப்பாகக் கேட்டுக்கொண்டிருந்தேன். அந்தப் பாட்டு, ஸ்ரீமான் சுப்பையா சாஸ்திரி உபந்நியாஸத்தில் வழக்கமாக பாடப்படும் பாட்டு என்று எனக்கு கொஞ்சம் நினைவு ஏற்பட்டது. HH: 'சிஷ்யர்கள் தானே!' என்றார்கள். 'ஆமாம்' என்று சொல்லி, சிரித்தேன்.

ஆஹா! என்ன திருவிளையாடல். புரியாதபடி புதிர் போட்டார். பிறகு பெரியவாளுக்கே உள்ள பிரத்யேக முறையில் புரியவைத்தார். காஞ்சியில் ஸ்ரீ பெரியவாள் முன் சங்கீத உபந்நியாஸம் செய்கையில் ஸ்ரீமான் சுப்பையா சாஸ்திரிகள் பாடிய இந்த பாட்டை முதன்முதலாக பெரியவாள் கேட்டு, அதை ரசித்து, இந்த அம்மாவையும் குழந்தைகளையும் கற்றுச் சொல்ல சொல்லியிருக்கிறார். அவர்களும் கற்றுக்கொண்டு அடிக்கடி பெரியவர்முன் பாடுகிறார்கள் என்பது பிறகு தெரியவந்தது. அந்த அம்மாள் எனது இன்ஜினியரிங் காலேஜ் நண்பர் அவர், அவர் மனைவி குழந்தைகள், ஒவ்வோர் குருவாரமும் பெரியவாள் இருந்தஇடம் சென்று தரிசித்து பாடி அனுக்ரஹம் பெற்று வருவது ஓர் தொடர்ந்த வழக்கமாம். பெரியவாள் ஸ்ரீமான் சுப்பையா சாஸ்திரிகளை, பேஷா! வரவழை என்று அனுக்ரஹித்ததைக் கேட்டு, மிக மகிழ்ச்சி அடைந்தேன்,

Koviloor Digital Library



A portrait of His Holiness Jagatguru Paramacharyal.

Koviloor Digital Library

Koviloor Digital Library

ஏனென்றால் அந்த உபந்நியாஸத்தைக் கேட்டது முதல், மறுபடியும் அதை கேட்க வேண்டும் என்ற ஆவல் என்னை உத்ஸாகப்படுத்தியது!

சாயந்திரம் (இரவு) மேனேஜரும், மற்றய பிரதம சிஷ்ய நண்பர்களும் வந்தார்கள். என்னைப் பார்த்து, 'ஏன் காலையில் வரவில்லை' என்று கேட்டுவிட்டு உள்ளே அழைத்து, 'லட்டு' பிரஸாதம் அன்புடன் கொடுத்தார்கள். இதை நான் எதிர்பார்க்கவில்லை. என் பாக்கியம். இரவு உத்திரவு பெற்று திரும்பினேன்.

Hyderabad திரும்பினேன். ஸ்ரீமான் சுப்பையா சாஸ்திரிகளுக்கு விவரங்கள் எல்லாம் எழுதி, அவசியம் 'சங்கர பாதுகா பிரிதிஷ்டை' சமயம், பத்திரிகை அனுப்புகிறேன். வந்திருந்து, ஆதிசங்கர 'வரலாறுகளை உபந்நியாஸம் செய்து, நடத்திக் கொடுக்கணும் என்று எழுதியிருந்தேன். அவரும் மிகவும் சந்தோஷப்பட்டு ஒத்துக் கொண்டார். கர்நூல் சங்கர பாதுகா பிரிதிஷ்டைக்கு வேண்டிய முக்கியமானவைகள், அதாவது 'சலவைக்கல் பாதுகை', 'ஆதிசங்கரர் - 4 சிஷ்யர்கள்' கொண்ட Oil-Painting Portrait, தயாராகி விட்டது. குறிப்பிட்ட தேதியும் நெருங்கி விட்டது. ஸ்ரீ மடத்துக்கு, கர்நூலிலும், சமீப ஊர்களிலும் நன்றாக சாஸ்திரம் படித்த வேத வித்துக்கள் - தெலுங்கர்கள் இருக்கிறார்கள். இது தெலுங்கு தேசமாகையினால் அவர்களை வைத்துக் கொண்டு, பிரதிஷ்டைக்கு வேண்டிய 'ஹோமங்கள் எல்லாம் செய்யலாம். ஆனாலும் முக்கியமாக இருந்து, நமது சம்பிரதாயப் பிரகாரம் நடத்திக்கொடுக்க (directions) ஓர் சாஸ்திரிகளை அனுப்பினால் போதும். பெரியவாள் அடிக்கடி சம்பாஷணையில் சொல்லி இருக்கிறார்-'அந்தந்த பிரதேசத்தில் என்னென்ன சம்பிரதாயம் இருக்கிறதோ, அதுபடியே எல்லாம் நடத்தவேண்டும்.' ஆகையால் தெலுங்கர்கள் சம்பிரதாயப் பிரகாரம் எப்படி செய்ய வேண்டுமோ அப்படியே செய்யலாமென்றும், தெலுங்கு பிராமணர் ஒருவரை, பூஜைகள் செய்ய நியமிக்கவேண்டுமென்றும், நான் நினைக்கிறேன் என்றும் எழுதியிருந்தேன். மேலும் ஸ்ரீமான் அக்னிஹோத்ரம் ராமானுஜ தாத்தாசாரியரையும் அனுப்பிவிக்க வேண்டும், நானும் அவருக்கு எழுதியிருக்கிறேன் என்றும் வரைந்திருந்தேன். ஸ்ரீமடத்து மேனேஜர், மடத்தைச் சேர்ந்த 2 or 3 வேதசாஸ்திரிகளை அனுப்பிவித்து நடத்திக் கொடுக்க வேண்டிய சாமான்களும் list செய்து, ஓர் பெரிய முறையில், சுமார் ரூ.3,000/= சிலவில், 'பிரதிஷ்டை' வைபவம் நடத்த திட்டமிட்டு

Koviloor Digital Library

எழுதியிருந்தார்கள். இந்த விவரம் 'பெரியவாள்' பார்வைக்கு போகவில்லைபோல் தெரிகிறது. எனது லெட்டரைப் படித்துப் பார்த்து, 'பெரியவாள்' "ஆம், அவன் எழுதிய படியே உள்ளூர் தெலுங்கு சாஸ்திரிகளை வைத்து, அங்குள்ள சம்பிரதாயப்ரகாரம் நடத்தச் சொல்ல ஸ்ரீமான் அக்னிஹோத்ரம் தாத்தாசாரியார் போகட்டும். அவரிடம் மடத்து சார்பாக செய்ய வேண்டியவைகளைச் சொல்லி அனுப்பு" என்று ஆக்ஞாபித்தார், எனக்கு லெட்டர் வந்தது.

ஆகவே, குறிப்பிட்ட முகூர்த்த நாள் வருவதற்கு முன் 'பத்திரிகை' எல்லாம் அச்சடித்து, உள்ளூர் பக்தர்களுக்கும், வெளியூரிலிருந்து வரவேண்டியவர்களுக்கும் அனுப்பப்பட்டது. ஸ்ரீமான் T.R. ராமச்சந்திர சாஸ்திரிகள், President ரொம்ப சிரத்தை எடுத்துக் கொண்டு உள்ளூர் வாசிகளிடம் donation, (பிரதிஷ்டை விழாவை ஒட்டி என்னையும் கூட அழைத்துக் கொண்டுபோய்) வசூல் செய்தார். முக்கியமாக உள்ளூர் வாசிகள், ஸ்ரீசங்கரமந்திர், கட்டிடம் கட்ட 'donation' ஒன்றும் கொடுக்கவில்லை என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. ஆகையாலேதான் 'பிரதிஷ்டை' செலவையாவது உள்ளூர் வாசிகள் செய்யட்டும் என்று நமது President பிரயத்தனம் செய்தார்கள். நான் குடும்பத்துடன் சில நாள் முன் கூடியே கர்நூலுக்குப் போய் பிரதிஷ்டை வேண்டிய ஏற்பாடுகளை கவனித்துக் கொண்டேன். குண்டூரிலிருந்து கல்லூரி வீரபத்ர சாஸ்திரி பங்களூர் ஸ்ரீ சுப்பையா சாஸ்திரிகள், Madras-லிருந்து ஸ்ரீமான் அக்னிஹோத்ரம் ராமானுஜ தாத்தா சாரியார், Hyderabad-லிருந்து ஸ்ரீமதி ராஜம் மூர்த்தி ஸ்ரீ மான் A.S. Murthy எனது இன்ஜினீர் நண்பர் ஸ்ரீமான் S. கிருஷ்ணமூர்த்தி, மேலும் அநேக வேத வித்துக்கள் எல்லோரும் கூடினார்கள்.

எதிர்பாராத அதிர்ச்சி பெரியவாள் கருணையால் பறந்தோடியது

கோடைக்காலம் மிகவும் வெக்கையும் - புழுக்கமும் அதிகம். ஆனதால், 'பிரதிஷ்டை' தினத்துக்கு முதல்நாள்' சங்கர மந்திர்' கட்டிடத்தின் சுற்றி உள்ள வெளிப்பிரஹாரம் முழுவதும் 'மூங்கில்பாய்' பந்தல்போட்டு, வாசலிலும் பந்தல்போட்டு வைத்தோம். எல்லா ஏற்பாடுகளையும் மேல் பார்வையிட்டு சுமார் 8.30 மணி (இரவு) வீடு திரும்பினேன். மறுநாள் பிரதிஷ்டை சுமார் ஒரு மணிநேரம் கழிந்து ஓர் பெரிய புயல் காத்தும் - மழையும் அடித்தது. போட்ட பந்தல்கள் பாயும்

Koviloor Digital Library

மூங்கில்களும் இருந்த இடம் தெரியாமல் 20-30 அடிக்கப்பால் போய் விழுந்தது. மடத்தில் இருந்த எனது சிப்பந்திகள் ஓடோடி வந்து விவரம் தெரிவித்தார்கள். நானும் போய் பார்த்தேன். இரவு மணி 11.00 ஆய்விட்டது. 'HH. பெரியவாளை' நினைத்துக் கொண்டு, ஏன் இந்த சோதனை என்று மனம் கலங்கினேன். ஒன்றும் புரியாத நிலையில் கொஞ்ச நேரம் இருந்தேன். பிறகு என் சிப்பந்திகளைக் கூப்பிட்டு, இனி பந்தல் போட்ட கன்ட்ராக்டரைக் கூப்பிட்டாலும் வரமாட்டார்கள். ஆகையால்'மந்திர் முன்புறம்' (entrance-ல்) சுமார் 10' X 8' பந்தல் நீங்களே போட்டு, மாவிலை, வாழைமரம் முதலியவைகள் கட்டி அலங்காரம் செய்து விடுங்கள். பாயையும் மூங்கிலையும் சேர்த்துக் கட்டி ஒரு புறம் எறியுங்கள் என்று சொல்லி, வீடு திரும்பினேன். அவர்களும் அப்படியே அழகாக அமைத்திருந்தார்கள்.

29-5-1959: காலையில் உள்ளூர் ஜனங்கள், வெளியூர் பக்தர்கள் எல்லோருமாக நூற்றுக் கணக்கில் கூடிவிட்டார்கள். இரவு மழைபெய்ததால் கொஞ்சம் குளுமையாக இருந்தது. 'பெரியவாள்' ஆக்ஞை இட்டபப்படி, சரியான குறிப்பிட்ட முகூர்த்த வேளையில், ஹோமம் - ஜபங்கள் எல்லாம் முடிந்து 'பாதுகைகள்' பிரதிஷ்டை செய்து, அபிஷேகங்கள் நடந்தன. 'ஆதிசங்கரர் 4 சிஷ்யர்கள்' Portrait உம் சுவறில் மாட்டப்பட்டது. அபிஷேகங்கள் முடிவடையும் முன், ஸ்ரீ காஞ்சி பெரியவாள் அனுப்பிவைத்த, 'வெள்ளி - ஒரு ஒரு ரூபாயாக 108 ரூபாயும் ' பாதுகைகளுக்கும் அபிஷேகம் செய்யப்பட்டது. கடைசியாக '' ''ஜெயஜெய சங்கரா-ஹரஹர சங்கர'' என்ற கோஷத்துடன், பஞ்ச கர்பூர ஹாரத்தி எடுக்கப்பட்டது. அதுவரையில் உத்ஸாகத்தோடு, ஓடி-ஆடி எல்லாவற்றையும் பார்வையிட்டுக் கொண்டிருந்த எனக்கு, சந்தோஷம் மெய்மீறி (emotion) கண்ணீர் தாரை தாரையாக வழிய, பேசவும் நாஎழவில்லை. கற்பூர ஹாரத்தி காட்டும் பொழுதும் சுயநினைவு இல்லை. அப்படியே ஒரு பக்கம் சென்று உட்கார்ந்து விட்டேன். பிறகு கொஞ்ச நேரம் கழித்து சுய நினைவு வந்தது. அபிஷேகம் செய்த தீர்த்தப்ரஸாதம் வாங்கி சாப்பிட்டேன். எல்லாம் தெளிந்தது. மறுபடியும் மேலே நடக்க வேண்டிய காரியங்களில் ஈடுபட்டேன். 'பெரியவாள்' பரமகருணையுடன் அனுக்ரஹித்து, 1 or 2 பவுன் எடையுள்ள தங்கமெடல் ஸ்ரீ காமாட்சி பிம்பத்துடன் அனுப்பிய ''தங்கமெடல்'' ஸ்ரீமதி ராஜம் மூர்த்திக்கு அளிக்கப்பட்டது. மைத்தடி கன பாடிகளுக்கும் வஸ்திரங்களும், தக்ஷிணைகளும் திருப்தியாகக் கொடுக்கப்பட்டது. ஸ்ரீமான் T.R. ராமச்சந்திர சாஸ்திரிகள் இல்லத்தில், சுமார் 200-300 பிராமணர்களுக்கு சமாராதனை நடந்தது.

Koviloor Digital Library

சாயந்திரம் பக்தர்கள் நூற்றுக்கணக்கில் கூடினார்கள். ஸ்ரீமான் அக்னிஹோத்ரம் இராமநுஜ தாத்தாசாரியார் சுமார் ஒரு மணி நேரம் ஸ்ரீ காம கோடி பெரியவாள் சமூகத்துக்குச் செய்து வரும் பெரிய பெரிய செயல்களை முக்கியமாக ஸ்ரீ வேத தர்ம சாஸ்திர பரிபாலனா சபை ஏற்படுத்தி ஊர் ஊராக வேத பண்டிதர்கள் சென்று சபை கூட்டி, நமது ஹிந்து சமூகம் பற்றியும், வேதத்தின் தாத்பரியத்தையும் எடுத்து உரைக்க செய்திருக்கும் உன்னத ஏற்பாடுகளைப் பற்றிக் கூறி, நமது ஆசார்யாள், ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஓர் அவதார புருஷர் என்று எடுத்துரைத்தார். அவர் சமஸ்கிருதத்தில் பேசினதை எல்லோரும் மெச்சினார்கள். தொடர்ந்து, பங்களூர் ஸ்ரீமான் சுப்பையா சாஸ்திரிகள் 'ஆதிசங்கரரின் அவதார வரலாற்றை, கன்னடத்திலும் தெலுங்கிலும் சங்கீத உபந் நியாஸமாக செய்தார். தொடர்ந்து மூன்று நாட்கள் அவரே உபன்நியாஸம் செய்தார். ஒரு வாரம் உபந்நியாஸம் செய்யும் 'ஆதிசங்கரர்' செய்த உன்னதமான செயல்களை, ஊருக்கு போகவேண்டியிருந்ததால் மூன்று நாட்களில் சுருக்கி, ஆஸ்திகர்கள் மனதைக் கவரும்படியாக, இது வரையில் கேட்டிராத பாணியில் மக்களை மகிழவைத்தார்.

ஆகவே மூன்று நாட்கள் திருவிழாவாக 'சங்கரபிரதிஷ்டை' வைபவம் நடந்தேரியது. ஸ்ரீமான் T.R. ராமச்சந்திர சாஸ்திரிகளும், உள்ளூர் பிரமுகர்களும், ஏதோ contract வேலை செய்ய வந்த தமிழர் - ஸ்ரீமான் P.K. முத்துசாமி அய்யர், இவ்வளவு குறுகிய நாளில் பெரிய சாதனை செய்து, கர்நூல் மகாஜனங்களுக்கு உபயோகப்படும் படியாக நிரந்தரமாக ஓர் சங்கர மடத்தை கட்டி நமக்கு அளித்திருக்கிறார், அவருக்கும் அவர் குடும்பத்துக்கும் நாம் 'நன்றி' செலுத்துகிறோம் என்று தங்கள் அன்பை வெளியிட்டார்கள். நான் பதில் அளிக்கையில் என்னைப் பாராட்டியதற்கு நான் அருகதையல்ல. ஆசார்ய ஸ்வாமிகளின் பரம அனுக்ரஹத்தால் என் மூலம் கட்டப்பட்டிருக்கிறது. கர்நூலில் 'சங்கரமடம்' ஒன்று அவசியம் வேண்டுமென்று உத்தேசித்து காஞ்சி பெரியவாள் கட்டுவித்திருக்கிறார். 'நான் உங்களைத் தாழ்மையுடன் கேட்டு கொள்வது என்னவென்றால் நீங்கள் எல்லோரும் அடிக்கடி சங்கர மந்திர் வந்து பூஜைகள் முதலியவைகளை நல்லபடி நடத்த, பஜனை உபந்நியாஸங்கள் செய்ய ஏற்பாடுகள் செய்து, கர்நூல் சங்கர மடம் நல்ல முறையில் நடைபெறுகிறது என்று என் காதில் விழுந்தால் அதுவே நான் செய்த பாக்யம் '' என்று சமர்ப்பித்துக் கொண்டேன்.

Koviloor Digital Library

ஸ்ரீ பெரியவாளின் மனமார்ந்த மகிழ்ச்சி

ஸ்ரீமான் அக்னிஹோத்ரம் தாத்தாசாரியார் 'பெரியவாளை தரிசித்து, கர்நூல் சங்கர பிரதிஷ்டை விழா நடந்த விவரங்களை விக்ஞாபித்து, ''அந்த மாதிரி மடம் சென்னை போன்ற பெரிய City-ல் ஏற்பட வேண்டியது, அவ்வளவு நன்றாக அமைந்திருக்கிறது'' என்றாராம். அதற்கு 'பெரியவாள்' ''யார், முத்துசாமி தானே செய்தான். அவன் செய்வதெல்லாம் 'முத்தாக' இருக்கும்'' என்று புன்னகையுடன் சொன்னாராம். ஸ்ரீமான் தாத்தாசாரியார் லெட்டரில், விவரங்களை எழுதி, இந்த வார்த்தைகள் நான் சொன்னவை அல்ல, 'பெரியவாள்' கூறியதை அப்படியே எழுதினேன் என்று பரம அன்புடன் ஆசிர்வதித்து எழுதியிருந்தார். என்ன பாக்யம் பெரியவாள் வாக்கில் வந்த முத்தான மொழிக்கு நான் என்றும் நம் குருநாதருக்கு கடமைப் பட்டிருக்கிறேன்.

நானும் விவரமாக விழா நடந்ததைப் பற்றி ஸ்ரீ மடத்துக்கு கடிதம் எழுதினேன். அதை 'பெரியவாள்' நிதானமாக படித்துப் பார்த்தார்களாம். விழாவின் போது, ஹோமம், பிரதிஷ்டை, உபந்நியாஸம் எல்லா நிகழ்ச்சிகளையும் அவ்வப்போது என் பையன், ஸ்ரீமான் வெங்கட கிருஷ்ண பிரஸாத் போட்டோ எடுத்திருந்தான். அவைகளை எல்லாம் சேர்த்து 'பெரிவாள்' சமூகத்தில் சமர்ப்பிக்க ஓர் album தயார் செய்தேன். கர்நூல் Photo studio,வில் ஓர் முதலியார் போட்டோக்களை பெரியது செய்து, நல்ல முறையில் தயார் செய்து கொடுத்தார்.

என் நண்பர் மனம் மாறினார்

பிறகு ஒரு சமயம் 'பெரியவாள்' தர்சனத்துக்கு மெட்ராஸ் சென்றேன். கையில் Photo album copy எடுத்துச் சென்றேன். இந்த முறை என் நண்பரும், என் கணக்கை ஆடிட் செய்பவருமானவர் வீட்டில்' போய் இறங்கினேன். அவர் என்னை வரவேற்று, காப்பி முதலியவைகள் கொடுத்து 'என்ன, மடத்துக்குத் தானே. . .' என்று கொஞ்சம் கிண்டலாக சொன்னார். அந்த நண்பர் ஸ்ரீ பெரியவாளை இதுவரை பார்த்ததில்லை. ஸ்ரீமடம் மெட்ராஸில் சுமார் 2 வருஷம் முகாம் இருந்தும் இவருக்கு நமது பெரியவாளை பார்க்க வேண்டுமென்று தோன்றவில்லை. ஆனாலும் எனக்கு ஸ்ரீமடத்தில் இருக்கும் ஈடுபாடுகள் அவருக்கு நன்றாகத் தெரியும். இவருடன் கொஞ்சம் தர்கம் செய்ய வேண்டுமென்று தோன்றியது. ''ஆமாம் பெரியவாள் தரிசனத்துத்துக்கு

Koviloor Digital Library

Taxi-ல் போகப் போகிறேன். அவாள் சுமார் 8 மைல் துலேவில், பூந்தமல்லி தாண்டி, Brick field ஒன்றில் முகாம் இருக்கிறார்கள். நீங்களும் வருகிறீர்களா என்றேன். அவர் வர இஷ்டமில்லாமல், நீங்கள் போய் வாருங்கள் எனக்கு இஷ்டமில்லே' என்ருர்' ஏன் இஷ்டமில்லே' 'ஏன் என்ன காரணம்' நீங்கள் Roosevelt, Bulganin முதலிய வெளிநாட்டு பிரபலமானவர்கள் Madras வந்தால், படைபடைக்கிற வெய்யிலில் மணிக்கணக்காக காத்திருந்து அவர்களேப் பார்க்க ஆசைப்படவில்லேயா. போய் பார்த்தீர்கள் இல்லேயா. அப்படியிருக்க, எல்லோரும் சங்கராச்சாரியார் ஓர் பெரியவர் என்கிருர்கள், நீங்களும் அவர் ஓர் மகான், ஆசார புருஷர் என்றெல்லாம் ஒப்புக் கொள்ளுகிறீர்கள். அப்படியிருக்க அந்த ஸ்வாமிகள் யார், எப்படி இருப்பார் என்று பார்ககவேண்டுமென்று, Out of curiosity ஏன் ஏற்படவில்லே . . .' என் நண்பரும் என்ன பதில் சொல்வதென்று தெரியாமல், ''நானும் வருகிறேன். உங்களுடன்'' என்ருர். சரி ஸ்நானம் செய்து, சீக்கிரம் தயார் செய்து கொள்ளுங்கள் என்றேன். ஸ்நானங்கள் எல்லாம் முடித்து Photo album கையில் எடுத்துக் கொண்டு இருவரும் பெரியவாள்' முகாம் சுமார் 4:00 p.m. அளவுப் போய்ச் சேர்ந்தோம். அங்கே பக்தர்கள் ஒருவரும் இல்லே. பெரியவாள் 'பிக்ஷை' செய்து விட்டு பக்கத்தில் ஓர் ஓலேக் குடிசையில் இருப்பதாகத் தெரிந்தது. என் நண்பரை, ஸ்ரீ மஹாதிரிபுர சுந்தரி சமேத ஸ்ரீ சந்திரமௌளீஸ்வரர் பூஜை மண்டபத்துக்கு முன் இருக்கச் சொல்லி, பெரியவாள் இருந்த இடம் சென்றேன்.

'பெரியவாள்' தனியாக காலே நீட்டினபடி ஏதோ புஸ்தகம் பார்த்துக் கொண்டிருந்தார் உத்திரவு பெற்று, உள்ளே சென்று, Photo Album த்தை அவர் பக்கம் வைத்துவிட்டு, சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து, கால்மாட்டில் இருந்த பாதுகைகளேத் தொட்டு கண்ணில் ஒத்திக் கொண்டு, ''ஏதோ மடம் என்ருல் என்ன, எப்படிக் கட்டுவது அதற்குள்ள நியமம் சாஸ்திரம் ஒன்றும் தெரியாத என்னேக் கட்டச் சொல்லி உத்திர விட்டீர்கள். நானும் ஏதோ கட்டி முடித்து பிரதிஷ்டையும் பெரியவாள் அனுக்ரஹத்தால் நல்லபடி நடந்தது. இந்த பெரிய காரியத்தில், நான் தெரிந்தோ தெரியாமலோ, ஏதாவது குற்றங்கள் செய்திருந்தால், பெரியவாள் க்ஷமித்து என்னே மன்னிக்கும் படியாகக் கேட்டுக் கொள்கிறேன்' என்றேன். பெரியவாள் புன்னகையுடன் நீ ஒன்றும் குற்றம் செய்யவில்லே. அப்படி செய்திருந்தாலும், நான் மன்னித்து விட்டேன். . . என்று சொல்லி, இது என்ன என்று Photo Albumத்தை எடுத்தார்கள்.

Koviloor Digital Library

ஒவ்வொரு Photo வாக நன்றாகப் பார்வையிட்டு, அதில் உள்ளவர்களையும் நிகழ்ச்சிகளையும் அவரே சொல்லிக் கொண்டு, நிதானமாகப் புரட்டிப் பார்வையிட்டார். நடுவில் சில கேள்விகள் கேட்பார். கட்டிடம் கட்ட என்ன செலவாயிற்று. விழாவுக்கு எவ்வளவு செலவாயிற்று. எல்லா பணமும் நீதான் போட்டாயா? என்று பலவித கேள்விகளைக் கேட்டுக் கொண்டே இருந்தார். நானும் தக்கபடி பதில் உரைத்தேன் 'அக்னிஹோத்ரம் தாத்தா சாரியார் விழாவின் விவரங்கள் கூறினார். உன் லெட்டரையும் பார்வையிட்டேன். மிகவும் சந்தோஷம் . . .' என்று பேசிக் கொண்டிருக்கையில் மணி 6.30 ஆய்விட்டது. தீப பூஜை செய்து, கற்பூர ஹாரத்திக்கு மடத்து சிப்பந்தி வந்து 'பெரியவாளிடம்' தெரிவித்தான். உடனே 'பெரியவாள்' எழுந்திருந்து, 'நீ, சன்னதி வா'', என்றார்.

உள்ளேபோய் சந்தியா அனுஷ்டானங்களை முடித்துவிட்டு, பூஜை மண்டபத்தைத் தாண்டி பக்தர்கள் கூடியிருக்கும் பக்கம் 'பெரியவாள்' வந்தார். ஒவ்வொருவராகப் பேசி அனுப்பிவிட்டு, கடைசியில் என் பக்கம் திரும்பினார். 'பிரஸாதம்' கொடுத்து ஷேமமாய்ப் போய்வா என்றார். நான் ஏதோ குடும்ப விஷயங்களை பெண்கள் கல்யாணத்துக்கு இருப்பதைப் பற்றி விக்ஞாபித்தேன்'' பெரியவாள், ''நான் சொன்னவைகளை நீ செய்து கொண்டிரு. உன் விஷயங்களை நான் பார்த்துக் கொள்கிறேன்', என்று பரமகருணையுடன் அனுக்ரஹித்தார். பிறகு, பக்கத்தில் நின்று கொண்டிருக்கும் எனது நண்பரை அறிமுகப்படுத்தினேன். அவரிடம் ஏதோ ஒன்றிரண்டு வார்த்தை கேட்டுவிட்டு, அவருக்கும் 'பிரஸாதம்' கொடுத்தார். நான் 2 மணி நேரம் பெரியவர்களுடன் தனிமையாக பேசிக் கொண்டிருந்தபொழுது, எனது நண்பர் பேசாமல் பூஜா மண்டபத்தையே பார்த்துக் கொண்டிருக்கிறார். அவருக்கு 'ஓர் புதிய சூழ்நிலை' பெரியவாளிடம் முத்துசாமி அய்யர் மணிக்கணக்கில் பேசிக் கொண்டே இருக்கிறாரே. நமக்கு தரிசனம் கிடைக்கவில்லையே என்று ஏங்கியிருப்பார் போலும் 'பெரியாவாளை' முதல்முதலாக பார்த்தவுடன் அவருக்கு மனம் அப்படியே மாறிவிட்டது.'நான் இதுவரை தரிசிக்காமல் இருந்துவிட்டேன்' என்று நெஞ்சில் தோன்றியிருக்கலாம். பிறகு புறப்படுவோமா,என்றேன். ஏன், பூஜைகள் ஒன்றும் கிடையாதா. பார்த்துவிட்டே போகலாமே என்றார். ஆகவே ஆர ஆமர வீற்றிருந்து ஸ்ரீ சந்திர மௌலிஸ்வர' பூஜையை பார்த்துவிட்டு இரவு வீடு திரும்பினோம். எனது நண்பர் தான் தவறாக நினைத்த குற்றத்திற்கு அபசாரத்திற்கு, என்னிடம் apology எடுத்துக்

Koviloor Digital Library

கொண்டார். அன்றிலிருந்து இதுவரை, அவர் அடிக்கடி ஸ்ரீமடம் முகாம் சென்று, குடும்பத்துடனும் சென்று,மரியாதைகள் செய்து, பெரியவாளை வணங்கி, பாதபூஜை நன்கொடைகள் எல்லாம் கொடுத்து 'காமகோடி குடும்பம்' என்ற கூட்டத்தில் சேர்ந்துவிட்டார். இப்பொழுது சொன்ன பக்தர் மனம் மாறி காமகோடி சங்கர மடம் leader ஆக அவர் இருக்கும் பேட்டை தலைவராக இருந்து பல கைங்கர்யங்கள் செய்து வருகிறார்.

3-6-1960: ஸ்ரீமடம் திருச்சி, தென்னூர் அக்ரஹாரத்தில் முகாம். நான் குடும்பத்துடன் திருச்சி சென்ற சமயம். அன்று துவாதசி நாங்கள் எல்லோரும் தென்னூரில் பெரியவாள் தங்கியிருக்கும் இடத்திற்கு சென்றோம். 'கர்நூல் சங்கர மடத்தில்' ஆதி சங்கரர்-4 சிஷ்யர்களுடன்' மாட்டிய Oil paint potrait ன் பெரிய Photo ஒன்று கலர் அடித்து போட்டோ, Frame போட்டு பெரியவாள் சமூகம் சமர்ப்பிக்க எடுத்துப் போயிருந்தேன் உள்ளே போனதும் 'பெரியவாள்' எல்லோருக்கும் 'தீர்த்த பிரஸாதம்' கொடுத்துக் கொண்டிருந்தார். நாங்கள்தான் கடைசி. உள்ளே போய்விட்டால் என்ன செய்வது என்று அவசர அவசரமாக என் சம்ஸாரம் குழந்தைகளை 'தீர்த்தம்' வாங்கிக் கொள்ள போகச் சொன்னேன். என் கையில் பெரிய Photo இருந்ததால், எங்கே வைப்பது என்று புரியவில்லை. 'பெரியவாள்' பலகை ஆஸனத்தில் உட்கார்ந்து கொண்டு இருப்பதுக்கு நேர் எதிரில், சுமார் 10 அடி தூரத்தில் பந்தலின் ஓர் கால் நட்டிருந்தது. அதை ஒட்டியே ஓர் Wooden Stool உம் இருந்தது. ஏதோ நான் ஒரு படம் கொண்டு வரப்போகிறேன். அதை சரியான படி 'பெரியவாள்' நேர் பார்வையில் வைக்க pre-planned மாதிரி ஜோடனை அமைந்திருந்தது. மெதுவாக, ஆதிசங்கரர் படத்தை Wooden Stool-ல் வைத்து, தாங்கலுக்கு மூங்கிலில் சாத்தி, வாழை நார் ஒன்றால் அசையாமல் முடியும் போட்டேன். பெரியவாள் தீர்த்தம் கொடுப்பதை அப்படியே நிறுத்தி, அவசரமாக எழுந்து,பூஜையை பிரதக்ஷணமாக வந்தார். 'படம்' வைத்திருக்கும் அருகில் வந்தார். சிஷ்யன், ஒருவனைப் பார்த்து, சமிக்ஞை செய்யவே, அவன் ஆதிசங்கரர் பாதுகைகள் வைத்திருக்கும் பூஜை பெட்டியை எடுத்து வந்து, அந்த Wooden Stool முன் வைத்தான். 'பெரியவாள்' சுமார் 10 நிமிடம் மெய்மறந்து, தண்டத்தினால் பிரார்த்தனை செய்துவிட்டு, மறுபடியும் சிஷ்யனைப் பார்த்தார். அவன் ஓர் இலையில் குங்குமம் அக்ஷதை பிரஸாதம் கொண்டுவந்து Stool ல் வைத்தார். பெரியவாள் அதைத் தொட்டு அனுக்ரஹித்தார். உடனே சிஷ்யன இந்த படம் யார் கொண்டு வந்து வைத்தார்களோ, அவர்கள் 'பிரஸாதம்'

Koviloor Digital Library



The marble pedestal carved in the shape of a lotus, on which has been installed the padukas of Adi Sankara Bagavatpada, at the Kurnool Sankara Mandir.

Koviloor Digital Library

Koviloor Digital Library



The Oil painting in canvass of Adi Sankara Bagavatpada and His four disciples on display at the Kurnool Sankara Mandir. The painting was done by Srimathi Rajam Murthy of Secunderabad.

Koviloor Digital Library



Sri P.K. Muthuswamy Iyer (author) seen in prayer before the sanctury at the Kurnool Sankara Mandir

Koviloor Digital Library

Koviloor Digital Library

The decoration of the sanctum at the Kurnool Sankara Mandir. The painting of Adi Sankara and His four disciples can be seen fixed on the wall. The marble stone carved in the shape of a lotus, carries the padukas of Adi Sankara.

Koviloor Digital Library

Koviloor Digital Library



Photograph taken on the occasion of the consecration ceremony at Sankara Mandir at Kurnool.

Koviloor Digital Library

Koviloor Digital Library

The marble pedestal carved in the shape of a lotus, on which has been installed the padukas of Adi Sankara Bagavatpada, at the Kurnool Sankara Mandir.

Koviloor Digital Library

Koviloor Digital Library

Photograph taken on the occasion of the consecration ceremony at Sankara Mandir at Kurnool.

Koviloor Digital Library

Koviloor Digital Library

எடுத்துக் கொள்ளுங்கள் என்றார். நானும் அப்படியே செய்தேன். பெரியவாள் மௌனம் போலும் ஜாடைகள் கூட காட்டவில்லை. இந்த நிகழ்ச்சியை எதற்குக் குறிப்பிட்டேன் என்றால் ஸ்ரீ ஆதிசங்கர படத்தைக் கண்டதும், குருவுக்கு தான் செய்ய வேண்டிய மரியாதைகள், வந்தனங்கள் எப்படி செய்விப்பது என்று நம் போன்ற பாமரர்களுக்கு எடுத்துக் காட்டவே செய்தார். பிறகு பெரியவாள் எங்களுக்கு தீர்த்தம் கொடுத்தார். பெற்றுக்கொண்டு உத்திரவு பெற்று திரும்பினோம்.

ஸ்ரீ சைலம் சங்கர மண்டபம்

ஒரு நாள் தபாலில் திடீரென்று ஸ்ரீமடத்து கவர் வந்தது பிரித்து படித்தேன். ''ஸ்ரீமான் முத்துசாமிஅய்யருக்கு மஹா சந்நிதானங்கள் ஆக்ஞைப்படி எழுதுவதான விவரம். ஸ்ரீசைலம் ஓர் மஹாக்ஷேத்திரம். இராமேஸ்வரத்தில் கட்டியிருப்பது போல, ஆதிசங்கரரும் அவரது நான்கு சிஷ்யர்களும் கொண்ட பிம்பங்களை பிரதிஷ்டை செய்ய, கோவிலுக்கு போகும் சன்னிதியில் ஓர் மண்டபம் கட்டவேண்டும். சுமார் 50'X50' உள்ள ஓர் காலி இடம் தேவஸ்தானத்தை or govt-ல் வாங்கிவிட ஸ்ரீமடம் சார்பாக உடனே ஏற்பாடுகள் செய்யவேண்டும். ஸ்ரீமான் N. ராமேஸன், I.A.S. அவர்களை சந்தித்து, govt,வழியாக என்னென்ன செய்ய வேண்டுமோ அவைகளை செய்ய வேண்டும். மற்ற விவரங்கள் பிறகு எழுதுகிறோம்.

மனதுக்கு குதூகலம் ஏற்பட்டது. ஏதோ கர்நூலில் மடம் கட்டும் கைங்கர்யத்தை கொடுத்தார்கள். அது பெரியவாள் அனுக்ரஹத்தால் திருப்திகரமாக முடிந்துவிட்டது. என் மேல் இருக்கும் அன்பினால், நம்பிக்கையால் மற்றொரு கைங்கர்யம் செய்ய பாக்யம் ஏற்பட்டிருக்கிறது என்று சந்தோஷித்தேன். ஸ்ரீமான் ராமேசனை எனக்கு அவ்வளவு பரிச்சயம் அப்பொழுது இல்லை. கர்நூலில் govt. of A.P. temporary capital ஆக இருந்தபொழுது கர்நூல் சங்கர மடம் கட்டும் விஷயம் தெரிவிக்க அவரை சந்தித்த துண்டு. ஸ்ரீமடத்து லெட்டரை எடுத்துக் கொண்டு அவர் வீட்டுக்கு ஓடினேன். விஷயம் சொன்னதும் தனக்கும் copy of letter வந்திருப்பதாகவும், தான் என்ன செய்ய வேண்டுமோ, ஆந்திர அரசாங்க அலுவலகத்தில் (Endowment Department) அவைகளை செய்து கொடுப்பதாகச் சொல்லி, ஸ்ரீ மடத்தின் சார்பாக நீங்களே ஓர் application, அதாவது இன்ன காரணத்துக்காக 50' X 50' நிலம், ஸ்ரீ சைலம் கோவிலுக்கு அருகில் தேவை இருக்கிறது என்று எழுதிக் கொடுக்கச் சொன்னார்.

Koviloor Digital Library

அதற்கு நான் நமக்கு எங்கே காலி நிலம் வேண்டும், எவ்வளவு வேண்டும் என்று plan போட்டு, application கொடுத்தால் தான் தேவலே. அதற்கு ஸ்ரீ சைலத்தில் கோவிலுக்குப் போகும் பாதையில், எங்கே காலி நிலம் இருக்கிறது என்று தெரிந்து கொள்ள வேண்டுமென்று சொன்னேன். அவரும் தேவஸ்தானம் Executive Officer மூலம் ஓர் Rough Plan தரிவிக்கிறேன் என்றார். சரியென்று சொல்லி, முடிந்தால் நானும் ஸ்ரீ சைலம் சென்று நேரிலேயே தெரிந்து வருகிறேன் என்றேன்.

பிறகு ஸ்ரீ சைலம் சென்றேன். அங்கே கோவில் சந்நதிப் போகும் ரஸ்தாவில், கோவில் மதிற்சுவர்லேயிலிருந்து சுமார் 300 அடி நீளம், 90 அடி அகலம் உள்ள காலி மனை தெரிந்தது. அதில் ஊர் குப்பை கூளங்களை கொட்டியும், சில குடிசைகளும், உள்ளே நுழைய முடியாத படியான வகையில் இருந்தது. வெளியிலிருந்தே சுமாராக காலடியால் அளந்து திரும்பினேன். அதற்குள் ஸ்ரீ மடத்திலிருந்து, மண்டபம் கட்டிடம் எப்படி அமைக்க வேண்டும். நீளம், அகலம், உயரம், படிகள் சுற்றி கட்ட வேண்டிய கட்டிடங்கள் விவரங்கள் கொண்ட plan வந்தது. அதிலும் 50' x 50' நிலத்தில் மண்டபம் கட்ட வேண்டிய படி plan இருந்தது. நான் நேரில் போய் பார்த்து வந்ததாலும், ஸ்ரீ மடம் பின்னால் பாடசாலை, யாத்ரிகர்கள் தங்க, ஸ்ரீ மடம் முகாம் இருக்க முதலிய Expansion-க்கு அதிக நிலம் தேவைப்படும். 50' x 50' போராது. மேலும் கோவிலிலுருந்து வருகையில், கொஞ்ச பாகம் நிலத்தை (portion) ஸ்ரீ மடம் எடுத்துக் கொண்டு, பாக்கி பாகத்தை (portion) ஐ வேறு யாருக்காவது கொடுத்தால், பின்னால் இடைஞ்சல்கள் அதாவது அந்த பாக்கி பாகத்தில் Hotel, கடைகள் or பல தரத்தினர் விடுதி வந்தால், ஸ்ரீ மடம் செய்ய இருக்கும் ஓங்கின கருத்துக்கு பங்கம் ஏற்படலாமென்று தோன்றியது. ஸ்ரீ மான் ராமேஸனிடம் பேசினேன். ஸ்ரீ மடத்தில் 50' x 50' நிலம் தானே கேட்டிருக்கிறார்கள் என்றார். அது வாஸ்தவம், ஆனாலும் நான் சொல்லும் கருத்துக்களை உணர்ந்தால் அதிக நிலம் வேண்டுமென்று தோன்றுகிறது என்றேன். சரி எவ்வளவு வேண்டுமோ, ஓர் plan வைத்து application ஐ கொடுங்கள் என்றார். கோவில் மதில் சுவரிலிருந்து, வேறு ஒரு Cross Road வரும் வரை இருக்கும் 300 அடி நீளமும், அகலத்தில், ஓர் பெரிய கிணறும் - தோட்டமும் வரும் வரை உள்ள, 90 அடியையும், ஸ்ரீ மடத்துக்குத் தேவை, அதற்கு காரணங்கள் எல்லாம் கண்டு, Plan & Application போட்டு கொடுத்தேன். விவரங்கள் 'பெரியவாளுக்கு'

Koviloor Digital Library



Sriman Agnihotram Ramanuja Thathachariar with the Governor and his wife in Thiruppavai and Thiruvempavai celebrations at Hyderabad

Koviloor Digital Library

Koviloor Digital Library

H.H. JAGADGURU JAYENDRA SARASWATHI SWAMIGAL

Koviloor Digital Library

Koviloor Digital Library

விவரமாக தெரியப்படுத்தினேன். 'சரி, எவ்வளவு கிடைத்தாலும் போதும். மண்டபம் உடனே கட்ட வேண்டிய அவசியம் இருக்கிறது' என்று தெரிந்தது.

Endowments கமிஷனரைப் பார்த்து ஸ்ரீ ராமேஸன் பேசினர். தேவஸ்தானத்தில் இடம் கொடுக்கிறோம். Executive Officer ரை Plan செய்யச் சொல்லி, அவர் Opinion ஐ யும் கேட்டிருக்கிறோம் என்றார். ஆனாலும் ரொம்ப நாள் ஓடியது. ஒரு விதமான Order உம் கிடைக்கவில்லை.

ஸ்ரீ சைலம் சங்கர மண்டபம்-சங்கு ஸ்தாபனம்

திடீரென்று ஒரு நாள் ரூ. 10,000/=draft அனுப்பி, என் பேரில் Bank ல் Account Open செய்து, ஸ்ரீ சைலம் மண்டப வேலைக்கு பணத்தை உபயோகப்படுத்தும் படியும், 'சங்குஸ்தாபனம்' செய்ய தேதி குறிப்பிட்டு உடனே அனுப்புவதாகவும் ஸ்ரீ மடத்திலிருந்து லெட்டர் வந்தது. உடனே ஸ்ரீ மான் ராமேஸனும், நானும் Endowments Commission ஐ ப் பார்த்தோம். அவர் நம் அவசரத்தை உத்தேசித்து ' உங்களுக்கு எந்த இடத்தில் மண்டபம் கட்ட வேண்டுமோ அந்த Portion இடத்தை எடுத்துக் கொண்டு கட்டிட வேலை ஆரம்பியுங்கள். எவ்வளவு நிலம் விஸ்தீர்னம் கொடுப்பது என்பதை பின்னால் நிச்சயம் செய்து கொள்ளலாமென்று சொல்லி, ஓர் Order உம் அனுப்பிவைத்து, Copy of Letter உம் ஸ்ரீ சைலம் Executive Officer க்கு அனுப்பி வைத்தார். சங்குஸ் தாபனத்துக்கு முதல் நாளே நான் ஸ்ரீ சைலம் சென்றேன். ஸ்ரீ மடத்திலிருந்து மனுஷ்யாள் நேரே வருவார்கள் என்றும் செய்தி அனுப்பினார்கள். Deputy Commissioner, Endowments Kurnool ; Executive Officer, மற்ற பெரிய ஆபிஸர்களும், நெல்லுரைச் சேர்ந்த ஸ்ரீமதி சுஜாதா தேவியும், (donor) அவர்களுக்கும் முன் கூட்டியே லெட்டர் போயிருந்தது. நெல்லூரிலிருந்து அவர்கள் குடும்பத்துடன் வந்திருந்தார்கள். எங்கே 'சங்குஸ்தாபனம்' செய்ய வேண்டும் அதாவது மண்டபம் எந்த Portion of vacant land ல் அமையவேண்டும் என்று ஒன்றும் புரியவில்லை. அந்த இடமோ ஒரே குப்பையும் ஆபாசமுமாக உள்ளே நுழையும் ஸ்திதியில் இல்லை. பொழுது விடிந்தால் 'சங்குஸ்தானம்' செய்ய வேண்டும். ஸ்ரீ மடத்திலிருந்து வரும் மனுஷ்யாள் பெரியவாளிடமிருந்து ஏதாவது விவரம் கொண்டு வருவார்கள் என்று காத்திருந்தோம். அவர்கள் வந்ததும், கேட்டதில், 'எங்களுக்கு ஒன்றும்

Koviloor Digital Library

விவரம் பெரியவாள் கூறவில்லை. பிரஸாதம் கொடுத்து, அங்கே முத்துசாமி அய்யர், கன்ட்ராக்டர், Hyderabad வருவார். அவர் எல்லா ஏற்பாடுகளும் செய்வார். நீங்கள் மடத்து சார்பாக போய் வாருங்கள் என்று சொன்னதாகத் தெரிவித்தார்கள். சரியென்று, பெரியவாளை பிரார்த்தித்துக் கொண்டு தேவஸ்தானம் இன்ஜினியர், ஸ்ரீ மான் சன்னியாஸய்யா அவர்களை அழைத்துக் கொண்டு மடத்து மனுஷ்யாளையும் கூட்டிக் கொண்டு மிகவும் வேதனையுடன் காலி மனைக்கு போனோம் Tape ஐ போட்டுக் கூட அளக்க முடியாத படி ஆபாஸம் இருந்ததால், கால் அடியினால் ஏதோ மேலும் கீழும் நடந்து, ஒரு இடத்தைப் தேர்ந்து, இங்குதான் சங்குஸ்தாபனம் செய்யலாம் போல் எனக்குத் தோன்றுகிறது, என்றேன். எல்லோரும் சரி, அப்படியே செய்யலாம் என்றார்கள். உடனே இன்ஜினியர் ஸ்ரீமான் சன்னியாஸய்யாவை, '' எப்படியாவது பொழுது விடியுமுன். இங்கே இருக்கும் நரவல்-ஆபாசம், குப்பை எல்லாம் எங்கேயாவது வெளியில் கொண்டு போக வேண்டும். எல்லா இடத்தையும் சுத்தம் செய்து ஓர் பந்தல் நிழலுக்கு போடவேண்டும். இதற்கு எவ்வளவு சில வானாலும் யோஜிக்காமல் உடனே செய்து முடிக்க உதவவேண்டும்'' என்றேன். அவரும் ''சரி'' என்று ஒத்துக் கொண்டார்.

மறுநாள் காலை நாங்கள் எல்லோரும் அங்கே 'சங்குஸ்தாபனம்' செய்ய வேண்டிய இடத்துப் போனால், நேற்று பார்த்த இடம் இது தானா என்று திகைக்கும் படியாக, சுத்தம் செய்து 1 or 2 குடிசைகளையும் எடுத்தெறந்து, பந்தல்கள் போட்டு, மாவிலை, வாழைமரம் எல்லாம் கட்டி மிக நன்றாக இருந்தது. ஸ்ரீ மான் சன்னியாஸ்ய்யா 20-30 ஆட்களை வைத்து இரவோடு இரவாக எல்லாவற்றையும் முடித்துக் கொடுத்து, அவருடைய திறமையையும் பக்தியையும் காட்டுகிறது. நல்ல முறையில் சாஸ்திரிகளால் முறைப்படி, சங்குஸ்தாபனம் செய்விக்கப்பட்டது. Donation கொடுத்த நெல்லூர் ஸ்ரீமதி சுஜாதா தேவியும் மற்றய Officer கள் பொது மக்கள் எல்லோரும் சந்தோஷித்தார்கள். தொடர்ந்து கட்டிட வேலைகள் ஆரம்பிக்க இன்ஜினியர் ஸ்ரீ மான் சன்னியாஸய்யாவை ஓர் Estimate போட்டுக் கொடுக்க வேண்டும் என்றும், வேண்டிய சகாயங்கள் செய்து கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டேன். இங்கே ஸ்ரீ சைலத்தில், நடக்கும் rate ஐ விட 10% கம்மியாகவே வேலை நடக்க ஏற்பாடுக செய்வதாக உத்ஸாகத்துடன் கூறினார்.

Koviloor Digital Library

ஸ்ரீ பெரியவாளுக்கு எல்லா விவரங்களும் எழுதி, நான் அங்கேயே தங்கி வேலையைப் பார்க்க சௌகர்யம் இல்லையென்றும், ஸ்ரீமான் சன்னியாஸய்யா (Retired PWD Engineer) தேவஸ்தானம் இன்ஜினியர் பொறுப்பில் கட்டிட வேலையை பார்வையிட விட்டு விட்டு, நான் Hyderabad லிருந்து அடிக்கடி போய் வேலையையும், payments களையும் நேரிலேயே கவனித்து, ஸ்ரீ மடத்துக்கு விவரங்கள் அவ்வப் பொழுது தெரிவிக்கிறேன் என்று தெரியப்படுத்தி அதை அவர்களும் ஒப்புக் கொண்டார்கள். வேலையை துரிதமாக செய்யவும், ஸ்ரீ மடத்துக்கும் எங்களுக்கும் தாமதம் இல்லாமல் தொடர்பு கொடுக்க, மடத்து உப மேனேஜர் ஸ்ரீமான். சாம்பமூர்த்தி சாஸ்திரிகள் அடிக்கடி வந்து போனர். கடைசியில் வேலை முடியும் சமயம் ஸ்ரீ சைலத்திலேயே கொஞ்ச நாள் தங்கியும் இருந்தார். மேலே தேவைப்பட்ட பணம் ஸ்ரீ மடத்திலிருந்து எனக்கோ, ஸ்ரீ சன்னியாஸய்யாவுக்கோ வந்து கொண்டிருந்தது. Cement கஷ்டம் ஏற்பட்டதால், Hyderabad ல் Govtலிருந்து Permit வாங்கி, Nandhyal லிருந்து லாரியில் cement தருவிக்கப்பட்டது. திடீரென்று ஓர் சந்தேகம் ஸ்ரீமடத்துக்கு ஏற்பட்டது போலும். அதாவது ராமேஸ்வரத்தில் கட்டிய plan பிரகாரம் R.C.C. தூண், R.C.C. terrace எல்லாம் சேர்ந்து, 'சலவை பிம்பங்களை' (எடையை) தாங்குமோ, இதை பரிசோதனை செய்யவும். ஸ்ரீமான் L. வெங்கிட கிருஷ்ணய்யர், Chief Engineer AP. அவர்களிடம் கொண்டு போய் கொடுத்து, design எல்லாம் calculate செய்து அப்படியே கட்டலாம்,யோசனைகள் சந்தேகங்கள் வேண்டாமென்று சொல்லவே அதே Plan படி கட்டிடங்கள் நடந்து கொண்டிருந்தன. நானும் அடிக்கடி ஸ்ரீ சைலம் போய் நேரில் பார்வையிட்டு , ஸ்ரீ மடத்துக்கு லெட்டர்கள் மூலம் தெரியப்படுத்தி வந்தேன். மண்டப வேலை மாத்திரமே சாவகாசமாக, சிற்பிகளை வைத்துக் கொண்டு நடந்து வந்தன.

Secunderabad சங்கர மடம் கட்ட, பெரியவாள் அனுக்ரஹம்

நானும் என் மனைவியும் ஸ்ரீ பெரியவாள் தரிசனத்துக்கு 'இணையாத் தாங்குடி' முகாம் சென்றிருந்தோம். பூஜைகள் முடிந்து 'தீர்த்த பிரஸாதம்' பெற்றுக் கொண்டோம். HH. பெரியவாள் பிக்ஷை செய்து விட்டு, பக்கத்தில் இருக்கும் நந்தவனத்தில் சற்று ஓய்வு எடுக்கையில் என்னை வரும்படி உத்திரவு வந்தது. நாங்கள் இருவரும் ஸ்ரீ பெரியவாளை சாஷ்டாங்க வந்தனம் செய்து நமஸ்கிரித்து, அருகில் உட்கார்ந்தோம்.

Koviloor Digital Library
'பெரியவாள்' ஸ்ரீ சைலம் கட்டிட விஷயங்களைப் பற்றி விவரமாக வேண்டிய ஆலோசனைகள் கூறினார். சுமார் ஒரு மணி நேரத்துக்கு மேல பேசிக் கொண்டிருந்தோம். கடைசியில் புறப்படு முன், Secunderabad லும், ஓர் சங்கர மடம் கட்ட உத்தேசிக்கிறேன். பெரியவாள் அனுக்ரஹம் செய்ய வேண்டு மென்றேன். ' பெரியவாள்' புன்னகையுடன் சரி செய் என்று சொல்லி விட்டு ஆனால் ஸ்ரீ சைலம் வேலை முடிந்த பிறகு ஆரம்பிச்சுக்கோ. உடனே வேண்டாம் என்றும் ஆக்ஞை இட்டு 'சங்கர மடம்' சென்ட்ரா பாதில் எப்படியிருக்க வேண்டுமென்று இப்பொழுதே சொல்லி விடுகிறேன்''.- என்று கீழே மணலில் கோடுகள் போட்டு, முக்கியமாக மூன்று விஷயங்களுக்கு உபயோகப்பட வேண்டும். (i) ஆதிசங்கரர் பாதுகைகள் பிரதிஷ்டை செய்து, பூஜைகள் செய்து பிரார்த்திக்க ஓர் இடம் (ii) சிரார்த்தங்கள் முதலிய பிதுர்கார்யங்கள் செய்ய மற்றொரு விடுதி - ஏனென்றால் பல கிரஹஸ்தர்கள் வீடுகளில் டவுனில் வேண்டிய இடவசதியில்லாமல் அவதிப்படுகிறார்கள். இந்த மாதிரி ஒரு பொது இடம் ஏற்படுத்தி, ஓர் சாஸ்திரிகளையும் அங்கே வைத்துவிட்டால், சௌகர்யம். (iii) மூன்றாவதாக கொஞ்சம் தூரத்தில் ஓர் நந்தவனம் ஏற்படுத்தி, அதில் ஒரு பகுதியில் '' அபரகாரியங்கள்'' (இறந்தால் செய்ய வேண்டிய கர்மாக்கள்) செய்ய வேண்டிய சௌகர்யங்கள் செய்து வைக்க வேண்டும்'' என்றார்கள். நான் மூன்றும் ஒரே இடத்தில் சேர்ந்தார் போல் ஏற்படுத்துவது அவ்வளவு திருப்திகரமாக இருக்குமோ என்ற என் சிறு எண்ணத்தை விக்ஞாபித்தேன். 'ஏன், கொஞ்சம் எட்டி எட்டி வெவ்வேறு இடம் இருக்கலாமே!' என்று பெரியவாள் சொல்ல, நான் நன்றி கூறி விடை பெற்றுக் கொண்டேன். இரவு அங்கே தங்கி, பூஜைகள் பார்த்துவிட்டு மறு நாள் காலை புதுக்கோட்டையில் இறங்கி, ஸ்ரீ சாந்தானந்தா ஸ்வாமிகள் பிரதிஷ்டை செய்திருக்கும். 'புவனேஸ்வரி' கோயிலையும், அவாள் செய்து வரும் சண்டி ஹோமங்களையும் பார்வையிட்டு திரும்பினோம். ஸ்ரீ சாந்தானந்த ஸ்வாமிகளுக்கு நமது பெரியவாளிடம் ரொம்ப பக்தியுண்டு. HH. பெரியவாள் 'புவனேஸ்வரி' கோவிலுக்கு விஜயம் செய்திருக்கிறார். ஸ்ரீ பெரியவாளின் அனுக்ரஹத்தால் ஸ்ரீ சாந்தானந்த ஸ்வாமிகள் பெரிய பெரிய கார்யங்களை(பக்தர்கள் சார்பாக, மானிட வர்க்கம் முன்னேற) செய்து வருகிறார்கள். வருஷம் ஒரு முறை சதசண்டி ஹோமம், சுதர்சன ஹோமம், துர்க்கா ஹோமம் முதலியவைகள், மக்களின் க்ஷேமத்துக்காக, 27 நாட்கள், ஒரு மண்டலம், வேதவித்துக்களை வைத்து லக்ஷக்கணக்கான திரவிய செலவுகளைப் பாராமல் செய்து வருகிறார்கள். ஒரு சமயம், ஸ்ரீ சாந்தானந்த

Koviloor Digital Library

ஸ்வாமிகளைத் தரிசித்து, விடை பெறுமுன், HH. பெரியவாளை AP. முகாமில் தரிசித்து Hyderabad போகப் போகிறேன் என்றேன். ஸ்ரீ சாந்தானந்தா ஸ்வாமிகள் என் சார்பாக 16 நமஸ்காரம் செய்து என் சாஷ்டாங்க வந்தனத்தை தெரிவிக்கவும் என்றார். நானும் பெரியவாளை தரிசித்து 16 நமஸ்காரம் செய்தேன். சாதாரணமாக நான் 4 நமஸ்காரங்கள் தான் செய்வது வழக்கம். 'பெரியவாள்' ஓர் பெரிய ரூமில் இருந்தார். வேறு ஒருவரும் இல்லை. நான் நமஸ்காரம் செய்து கொண்டே இருப்பதைப் பார்த்து, 'ஏன் இடம் பெரிதாக இருக்கிறதேயென்று அதிக நமஸ்காரங்கள் செய்கிறாயா!' என்றார். நான் இந்த 16 நமஸ்காரங்களும் ஸ்ரீ சாந்தானந்த ஸ்வாமிகள் சார்பாக செய்வதாகவும், அவர்கள் சொல்லிய சில விஷயங்களையும் எடுத்துரைத்தேன். அதற்கு ஸ்ரீ பெரியவாள், "அவர் நினைத்ததை நடத்தியே தீருவார் . . ." என்று அனுகரஹித்தார்.

கர்நூல் சங்கர ஜெயந்தி–1955ல் துவக்கம்

கர்நூல் சங்கரமடம் கட்ட 1954-ல் உத்திரவு பெற்றவுடன், இடம் தேடி கட்ட ஆரம்பிக்கவும் சில தாமதங்கள் ஏற்பட்டுக் கொண்டிருந்தது. உள்ளூர் மக்களும், கமிட்டியில் இருந்தவர்களும் உத்ஸாகமாக கை கொடுக்கவில்லை. இந்த ஊரில் 'பஜனை மடம்' முதலிய எவ்வளவோ ஆரம்பித்துப் பார்த்தோம். ஒன்றும் நடக்காது என்று, எனக்கு பீதியைக் கொடுத்தார்கள். மேலும் அந்த பிரதேசத்தவர்களுக்கும் சங்கரரைப் பற்றியும், நமது காஞ்சிகாமகோடி ஆசார்யாளைப்பற்றியும் அதிகம் ஒன்றும் தெரியாது. ஆகையால் மக்களுக்கு இது விஷயம் முதலில் தெரிந்து கொண்டால், பின்னால் 'சங்கரமடம் கட்டும் அவசியத்தை அறிவார்கள் என்று 1955-ல் ஸ்ரீ சங்கர ஜயந்தி உத்ஸவத்தை, சொந்த பொறுப்பிலேயே, ஓர் உயர்ந்த முறையில் நடத்த வேண்டுமென்று தீர்மானித்து, ஸ்ரீ மடத்துக்கு என் உத்தேசத்தை எழுதி அங்கிருந்து தெலுங்கில் உபந் நியாஸம் செய்யும் ஓர் பண்டிதரை அனுப்பும் படியாகக் கேட்டுக்கொண்டேன். அவர்களும் உடனே தந்தி கொடுத்து, ஸ்ரீமான் கல்லூரி வீரபத்திர சாஸ்திரி அவர்களை குண்டூரிலிருந்து அனுப்பி வைத்தார்கள்! தினம் நான் ரோடில் சந்தித்தாலும் எனக்கு தெரிந்தவர்களை நேரில் 'சங்கர ஜயந்திக்கு' வரவேண்டுமென்று அழைத்தேன். 'நோட்டீஸ்' அச்சடித்து விளம்பரம் அனுப்பினேன். 'நகரேஸ்வரர்' என்ற சிவாலத்தில் ஓர் பெரிய Hall-ல் பூஜைகள், ஹோமங்கள், சாயந்திரம் உபந்தியாஸங்கள் எல்லாம் ஏற்பாடாயின, உள்ளூர் தெலுங்கு பண்டிதர்கள் அநேகம் பேர் பங்கெடுத்துக் கொண்டார்கள். மாலை கல்லூரி வீரபத்திர சாஸ்திரிகள்

Koviloor Digital Library

தெலுங்கு உபந்நியாசத்துக்கு, Hall-ல் சுமார் 400க்கு மேல் ரொம்பி வெளியில் 100 கணக்கில் மக்கள் கூடி கேட்டுக் கொண்டிருந்தார்கள். ஸ்ரீ சாஸ்திரிகள் 'ஆதிசங்கரபகவான்' நமது சனாதன தர்மத்தையும், அத்வைதத்தையும் நிலை நாட்டிய பெருமைகளை மிகவும் கவர்ச்சிகரமாக எடுத்துரைத்தார். மூன்று மணிநேரம் உபந்நியாஸம் செய்தார்கள். வந்திருந்த அனைவருக்கு மிகவும் ருசியாக லட்டுவும், சுண்டலும் பிரஸாதம் விநயோகம் செய்யப்பட்டது. எல்லோரும் இந்த ஊரில் இந்த மாதிரி உத்ஸவம், இவ்வளவு விசேஷமாக நடந்ததில்லை என்று பெருமையாக பேசிக் கொண்டு சென்றூர்கள். தொடர்ந்து 1956,57,58 வருஷங்களும் 'ஸ்ரீ சங்கர ஜயந்தி' கர்நூலில் விசேஷமாக நடைபெற்றது. ஆஸ்திக மக்களும் 'ஆதிசங்கரர்' அவதரித்ததும், நம் காஞ்சி ஆசார்யர்கள் செய்து வரும் பெரும் சமூகத்தொண்டும் கொஞ்சம் தெரியவந்தது.

1957ல் நான் Hyderabad வந்து Secunderabad-ல் குடியிருக்க விடு எடுத்துக் கொண்டேன். 1959-ல் 'ஸ்ரீசங்கர ஜயந்தி' வந்ததும் எங்கேயாவது செகண்டிராபாதில் உத்ஸவம் நடந்தால்,போகலாமென்று நினைத்து, பேப்பரில், ஸ்ரீ கன்னிகா பரமேஸ்வரி ஆலயத்தில் நடப்பதாக தெரிந்தது. அங்கே போனேன் சுமார் 200 பக்தர்கள்(தெலுங்கர்கள்-வாத்தியார்கள்) கூடி உத்ஸவம் கொண்டாடினூர்கள். அதில் கலந்து திரும்பினேன். எனக்கு 'என்ன இவ்வளவு பெரிய City தமிழர்கள் அநேகர் இருக்கும் ஊரில், ஸ்ரீ சங்கர ஜயந்தி கொண்டாடுவது இல்லையாயென்று' நினைத்துக் கொண்டே வந்தேன். பிறகு தெரிந்தது. ஏதோ 'ஆஸ்திக சபா' என்று இருப்பதாகவும் அவர்களும் சாதாரணமுறையில் 'ஸ்ரீசங்கர ஜயந்தி' கொண்டாடினூர்கள் என்று. மறு வருஷம் தமிழர்கள் கொண்டாடும் 'ஸ்ரீசங்கர ஜயந்தி'க்கு போனேன். ஓர் சிறிய சுப்ரமணியன் கோவிலில் ஸ்ரீமான் V. நரசிம்ம அய்யா, ஆடிட்டர், ஸ்ரீமான் P. ராஜகோபாலய்யர் Rly. Accts. Officer ஸ்ரீமான் நரரி பாகவதர், ஸ்ரீமான் லால்குடி கோபாலய்யர், முதலியவர்கள் (10-15 பேர்கள் கொண்ட) கூட்டம் நடந்து கொண்டிருந்தது. மிகவும் வருத்தப்பட்டு, அவர்களுடன் சம்பாஷிஷித்தேன். இந்த பெரிய ஊரில் இப்படித்தான் 'ஸ்ரீசங்கர ஜயந்தி' நடத்துவதா என்று வாதாடினேன். அதிலிருந்து என்னைப் பொறுப்பாளியாகப் போட்டு எல்லா சத்விஷயங்களையும் , ஸ்ரீசங்கர ஜயந்தியும் நடத்தும் படி கேட்டுக் கொண்டார்கள். அவர்களுக்கு நான் ஊருக்குப் புதிதாக வந்தவன் என்றும் கர்நூலில் சங்கர மடம் கட்டுவித்து, ஸ்ரீ சைலத்தில் சங்கர மண்டபம் கட்டிக் கொண்டிருக்கிறூர். பெரியவாளின் ஊழியர் என்ற விவரங்கள் தெரியவந்தது.

Koviloor Digital Library



Sir Brahmananda Reddy, Chief Minister of Andhra Pradesh, receiving the prasadam sent by His Holiness Paramacharyal.

Koviloor Digital Library

Koviloor Digital Library

ஸ்ரீ சைலம் சங்கர மண்டபம் கட்ட ஆரம்பம்

ஸ்ரீ சைலம் செல்லுவோம். முதலில் பழய கோவில்கள் எல்லாம் கட்டியிருக்கிறதே அது போல் கருங்கல்லை 6 பக்கமும் உளியால் வழவழ என்று Dress செய்து கட்ட ஆரம்பித்தோம். ஆனால், அப்படி எல்லா கருங்கல்லையும், உளியால் செதுக்கி, Dress செய்ய ரொம்ப நாட்கள் பிடித்தது வேண்டிய சிற்பிகள் (artisan) கிடைக்கவில்லை. பிறகு Basement வரையிலும், நான்கு பக்கங்களும் மாத்திரம் அந்த மாதிரி செதுக்கின கல் போதும் .. மீதி கட்டிடம் Coarse rubble masonr I class என்று P.W.D. கூறும் விதத்தில் கட்டடம் கட்ட வேண்டி வந்தது. மேலும் Endowments லிருந்து கேட்ட பிரகாரம் காலி இடம் Sanction ஆகிவரவில்லை. ஆகையால் வேலை மெதுவாக நடந்து வந்தது. பிறகு நாம் கேட்டபடியே பூரா காலிமனையையும் Endowments Dept-ல் கொடுத்து லெட்டர் வந்தது. அந்த இடம் மிகவும் பள்ளமாக இருந்தது. ஆகவே பல நூறு வண்டிகள் மண், மதில்சுவர் இடித்த தூள்கள் எல்லாம் கொண்டுவந்து, நிலத்தை சமமாக நேர் செய்யப்பட்டது.

'பெரியவாளை' நேரில் சந்தித்து, சன்னியாசிகள் வந்தால் தங்குவதற்கு விடுதி ஆசாரமாக இருந்து கோவிலுக்கு வரும் யாத்திரிகர்கள் தங்க, சமையல் அறைகள், நந்தவனம் இன்னும், Store-குழாய். எல்லாம் எங்கெங்கே அமைப்பது என்று தெரிந்து கொண்டு, மற்றய வேலைகளும் ஆரம்பம் ஆயின. ஸ்ரீமடம் பெரிய மேனேஜர், ஸ்ரீமான் விஸ்வனாதய்யர், இன்னும் இரு மடத்து மனுஷ்யாளும் ஒரு தரம் ஸ்ரீசைலம் வந்து, பார்வையிட்டு, ஸ்ரீ பெரியவாளுக்கு விக்ஞாபனம் செய்து கொண்டார்கள். பூராவேலையும் 1964-65-ல் முடிவடைந்தது. இங்கே பிரதிஷ்டை செய்ய வேண்டிய 'சலவை பிம்பங்கள்' காஞ்சியில், ஸ்ரீமடத்தில் தயாராகின்றன.

Secunderabad-ல் சங்கர மந்திர் உதயம்

நிற்க, Hyderabad-Secunderabad பக்தர்கள், ''நீங்கள் கர்நூலில் மடம் கட்டி வந்தீர்களாம் ஸ்ரீசைலத்திலும் கட்டுகிறீர்களாம். இங்கேயும் நாங்கள் ரொம்ப நாளாக ஓர் பொது ஸ்தலம் (சங்கரமடம்) கட்ட எண்ணங்கொண்டுள்ளோம். ஆனால், ஒன்றும் ஆரம்பிக்கவில்லை. நீங்கள் இப்பொழுது ஆரம்பித்தால் நல்லது. நாங்களும் ஒத்தாசை செய்கிறோம் என்றார்கள். அதற்கு நான் 'பெரியவாள்' ஏற்கனவே 1962-ல் அனுக்ரஹித்திருப்பதைச் சொல்லாமல், பிரயத்தனம் செய்வோம்.

Koviloor Digital Library
அதற்கும் ஒரு வேளை வந்தால், 'பெரியவாள்' ஆக்ஞை ஏற்பட்டால் நடக்கும் என்று பட்டும் படாதுமாக சொன்னேன். 'பெரியவாள்' ஸ்ரீசைலம் சங்கர மண்டபம் வேலையை முடித்துவிட்டு ஆரம்பி என்று உத்திரவிட்டிருக்கிற படியால், அப்படிச் சொன்னேன். இருந்தும் 'பெரியவாள்' அனுக்ரஹம் கூடிய சீக்கிரமே ஏற்பட்டுவிட்டது. ஒரு நாள் பங்களுர் ஸ்ரீ கிருஷ்ணபாகவதர் Nov.1964 ஸ்ரீ லக்ஷ்மி நாராயணன் கோவில் சிகன்டிராபாத்தில், சங்கீத உபந்நியாஸம் செய்து கொண்டிருந்தார். நவம்பர் குளிர் காலம் ஆரம்ப காலம். 3 or 4 நாட்கள் உபந்நியாஸம். மறுநாள் உபந்நியாஸம் கேட்க கோவிலுக்குப் போனால், அன்று அங்கு விசேஷம் என்று இடம் கொடுக்கவில்லை. அவசரம் அவசரமாக நமக்கு என்று ஓர் இடம் செய்து கொண்டால் இந்த தொந்திரவு இருக்காதே. நாம் உடனே ஓர் பஜனை மடம் சங்கர மடம் கட்ட ஏற்பாடு செய்ய வேண்டும் என்றார்கள். இதில் அடுத்துள்ள ஓர் சிவன் கோவில் ஏற்பாடு ஆயிற்று. ஸ்ரீமான் சுபஸ்ரீ, ஸ்ரீமான் வேல் நடராஜய்யர் (கண்டராக்டர்) உத்ஸாகம் எடுத்துக் கொண்டார்கள். அப்பொழுது ஏற்கனவே, ஸ்ரீகாஞ்சி பெரியவாள் எனக்கு ஆக்ஞை இட்டிருப்பதை எல்லோருக்கும் எடுத்துக் கூறினேன். இத்துடன் சிகன்ட்ராபாத்தில், ஸ்ரீ சங்கர மடம் ஏற்பட ஸ்ரீ பங்களுர் கிருஷ்ணபாகவதர்கள் ஆசியுடன், சங்கல்பம் செய்து கொண்டோம். ஸ்ரீசைலம் கட்டிட வேலைகளும் சுமாராக முடிந்துவிட்டன. 'பெரியவாள்' வாக்கு வீண்போகுமா!.

சிகண்டராபாத்தில் ஓர் சங்கர மந்திர் உடனுக்குடனே ஏற்பாடு செய்ய வேண்டுமென்ற எண்ணம் ஊடுருவியது. ஓர் கமிட்டி ஏற்பாடு செய்யவேண்டும். அதில் யார் யாரைப் போடுவது என்ற யோசனையில் ஆழ்ந்தேன். யார்யார் சத்விஷயங்களில் ஸ்ரத்தை எடுத்துக் கொள்ளுகிறார்கள். எந்த விதமான influential committee ஏற்படுத்தினால், சங்கர மடம் கட்ட donation வசூல் செய்யலாம் என்றெல்லாம் யோசித்து, நண்பர்களுடன் கலந்து கொண்டேன். 'பெரியவாள்' அடிக்கடி உள்ளூர் வாசிகளை அனுசரித்து செய்ய வேண்டுமென்றும், பக்தர்கள் பிராமணர்கள் மாத்திரம் இல்லாமல் இதரவர்களும் இருக்க வேண்டும் என்றெல்லாம் எனக்கு அடிக்கடி சொல்லியிருக்கிறார்கள். கர்நூல் அனுபவம் வேறு இருக்கிறதே! பத்து பேர்கள் கொண்ட ஓர் கமிட்டி ஏற்பாடுசெய்து, அவர்களை 'ஸ்ரீகாஞ்சி காமகோடி சங்கர மந்திர்' trust மெம்பர்களாக செய்யலாமென்றும்: அந்த நபர் ஒவ்வொருவர்களுடைய தொழில், குணம், ஆஸ்திகத்தில்

Koviloor Digital Library



Adi Sankara Bagwat Pada and His four disciples

Koviloor Digital Library

Koviloor Digital Library

ஈடுபட்டவர்களாகவும் இருப்பதையெல்லாம் ஸ்ரீ மடத்துக்கு விக்ஞாபனம் செய்து கொண்டேன். 'பெரியவாள்' அதை அங்கீகரித்து மெம்பர்களை 'Nominate' செய்து அனுப்பினார்கள். அதற்கு வேண்டிய Rules & Regulations & objectives எல்லாம் நகல் எழுதப்பட்டது. அந்த trust மெம்பர்களின் பெயர் விவரம்.

(1)	Sri. V. நரஸிம்ம அய்யர், Chartered Accountant & Auditor	-	President
(2)	Sri. P.K. முத்துசாமி அய்யர், Engineer Contractor	-	Executive Member
(3)	Sri. A. S. Murthy Auditor	-	Treasurer
(4)	Sri. A.L. Krishnamurthy A.G. Office		
(5)	Sri. A.J. Veeraswamy	-	Hon Secretary Keys Girls High School
(6)	Sri. C.V.K. Srinivasalu	-	merchant banker
(7)	Sri. T.K. Shamu,	-	Industralist
(8)	Sri. P. Natarajan	-	Contractor
(9)	Sri. R. Padmanabhan	-	GEC manager
(10)	Sri. P.C.Mehta,	-	Automobile merchant.

இந்த ஏற்பாடுகள் செய்து Trust Deed எல்லாம் Register செய்ய 15th March 1965 ஆய்விட்டது. இதில் குறித்த சில மெம்பர்கள் ஒவ்வொருவரும் ரூ.1000/= நன்கொடை கொடுத்தார்கள். வேறு பிரமுகர்களும் 'donation' கொடுக்க ஆரம்பித்தார்கள்.

Koviloor Digital Library

எனினும் பணம் சேகரிக்க வேண்டிய அவசியம் உள்ளூர எழும்பிக் கொண்டே இருந்தது. மெட்ருஸில் நடப்பது போல், பெரிய பேர் போன உபந்நியாஸம் செய்பவர்களை அழைத்து, 10 to 15 நாட்கள் கதாகாலக்ஷேபம் ஏற்பாடு செய்தால் பணம் வசூலிக்க ஏதுவாக இருக்குமென்று யோசித்தோம். ஸ்ரீ திருமுருக கிருபானந்த வாரியாரை அழைத்து வந்து ராமாயண பிரவசனம் செய்ய முடிவு செய்தோம்.

ராமாயண விழா கமிட்டி ஏற்பாடு

10-1-1965: இதை ஒட்டி நம் ஆத்தில் கூட்டம் கூடி பேசி, ''ராமாயண festival'' கமிட்டி என்று புதிய கமிட்டி உண்டாக்கினோம். இங்கே பல சபைகள், ஆஸ்திக சபா, ஆடிகிருத்திகை லக்ஷார்ச்சனை சபா, பஜனை சபா, ஸ்ரீ ராம நவமி Committee, இப்படியெல்லாம் பல சபைகள் இருந்ததால், ஓர் புதிய சபை பேர் கொடுத்த, ஒவ்வொரு சபையிலிருந்தும் உத்ஸாகமாக உள்ளவர்களையெல்லாம் இதில் சேர்த்து 'Ramayana Festival Committee ஏற்படுத்தினோம். இதன் முக்கிய நோக்கம் என்ன வென்றால், ஸ்ரீ சங்கர மந்திர் கட்டிடத்தை உத்தேசித்து, donation, souvenir முதலிய போட்டு, நிரம்ப பணம் வசூலித்து சிலவுகள் போக பாக்கித்தொகையை, அப்படியே ஸ்ரீசங்கர மந்திர் நிர்வாக கமிட்டியிடம் கட்டிடம் கட்ட கொடுத்துவிடவேண்டும். ஸ்ரீ மான் A.K. சுப்ரமணிய பிள்ளை (Income-tax Officer, Hyderabad) திருமுருக வாரியாருக்கு ரொம்ப வேண்டியவர். அவர்மூலம் பேசி 'ஸ்ரீமான் வாரியாரை' வரவழைக்க தேதியும் ஏற்பாடாயிற்று.

பெரியவாளின் பரம கருணையால் திருமுருக கிருபானந்த வாரியார் வருகை

அவ்வமயம் நான் மெட்ருஸ் சென்றேன். ஸ்ரீ வாரியாரை வீட்டில், சந்தித்து பேசினேன். பிறகு அவர் உபந்நியாஸத்தையும் Mylapore-Venus Colony போய் கேட்டு திருப்தி கொண்டேன். அதுவரை அவர் சொற்பொழிவை நான் கேட்ட ஞாபகமில்லை. காஞ்சி சென்று எல்லா விவரங்களும் பெரியவரிடம் கூறி உத்திரவு பெற ஆவல் கொண்டேன். பெரிய மேனேஜர் ஸ்ரீ விஸ்வ நாதய்யரிடம் விஷயங்களைக் கூறினேன். 'சங்கரமடம் புதுப்பித்தாலும் சரி, புதிதாக கட்டினாலும் சரி , பக்தர்களிடம், அன்போடு பணம் அல்லது எது கொடுத்தாலும் சரி நன்கொடை வசூலித்து கட்டவேண்டும். உபந்நியாஸங்கள் செய்து சம்பாதித்து கட்டுவதை பெரியவாள் இஷ்டப்படவில்லை. சமீபத்தில் காசி

Koviloor Digital Library

மடம் சம்பந்தமாக யாரோ வந்து கேட்டதற்கு இந்த அபிப்பிராயத்தை பெரியவாள் தெரிவித்தார் என்றும், ஆனால் உங்கள் விஷயத்தில் பெரியவாள் என்ன சொல்வாரோ போய் கேளுங்கள் என்றார் மனம் கலங்கி விட்டேன். ஏனென்றால், எல்லா ஏற்பாடுகளும் ஆய்விட்டது. 'நோட்டீஸ்'கள் போட்டு, பத்திரிகைகளிலும், ஸ்ரீமான் வாரியார் வருகையை பிரபலப்படுத்தியிருந்தோம். 'சரி, பெரியவாளிடம் நான் விக்ஞாபனம் செய்து கொள்கிறேன். நீங்களும் பக்கத்தில் இருங்கள்' என்றேன். இரவு பூஜை பெரியவாள் செய்து கொண்டிருந்தார். 'பூஜை' முடிந்து பிரஸாதம் கொடுக்கும்போது என்னை உத்திரவிட்டிருக்கிறார். நான எங்கேயோ பேசிக் கொண்டிருந்தவன் மேடை போகுமுன் 'பெரியவாள்' இறங்கி உள்ளே போய்விட்டார். அவருக்கு ஒரே அசதி, உள்ளே வந்து மச்சுப்படி கவானுக்கு அடியில் உட்கார்ந்து சாய்ந்து கொண்டார். நானும் மேனேஜரும் அங்கே சென்றோம். 'பெரியவாள்' பேசுவதற்கு முன் கூட்டியே, நான் என் விக்ஞாபனத்தை ஆரம்பித்து விட்டேன்.

''ஸ்ரீகாஞ்சி காமகோடி சங்கர மந்திர்'' trust பெரியவாள் அனுக்ரஹித்த பிரகாரம் ஆரம்பம் செய்து விட்டோம். கமிட்டி அமைத்து, donation கள் பக்தர்களிடம் வசூலிக்க ஏற்பாடு செய்து வருகிறோம். அங்கே தமிழர்கள் ஆயிரக்கணக்கில் இருக்கிறார்கள். ஆஸ்திகம் வளர 'சநாதன தர்மத்தில்' மனம் போக, மெட்றாஸ் முதலிய இடங்கள் போல், பெரிய பண்டிதர்கள் உபந்நியாஸகர்கள் சிகண்ட்ராபாத் வந்து சொற்பொழிவு செய்வதில்லை. வரவர தமிழர்கள் குடும்பம் அதிகமாய் கொண்டு வருகிறது. ஆகையால் அடிக்கடி வித்வான்களை வரவழைத்து உபந்நியாஸங்கள் கதாகாலக்ஷேபம் செய்ய வேண்டி தொடர்ந்து 'ராமாயண விழா கமிட்டி என்று ஏற்படுத்தியிருக்கிறோம். அதில் பல சபைகளிலுமிருந்து அங்கத்தினர்கள் சேர்த்திருக்கிறோம். அந்தக் கமிட்டியிலும் நான் முக்கியமாக இருக்கிறேன். இந்தக் கமிட்டியின் முக்கிய நோக்கம் என்னவென்றால், Hyderabad-Secunderabad ஆஸ்திக மக்கள் சத்விஷயங்களில் ஈடுபட, ஈஸ்வர வழிபாடுகளில் ஈடுபட தமிழ் நாட்டிலிருந்து பேர்போன அதாவது உபந்நியாஸத்திலும் கதாகாலக்ஷேபத்திலும் பிரபலமாக உள்ள பெரியோர்களை கூட்டி வந்து 10 நாட்கள், 15 நாட்கள் தொடர்ந்து பிரவசனம் செய்ய ஏற்பாடு செய்யவும், அதற்கு முன் கூட்டியே அவர்கள் வருகையை நன்றாக விளம்பரம் செய்தும், முக்கியபட்டவர்களிடம் போய் donation வசூல்

Koviloor Digital Library

செய்வதென்றும்,ஓர் Souvenir அச்சடித்து வெளியிடுவது (அதில் advance பணம் வசூலிப்பதும்) போன்ற முறைகளை கடைபிடித்து, எல்லா சிலவுகளும் பணம் சேகரிக்க வேண்டியது. அந்த ஒவ்வொரு 'ராமாயண விழா' நடந்து முடிந்ததும், சிலவுகள் போக, பாக்கி இருக்கும் பணத்தை அப்படியே, ஸ்ரீசங்கர மடம் கட்டுவதற்கு donation ஆக கொடுத்து விட வேண்டும். இப்படி வருஷா வருஷம் 1 or 2 பெரிய பண்டிதர்களின் உபந்நியாஸம் ஏற்பாடு செய்து, ஸ்ரீ சங்கர மந்திர் கட்டிடம் கட்ட துகை சேர்க்க வேண்டும். முதல் முதலாக ஸ்ரீ திருமுருக கிருபானந்த வாரியாரைக் கொண்டு 'ராமாயண பிரவசனம்' 15 நாட்களுக்கு Secunderabad-ல் செய்ய ஏற்பாடு செய்துள்ளோம். அவரும் ஒத்துக் கொண்டு விளம்பரங்கள் செய்ய ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. எல்லாம் நல்லபடியாக நடக்க வேண்டி 'பெரியவாள்' அனுக்ரஹம் செய்ய வேண்டும்...' என்று விக்ஞாபித்துக் கொண்டேன்.

நான் பேச ஆரம்பித்த கொஞ்ச நிமிடங்களிலேயே 'பெரியவாள்' அசதியின் காரணமாக, கண்ணை மூடிக் கொண்டு, சாய்ந்த படியே இருந்தார். மேனேஜர் ஓர் 10 நிமிடம் நின்று விட்டு, 'நீங்கள் கொஞ்ச நேரம் அங்கேயே இருந்துபார்' என்று சொல்லி போய்விட்டார். 'பெரியவாளிடம்' விக்ஞாபனம் செய்துவிட்டு, பதிலைத் தெரிந்து கொள்ளாமல் எப்படிப் போவது. இன்னும் 10 நிமிஷம் நின்று கொண்டே இருந்தேன். 'பெரியவாள்' கொஞ்சம் அசதியிலிருந்து தெளிவாகி, சற்று நிமிர்ந்து உட்கார்ந்து, ''கிருபானந்த வாரியாரைக் கொண்டு ஆரம்பிக்கப் போகிறாயா? . . .'' என்றார். என்ன ஆக்ஞை பிறக்குமோ என்ற பயத்துடன், 'ஆமாம் எல்லா ஏற்பாடுகளும் நடந்து கொண்டிருக்கிறது' என்றேன். பெரியவாள் 'சரி-நடத்து' என்று சொல்லி, 'பிரஸாதங்கள்' கொடுத்தார். நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. மேனேஜரிடம் ஓடிவந்து, சிரித்துக் கொண்டே 'பழம்' என்றேன். அவரும், உங்கள் விஷயம் என்றால் பெரியவாள் அன்பே தனியென்று சொல்லி, சௌக்கியமாக போய் வாருங்கள் என்றார்.

ஸ்ரீ திருமுருக கிருபானந்த வாரியாரின் சங்கீத உபந்நியாசம்

ஸ்ரீ பெரியவாள் அனுக்ரஹத்துடன் மார்ச்சு மீ 1965ல் 15 நாட்களும், Keys High School Secunderabad, open air வெளியில் எப்பொழுதும் இந்த twin cities-ல் நடந்திராத சிறந்த முறையில்

Koviloor Digital Library

'ராமாயண' சொற்பொழிவு, ஸ்ரீ திருமுருக கிருபானந்த வாரியார் செய்தார் முதல் நாள் கவர்னர், ஸ்ரீமான் பட்டம் தானுப் பிள்ளையும் அவர் மனைவியும் விழாவைத் திறந்து வைத்தார்கள். ஒவ்வொரு நாளும் ஒவ்வோர் மந்திரி அல்லது பெரிய தலைமை ஆபிஸர்கள், ஒரு நாள் Central Govt மந்திரி, ஸ்ரீ மான் C. சுப்ரமணியம் எல்லோரும் வந்து பங்கு கொண்டு எங்களை ஆதரித்தார்கள். தேர் திருவிழா மாதிரி கூட்டம் Keys High School-ல் தினம்.' ஆயிரக்கணக்கில் ஆஸ்திகர்கள் வந்து கேட்டு மகிழ்ச்சி அடைந்தார்கள். சில முக்கிய நாட்களில் 3000 பேர்கள் கொண்ட கூட்டம் நடந்தது. 'Souvenir' வெளியிடுவதிலும், advertisement மூலம் நிறைய பணம் கிடைத்தது. சுமார் ரூ. 20,000/= க்கு மேல் வசூலான பணத்தை, செலவுகள் போக பாக்கி பூராவும், ஸ்ரீ சங்கர மந்திர் கட்டிட கமிட்டி Donation ஆகக் கொடுத்துவிட்டோம். இந்த முதல் முதலாக நடந்த 'ராமாயண விழா'வைப்பற்றி விவரம் எழுதுவதென்றால, எவ்வளவு பக்கமும் போதாது. நான், எனது பையன்கள்,பெண்கள் குடும்பமே, நம் ஆத்து கல்யாணம் மாதிரி பங்கு எடுத்து உழைத்தார்கள். எங்களுடன் முக்கியமாக ஸ்ரத்தையுடன் கைகொடுத்து உழைத்தவர், ஸ்ரீமான் சுபஸ்ரீ, ஸ்ரீமான் R-பார்த்தசாரதி (TVS Co.,) ஸ்ரீமான் வேல் நடராஜய்யர் (contractor), ஸ்ரீமான் மாமா கிருஷ்ணமூர்த்தி (Rly Dept.) இன்னும் ஏராளமான Volunteers. நட வடிக்கைகள் Photo உள்பட தினம் 'Deccan chronicle' பத்திரிகையில் விவரமாக வந்து கொண்டிருந்தன. ஸ்ரீ வாரியருக்கு Keys High School-லிலேயே ஓர் தனி விடுதி ஏற்பாடு செய்திருந்தோம். அவர் தினமும் ஸ்ரீ முருகனுக்கு அபிஷேக, அலங்கார நைவைத்தியத்துடன் செய்த பூஜைகளையும் பக்தர்கள் காலையில் தினம் பார்த்து இன்பம் அடைந்தார்கள். ஸ்ரீ கிருபானந்த வாரியார் Party, ஐ தினம் ஒவ்வொரு பக்தர்கள் வீட்டுக்கு அழைத்துப் போய் விருந்தாளியாக வைத்துக் கொண்டார். ஸ்ரீ கிருபானந்த வாரியார் - 'இது மாதிரி அன்பும் ஆதரிப்பும் இதுவரை தனக்கு ஏற்பட்டதில்லை' என்று அவருடைய நன்றியை தெரிவித்துக் கொண்டார்.

ஸ்ரீ சைலம் வேலைகள் முடிவு-சலவைக்கல் பிம்பங்கள் வருகை

ஸ்ரீ சைலத்தில் வேலைகள் பூராவும் கிட்டத்தட்ட முடிந்துவிட்டன. Compound wall நந்தவனம், ரோடை ஒட்டி இருக்கும் தேவஸ்தானத்தைச் சேர்ந்த யாத்ரிகா மண்டபம் பின் சுவர் சீர்திருத்தம் முதலிய சின்ன வேலைகள் பாக்கி. ஸ்ரீமான் S. சாம்ப மூர்த்தி சாஸ்திரிகள்,

Koviloor Digital Library

ஸ்ரீ சைலத்தில் தங்கி, முடியும் வேலைகளை நேரிலே பார்வை இட்டுக் கொண்டிருந்தார். நான் 'பெரியவாள்' எல்லா கட்டிடம் அமைந்திருக்கும் plan களைப் போட்டு, மேல்கொண்டு நந்தவனம் போகும் வழி entrance, கிணற்றுப் போகும் வழி, முன்னால், Main அமைப்பு முதலிய விவரங்களுக்கு உத்திரவு கேட்டிருந்தேன். ஸ்ரீமடத்திலிருந்து என்னையும், ஸ்ரீமான் சாம்ப மூர்த்தி சாஸ்திரிகளையும் முகாம் வரும்படி 'தந்தி' வந்தது. எதற்கென்று ஒன்றும் புரியவில்லை. உடனே ஸ்ரீமடம் முகாம் சென்று பெரியவாளை தரிசித்தேன். சட்டென்று ''தென்மேற்கில் கிணற்றுக்கு வழியென்று லெட்டர் எழுதியிருக்கிறாயே, அங்கு எங்கே கிணறு இருக்கிறது'' என்றார் பெரியவாள். உடனே நான் செய்த தப்பு புரிந்துவிட்டது. '''வடமேற்கு' என்பதற்கு தவறுதலாக எழுதி விட்டேன்'' என்று தாழ்மையுடன் தெரிவித்தேன். அதே போல் மற்றொரு தவறையும் எடுத்துக் காட்டினார். 'எவ்வளவு யோசித்தும் சரியா புரியவில்லை. - அதான் தந்தி கொடுத்து வரச் சொன்னேன்' என்றார். நேரிலேயே பாக்கி வேலைகளுக்கு உத்திரவு பெற்றுக் கொண்டு புறப்பட்டேன்.

20-1-1966: காஞ்சியிலிருந்து பெரியவாள் ஆக்ஞைப்படி telephone செய்வதாக, ஸ்ரீமான் நீலகண்டய்யர் (B.G. Paul & Co.,) எனக்கு Hyderabad பேசுகையில், இன்று காலை ஓர் லாரி, 'ஸ்ரீ ஆதி சங்கரர் 4- சிஷ்யர்கள்' சலவை பிம்பங்களுடன் காஞ்சியில் புறப்பட்டு விட்டது. இன்று சாயந்திரம் ஸ்ரீ சைலம் வந்து சேரும். நீங்கள் நேரில்போய், பிம்பங்களை இறக்கி, மண்டபத்தின் மேல் 'பிரதிஷ்டை' செய்யும் இடத்தில் நாளை வைக்க வேண்டியது (நல்லநாள்) என்றார். நானும் ''சரி, இப்பொழுதே காரில் புறப்பட்டுப் போகிறேன். பெரியவாளுக்கு தெரியப்படுத்தவும்'' என்றேன்.

அன்று ராமச்சந்திர புரத்தில் BHEL-ல் நான் Contract வேலைக்கு ஓர் Tender கொடுக்க வேண்டும். இப்பொழுது ஸ்ரீசைலம் போக வேண்டி வந்தால், Tender Rate ஐ ஆத்திலேயே எழுதிவிட்டு, 'Tender Deposit' பணமும் ஏற்பாடு செய்து விட்டு, என்னுடன் வேலை செய்யும் இன்ஜினியர் இடம் கொடுத்து விட்டு, காரில் ஸ்ரீ சைலம் புறப்பட்டேன். சுமார் 3 மணிக்கு ஸ்ரீ சைலம் போய், ஸ்ரீமான் சந்நியாசய்யாவை சந்தித்து, விவரங்கள் கூறி, சலவை பிம்பங்கள் ரொம்ப பலுவானதால், Project authorities இடம் போய், ஓர் Crane கொண்டு வரவேண்டும். நாளை காலை

Koviloor Digital Library

குறிப்பிட்ட படி, மண்டபத்தில் பிம்பங்களை நேரிலேயே லாரியிலிருந்து ஏற்ற வேண்டுமென்றேன். எனக் கென்னவோ, இந்த வேலை மிகவும் சிரமமாகப்பட்டது. ஒரே விசாரமாக இருந்தது. அவர், ஸ்ரீ சந்நியாஸய்யா, லாரி வரட்டும். பின் ஏற்பாடு செய்யலாமென்று சாவகாசமாக பதில் சொன்னார். என் மனது கஷ்டமாக இருந்தது. லாரி தாமதமாக வந்தால், இரவில் Crane போய் கேட்டு எப்படி கொண்டு வருவது என்றேன். எப்படியோ Crane இல்லாமலே ஏற்பாடு செய்யலாம். முதலில் லாரி வரட்டும் என்றார். இரவு வெகு நேரம் லாரியில் எதிர்பார்த்தும் லாரி வரவில்லை. மறுநாள் 'அமாவாசை' காலையில் போய் 'பாதாள கங்கையில்' ஸ்நானம் செய்து 'அமாவாசை' தர்ப்பணங்களை முடித்து சீக்கிரமே லாரி வருவதற்குள் வந்து விடவேண்டுமென்று, ஸ்ரீ சந்நியாஸய்யாவையும் என்னுடன் வரும்படி கேட்டுக்கொண்டேன். ஆனால் இந்த ஊரில் சாஸ்திரிகள் ஒருவரும் கிடைக்காதே என்றேன். சரி எப்படியோ செய்வோம், என்றார். இரவு 11-மணிக்கு ஸ்ரீ சந்நியாஸய்யா என் விடுதி வந்து, 'ஸ்ரீ சிங்கேரி மடத்தைச் சேர்ந்த முதல் 'பண்டிதர்' சாஸ்திரிகள் வந்திருக்கிறார். இப்பொழுது நான் வந்தாராம். அவரையும் அழைத்துப் போவோம், என்றார். எனக்கு ஏற்பட்ட சந்தோஷத்துக்கே அளவில்லை. 'குருநாதா - இது யாருடைய கிருபை, அப்பா' என்று மனம் பூரித்தேன். மறுநாள் எல்லோரும் 'பாதாள கங்கை' ஸ்நானம் செய்து, சிருங்கேரி மடத்து கனபாடிகள், முறைப்படி சாவகாசமாக மந்திரங்கள் சொல்லி செய்வித்து, தர்பணகாரியங்களை நடத்தி வைத்தார். பாதாள கங்கையில் அமாவாசை நன்னாளில் ஸ்நானமும்-தர்பணமும் ஏற்படுமென்று telephone வருவதற்கு முன் சொப்பனத்திலாவது நினைக்க முடியுமா. Secunderabad-ல் ஆத்தில் அமாவாசை நாள் வாத்தியார் வரமாட்டார். அவர்களுக்கு பல ஜோலி. புஸ்கத்தைப் பார்த்து, ஏதோ தர்பணத்தை முடித்தோம் என்ற மனதிருப்தி நடந்திருக்கும். பெரியவாளின் அபூர்வ கிருபையால் ஒரு பெரும் புண்ணியத்தை அடைந்தேன்.

அன்று சுமார் 10-00 மணிக்குத் தான் லாரி வந்தது. ஒரு விதத்தில் சந்தோஷம். உடனே மனசு கவலை. இவ்வளவு பெரிய இடை உள்ள பிம்பங்களை எப்படி மண்டபத்தில் ஏற்றுவதென்று. லாரியில் சிலையை செதுக்கின சிற்பியும் கூட வந்திருந்தான். அவர்கள் யோக க்ஷேமங்களை விஜாரித்து விட்டு, 'உங்களிடம் என்ன சொல்லி அனுப்பினார்கள். ஏதாவது லெட்டர் கொடுத்திருக்கிறார்களா? என்றேன். அதற்கு சிற்பி பதில் சொன்னார். 'அங்கே Hyderabadலிருந்து முத்துசாமி அய்யர்'

Koviloor Digital Library

என்பவர் வந்திருப்பார். அவரிடம் எல்லா பிம்பங்களையும் வெகு ஜாக்கிரதையாக இறக்கி, மேற்கு பக்கம் கட்டியிருக்கும் ரூமில் வைத்து, யாரும் பார்க்காமலும், கல்லுகில்லு விட்டெறியாமல் இருக்கும் படியாக பந்தோபஸ்து செய்து, ரூமைப் பூட்டி விடவேண்டும். யாரும் உள்ளே போக அனுமதிக்கப்படக் கூடாது என்றார்கள்''. 'அப்பாடா' என்று பெருமூச்சு விட்டேன். 'ஆமாம், ஏன் டெலிபோனில் மண்டபத்தின் மேல் இறக்கி வைக்க வேண்டுமென்று சொன்னார்கள் என்றேன். ஆமாம் காஞ்சியில் முதலில் அப்படித்தான் எங்களுக்கும் சொன்னார்கள். ஸ்ரீமடம் முகாம் கிளம்பி விட்டாயிற்று. 'லாரி' மெட்ராஸ் நோக்கி வருகையில், முதலில் 'புது பெரியவாள்' சந்தித்தோம். ஸ்ரீ சைலம் போய் கொண்டு இருக்கும் விவரம் தெரிவித்தோம். 'சரி-ஜாக்கிரதையாகப் போங்கள். அங்கே முத்துசாமி அய்யரை வரச் சொல்லியிருக்கிறது. அவர் எல்லாம் கவனித்துக் கொள்வார்' என்று ஆக்ஞாபித்தார். புது பெரியவாள் சற்று தூரம் போனவுடன் 'பெரியவாள்' சந்தித்தோம். அவரிடமும், ஸ்ரீசைலம் போய் கொண்டு இருக்கும் விஷயம் விக்ஞாபித்தோம். அவர் சற்று நிதானமாக, 'அதை எங்கே இறக்கப் போகிறீர்கள்' என்றாளாம். பதிலையும் எதிர்பாராமல், பிம்பங்களை மண்டபத்தின் மேல் வைக்க வேண்டாம். அங்கே Hyderabad முத்துசாமி அய்யரிடம் சொல்லி, மேற்கு இருக்கும் 2 ரூம்களில் ஒன்றில், ஜாக்கிரதையாக வைத்து, ஜன்னல்களை அடைத்து, யாரும் பார்க்க முடியாத படி பந்தோபஸ்தும் செய்து, பூட்டி வைத்து விடச் சொல்லவும்' என்று சொல்லி, அனுக்ரஹித்தார்களாம். ஆகவே பெரியவாள் ஆக்ஞைப்படி ஐந்து பிம்பங்களையும் வெகு ஜாக்கிரதையாகவே இறக்கி, ரூமில் பந்தோபஸ்தாக வைத்து, பூட்டி விட்டோம். எனக்கு ரொம்ப சந்தோஷமும் திருப்தியும் ஏற்பட்டது. மண்டபத்தில் நல்ல ஏற்பாடுகள் இல்லாமல், அவசரப்பட்டு ஏற்றுவதென்றால் சாமான்ய காரியம் இல்லை பொறுப்பு அதிகம். ஏதாவது ஒரு பாகத்தில் பிம்பங்களும் பின்னம் (breading) ஏற்பட்டால், என்ன செய்ய முடியும். பெரியவாள் அனுக்ரஹத்தால் எல்லாம் நல்லபடியே நடக்கும் என்ற தைர்யம் இருந்தாலும், வேலை செவ்வனே முடியும் வரை ஓர் மனவேதனையும் விசாரமும் இருக்குமல்லவா? மேலும் மண்டபத்தின் மேல் இறக்க வேண்டிய (அதாவது பிரதிஷ்டை செய்யவேண்டிய இடத்தில்) இடத்தில் இப்பொழுது 'பெரிய-பெரிய சலவைக்கல் பிம்பங்களை' இறக்கி வைத்தால், பிம்பங்கள் கட்டவேண்டிய மேடைகள் எப்படி கட்டுவது என்ற ஓர் கஷ்டம் ஏற்படும். எல்லாவற்றையும் நமது குருநாதர்

Koviloor Digital Library

எவ்வளவோ மைல்களுக்கு அப்பாலிருந்தே முடிவு செய்து எங்கள் எல்லோருக்கும் மன நிம்மதியைக் கொடுத்து அருளினார். இந்த ஸ்ரீ சைலம் Visit ஐ பயன்படுத்த , நானும் ஸ்ரீமான் சந்நியாஸையாவும் மண்டபத்தின் மேல் ஒவ்வொரு பிம்பங்கள் வைக்க வேண்டிய மேடைகளுக்கு நீளம், அகலம், உயரம் (angle) எல்லாம் mark செய்தோம். அது பிரகாரம் கட்டச் சொல்லிவிட்டு மறுநாள் நான் Hyderabad திரும்பிவிட்டேன். இனி ஸ்ரீசங்கரப் பிரதிஷ்டை செய்ய வேண்டிய ஓர் முக்கிய காரியமே பாக்கி. 'பெரியவாள்' அந்த வருஷமே ஸ்ரீசைலம் பிரதிஷ்டை செய்து விடலாமென்று நினைத்தார் போலும். ஆனாலும்,நன்கொடை ரூ.10,000/=க்கு மேல் கொடுத்த ஸ்ரீமதி சுஜாதம்மா, Nellore, 'பிரதிஷ்டை' பெரியவாள் கையால் செய்ய வேண்டுமென்று பிரார்த்திக் கொண்டு, அதுவரை ஒன்றும் அவசரமில்லை என்று விக்ஞாபனம் செய்து கொண்டார்களாம்.

சிகண்ட்ராபாத் சங்கரா மந்திர் கட்ட சர்க்கார் உதவி

நிற்க, சிகண்ட்ராபாட் ஸ்ரீ சங்கர மந்திர் கட்டுவிக்க முதலில் இடம் தேவையல்லவா! Govt. or Municipal corporation சொந்தமான நிலம் ஏதாவது இருந்தால், விலையில்லாமல் கிடைக்குமே என்று பிரயத்தனம் செய்தேன். ஒரு வருஷமாக ஸ்ரீமான் K.N. அனந்தராமன், Chief Secretary. அவர்களின் உதவியால் பிரயத்தனம் செய்து Sardar Patel Road, Secunderabad-ல் சுமார் 500 கெஜம் உள்ள ஓர் ' காலி மனை கிடைத்தது. நாங்கள் கேட்ட பூராமனை' 1200 கெஜம், ஆனால் சரி பாதிதான் கொடுக்க ஒத்துக் கொண்டார்கள். Estate Officer இடமிருந்து 3-2-1966 லெட்டர் வந்தது. 25-3-1966 Sub-Registrar Office-ல் Lease land, பத்திரம் ரிஜிஸ்தர் செய்யப்பட்டது. பணம் வசூலிக்க வேண்டுமே. 'பெரியவாள்' அனுக்ரஹத்துடன், மறுபடியும், ஸ்ரீமான் K.V. சந்தான கோபாலாசாரியார் ஸ்வாமியை, '15 நாட்கள் 'ஸ்ரீ மத்பாகவதம்' சொற்பொழிவு செய்ய ஏற்பாடுகள் செய்து; 20-2-66 முதல், 6-3-66 வரை விழா நல்ல முறையில், ஆயிரக்கணக்கான பக்தர்கள் முன்னிலையில் நடைபெற்றது. ஒவ்வொரு நாளும் ஒவ்வோர் பெரிய பதவி உள்ளவர்கள் வந்து Chief guest ஆக இருந்து பெருமை அளித்தார்கள். கமிட்டியின் தீர்மானம் போல் சிலவு போக பாக்கி பணத்தை ஸ்ரீ சங்கர மந்திர் கட்டிடம் கட்ட donation ஆகக் கொடுத்தோம். ஸ்ரீமான் சந்தான கோபாலாசார்யார் நமது ஸ்ரீ ஆச்சார்யாளிடம் மிகவும் பக்தி கொண்டவர்.

Koviloor Digital Library

சிறு வயதிலேயே நல்ல முறையில் வேதங்களைக் கற்றதற்கு, 'பொன் தோடா' ஸ்ரீ காஞ்சி பெரியவாளிட இருந்து அனுக்ரஹம் பெற்றவர். செண்ட்ரா பாத சங்கர மந்திர் கட்டிடம் கட்ட தானும் பிரயாசைப் பட வேண்டுமென்ற அன்பினால், ஏதும் பிரதிபலனை எதிர்பாராமல் (இலவசமாகவே) இந்த 15 நாட்கள் சொற்பொழிவு ஆற்றி எங்களுக்கு ஊக்கமளித்த மிகவும் போற்றத்தக்கதே!

சங்கர ஜயந்தி விழுப்புரம் - Chief Minister & Chief Secretary க்கு அழைப்பு

7-4-66 எதிர்பாராமல், ஸ்ரீமடம் பாண்டிச் சேரி முகாம்லிருந்து எனக்கு trunk-call வந்தது. அதாவது 24.4.66 விழுப்புரத்தில் நடத்த இருக்கும் Special Sankara Jayanthy Chief Minister ஸ்ரீ மான் பிரம்மானந்த ரெட்டியையும், Chief Secretary ஐயும், அங்கே நேரில் வந்து தரிசித்துப் போகும் படி, பெரியவாள் அபிப்ராயத்தை (invitation) ஐ என் மூலம் நேரில் போய் அவர்களை அழைக்கச் சொன்னார்கள். மறுநாள் ஸ்ரீ மடத்து சார்பாக மாயவரம் ஸ்ரீமான் ராமமூர்த்தி என்பவரிடம் 'பிரஸாதம்' கொடுத்தனுப்பி, 'நீ போய் முத்துசாமி அய்யரைப் பார். அவர் எல்லா ஏற்பாடும் செய்திருப்பார், என்ற ஆக்ஞையுடன் அனுப்பிவைத்தார்கள். நானும் இவரும் போய் Chief Secretary Sri: K.N. அனந்தராமனையும் அழைத்துவிட்டு, Chief Minister, ஸ்ரீமான் பிரம்மானந்த ரெட்டியையும், 'பிரஸாதம்' கொடுத்து, பெரியவாள் அபிப்ராயம் தெரிவித்தோம். அவர்கள் தம்பதி சமேதமாய் பிரஸாதங்களை விநயத்துடன் பெற்றுக்கொண்டு, சில apple பழங்களைக் கொடுத்து, '' இதை என் அன்பளிப்பாக பெரியவாளுக்குக் கொடுக்கவும். நான் விழுப்புரம் வர பிரயத்தனம் செய்கிறேன். கொஞ்சம் முக்கிய அலுவல்கள் இருக்கு. எனது நமஸ்காரங்களை இரு பெரியவர்களுக்கும் தெரிவிக்கவும் என்றார்.

பெரியவாள் என்னை காளஹஸ்தி வரும்படி 'தந்தி' மூலம் அழைப்பு

30-8-1966: 'His Holiness desires your presence here to-morrow'-என்று ஸ்ரீ காளஹஸ்தி முகாமிலிருந்து பெரியவாள் அனுப்புவித்த 'தந்தி' கிடைத்தது. நான் வேலை விஷயமாய் வீட்டை விட்டுப் போய் சாயந்திரம் திரும்பி, telegram பார்ப்பதற்குள், ரயிலும் சரி, ஏரோபிளேனும் சரி, எல்லாம் Madras போய் விட்டது. மறு நாள் காலை 'Plan'e ல் புறப்பட்டு மெட்ரூஸ் போனேன். அன்றே போய் பெரியவாளை தரிசிக்க வேண்டுமே. நண்பரிடம் Car இருக்கிறது.

Koviloor Digital Library

கேட்கலாம் என்று போனேன். அவரும் ஊரில் இல்லே. பஸ்ஸில மெட்ரூஸிலிருந்து புறப்பட்டேன். நேர் பஸ் கிடையாது. எங்கேயோ இன்னொரு பஸ் மாறி, இரவு 9.30 மணி சுமாருக்கு ஸ்ரீ காளஹஸ்தியில், ஸ்ரீமடம் முகாம் போய் சேர்ந்தேன். ஸ்ரீமான் S. சாம்பமூர்த்தி சாஸ்திரிகள் முதலில் நேரே தென்பட்டார். இதோ வந்து விட்டாரே, Hyderabad முத்துசாமி அய்யர் என்று அன்புடன் என்னே வரவேற்ருர். HH. பெரியவாள் அங்கேயே தான் இருக்கும் அறைக்கு போய் ஒய்வு எடுத்துக் கொண்டிருக்கும் ஆரம்ப சமயம்! உடனே ஸ்ரீமான் சாஸ்திரி பெரியவாளிடம், நான் வந்திருப்பதை விக்ஞாபனம் செய்தார். பெரியவாள் ''காலேயில் பார்க்கலாம்-புது-பெரியவாளேப் பார்த்து பேச்சச் சொல் '' என்ருராம். 40-50 அடி அப்பால் ஓர் விடுதியில் புது-பெரியவாள், ஏதோ Tape-record வைத்துப் பார்த்துக் கொண்டிருந்தார்.வந்தனம் செய்தேன்-புன் முருவலுடன் வரவேற்று உட்காரச் சொன்ஞர். ஏதோ பல விஷயங்கள் பேசிய பிறகு,''ஆகம. சிற்ப-சாஸ்திர-கலே' சதஸ் 'காளஹஸ்தியில்' இந்த வருஷம் பெரிய Programme-க்கு (in a grand scale) நடத்துவதாகவும், Hyderabad ல் முக்கியமாக உள்ள உங்களுக்கு இந்த விஷயம் தெரியப்படுத்தி அங்கே யார் யாரை பார்த்து ஏற்பாடு செய்ய வேண்டுமோ-(சதஸ் நடத்த ஆதரவு அளிப்பவர்.) அது விஷயமாகவே உங்களே வரவழித்தோம் என்று தெரியப்படுத்திஞர். 'அதற்கென்ன,என்ன ஏற்பாடு செய்ய வேண்டுமோ,அவைகளையெல்லாம் செய்கிறேன்' என்று சொல்லி இரவு 11-00 மணிக்கு விடை பெற்றேன். காலேயில் ஸ்நானம் எல்லாம் முடித்துக் கொண்டு, சுமார் 7-00 மணி அளவில்,ஸ்ரீ பெரியவாள் தரிசனத்துக்குப் போனேன். 'பெரியவாள்' விடுதியின் வெளியில், வந்து உட்கார்ந்தார். வந்தனங்கள் செய்து கொண்டேன். அருகில் உட்காரச் சொன்ஞர். 'புது பெரியவாளே சந்தித்தாயா என்ருர். 'ஆம் இரவு தரிசனம் செய்து, ரொம்ப நேரம் பேசிக் கொண்டிருந்தேன். எல்லா சங்கதிகளும் நடக்கப் போகும் 'சதஸ்' விஷயமாக சொன்ஞர்கள்' என்றேன். இடை இடையில் பக்தர்கள் வந்து வந்தனம் செய்து பெரியவாளிடம், ஏதேதோ விக்ஞாபனம் செய்து கொள்வார்கள். தெலுங்கில் சொன்ஞர்கள். பெரியவாள் தனக்குப் புரியாது போல, 'என்ன சொல்ரா' என்று என்னைக் கேட்டார். எனக்கோ தெலுங்கு தெரியாது. கர்நூலிலும் Hyderabad லும் இருக்கிறேனே, நன்ருக தெலுங்கு தெரிந்திருக்குமென்று நினைத்தார் போலும். நான் ஏதோ கொச்சை தெலுங்கும், தமிழும் சேர்த்து உளரினேன். அதற்கு பெரியவாள் .''உனக்கு தெலுங்கு தெரியாதா.நானே தேவலே போல் இருக்கிறதே''

Koviloor Digital Library
என்று பரிகசித்தார். Tenali ஐ சேர்ந்த ஓர் ரொம்ப கால பக்தர் ஒரு அம்மாள், வந்தனம் செய்து கொண்டாள் அவளேயும் அங்கே உட்காரச் சொன்னர். அந்த அம்மாள் பெரியவாளே அடிக்கடி தரிசித்து தெலுங்கில் பேசி பழகியவாள். அவள் ஏதோ உயர்ந்த தத்துவத்தை, சாதாரண முறையில் எடுத்து உரைத்து சாவகாசமாக பேசிக் கொண்டிருந்தாள். பெரியவாள் அந்த பேச்சில் மிகவும் உத்ஸாகம் காட்டினர்கள். நான் சொன்னேன். 'நான் சமஸ்கிருதம் கற்றுக் கொள்ளவில்லே. உபநிஷத் கீதை முதலிய புஸ்தகங்களை சமஸ்கிருதத்தில் படித்து, விஷயம் ஒன்றும் தெரிந்து கொள்ளவில்லே. வயதோ ஆய்விட்டது. ஏதோ நேரம் கிடைத்த பொழுது பெரியவாள் உபந்நியாஸங்களே புஸ்கத்தில் தமிழில் இருக்கிறதே, அவைகளேத் தான் திரும்ப திரும்ப படிப்பேன். இதைத் தவிர எதையும் படிப்பதில்லே, என்று என் வருத்தத்தை விக்ஞாபனம் செய்துகொண்டேன். அதற்கு பெரியவாள்-''ஏன் வருத்தப்படுகிருய். பெரியவாள் புஸ்கத்தில் என்ன சொல்லியிருக்கிறது. உபநிஷத்தில் உள்ள தத்துவங்களேயும், கீதையின் தாத்பர்யத்தையும் தவிர, அதில் வேறு என்ன இருக்கிறது. அதைப்படித்தாலே எல்லாம் படித்ததாக ஆய்விட்டது. உனக்கு என்னத்துக்கு உபநிஷத் வேதம், சாஸ்திரம் எல்லாம் படிக்கணும் அதையெல்லாம் படித்து எதை அடையவேண்டி பார்க்கிருர்களோ, அது உனக்கு ஏற்கெனவே கிடைத்துவிட்டதே. எப்படியோ ஏதோ குறுகிய வழியில் எல்லோரும் வருஷக்கணக்கான பிரயத்தனம் செய்து கிடைக்காதது, உனக்கு சுலபமாக கிடைத்திருக்கிறது. சந்தோஷம் அல்லவோ படவேண்டும். . '' என்று எனக்கு ஆறுதல் கூறினர்கள். இப்படி மணிக்கணக்கில் பேசிக் கொண்டிருந்தோம். பெரியவாள் சொன்னர்: இந்த அம்மாளேப்பார் யாதொரு படிப்பும் இல்லே. அவள் பேசுவதெல்லாம் மிகவும் உயர்ந்த தத்துவங்கள். கேட்க கேட்க எனக்கு திருப்தியாக இருக்கிறது' என்ருர். மணி 11-00 இருக்கும். விடைபெற்றுக் கொள்ளும் சமயம் ஆகிவிட்டது என்று நினைத்து: 'ஓர் விக்ஞாபனம் என்றேன்'. என்ன என்ருர் பெரியவாள். நான் MES மிலிட்ரி காண்ட்ராக்ட் நிறைய செய்தேன். பெரியவாளுக்கு தெரியும். மிலிடரி aerodrome பகலில் செய்யவேண்டிய வேலேயை, இரவில் செய்யும் படியாகச் சொன்னர்கள். அதற்கு அதிக rate ஐ கொடுப்பதாகவும் வாயால் சொன்னர்கள். பிறகு வேலே முடிந்த பிறகு, ஒன்றும் கொடுக்கவில்லே. ரூ.1.25 லக்ஷத்துத் நான் அதிக rate கேட்டிருக்கிறேன். ஒரு வருஷமாகியும் பணம் கொடுப்பதாகத் தெரியவில்லே. இது ஒருபுறம் இருக்க, Income-tax dept. நான் tax கட்டவில்லேயென்று, Bank க்கு

Koviloor Digital Library

லெட்டர் அனுப்பி என் வரவு செலவுகளை நிறுத்தி, பணத்தை tax க்கு கொடுக்கும்படி எழுதி விட்டார்கள். MESஉம் Income-tax dept. உம் இரண்டும் Central govt ஐ சேர்ந்தது, இருந்தும் எனக்குக் கொடுக்க வேண்டியதை யாரும் கவனிககவில்லை. கவர்மெண்டு வரவேண்டியதற்கு Notice கொடுத்து அவமானம் வரும் முறையில் action எடுத்திருக்கிறார்கள். . .'' என்றேன் . ஓகோ, அவர் கொடுக்க வேண்டியதைப் பற்றி கேள்விமுறையில்லை-நீ கொடுக்க வேண்டியதற்கு கிட்டி போட்டு கேட்கிறார்கள்-இல்லையா'' என்றார்கள். நான் ''ஆமாம், பெரியவாள் காதில் போட்டு விட்டேன், பெரியவாள் அனுக்ரஹிக்க வேண்டும்'' என்று எழுந்து, நமஸ்கரித்தேன் பெரியவாளும் எழுந்து, எல்லோரையும் கையால் அனுக்ரஹித்து உள்ளே சென்றார்கள்.

காளஹஸ்தியில் வியாஸ பூஜை வித்வத்சதஸ்

காளஹஸ்தியில் மூன்று தினங்கள் தங்கி, 'வியாஸபூஜை'-''வித்வத்சதஸ்'' எல்லாம் பார்வையிட்டு, ஸ்ரீமடத்துக்கு வேண்டிய கைங்கர்யங்களை செய்து வந்தேன். ஆந்திராவில் முக்கியபட்டவர்களும், Endowments Dept. மந்திரியும் 'சதஸ்' ஆரம்பிக்க வந்திருந்தார்கள். ஊர்வலம் -'புது -பெரியவாளுடன்' ஊர் ஜனங்களும் பக்தர்களும் உள்பட, cultural show party - அவர்களுடைய ஆட்டம் பாட்டத்துடன், டவுனில் ஆரம்பித்து, புதிதாக அமைத்திருந்த மேடை வந்து சேர 2 மணி நேரம் பிடித்தது. மேடையில் பெரியவாளும் 'புதுப்பெரியவாளும்' வீற்றிருக்க 'சதஸ்' Inauguration ஆரம்பமாயிற்று. மந்திரி பேசுகையில் மஹா சன்னிதானம் காஞ்சியிலிருந்து, ஆந்திராபிரதேச எல்லைவந்து, ஸ்ரீகாளஹஸ்தியில் முகாம் இருப்பதைப்பற்றியும், இங்கே இவ்வளவு பெரிய 'வித்வத்சதஸ்' நடத்துவதையும் பார்த்து நாங்கள் மிகவும் சந்தோஷப்படுகிறோம். பெரியவர்கள் ஆந்திரபிரதேசத்தில் எங்கு வேண்டுமானாலும் Hyderabadம் விஜயம் செய்ய வேண்டுமாகப் பிரார்த்தித்து, தங்கள் நன்றியை தெரிவித்துக் கொண்டார்கள். நான் எந்த முகாமில் பெரியவாளை சந்திக்கும் பொழுதும், Hyderabad-Secunderabad விஜயம் செய்ய வேண்டும் என்று தொடர்ந்து பிரார்த்தித்துக் கொண்டிருந்தேன். இன்று ஆந்திரபிரதேச மந்திரியும் அழைக்க ஓர் சந்தர்ப்பம் ஏற்பட்டது.

Koviloor Digital Library

ஸ்ரீ சந்திர மௌலீஸ்வாருக்கு வெள்ளிக்கிழமை இரவு பூஜையின் பெரிய விசேஷம்

அன்றே, மறுதினமோ வெள்ளிக்கிழமை சாயந்திரம் புது பெரியவாள் 'சதஸ்' நடத்தபுறப்படும் பொழுது வழியில் சந்திக்க நேர்ந்தது. அவருக்கே ஏற்ற சிரிப்புடன் - 'இன்று வில்லுப்பாட்டு, ரொம்ப நன்றாக இருக்கும் வாருங்கள். . .' என்று அழைத்தபடியே சென்றார். கொஞ்ச தூரம் அவருடன் நடந்து விடைபெற்றேன். வெள்ளிக்கிழமை இரவு பூஜை பெரியவாள் ஆரம்பித்தார். பூஜையை கொஞ்ச நேரம் தரிசித்து விட்டு, பிறகு சதஸில்-வில்லுப்பாட்டு-கேட்கப் போகலா மென்ற எண்ணத்தோடு பூஜையில் போய் அமர்ந்தேன். ரொம்ப கூட்டம் இல்லை. திரையை ஒட்டிப் பக்கத்திலேயே அமர்ந்தேன். ஸ்ரீ பெரியவாளின் நேர் பார்வை அடிக்கடி என் மேல் பட்டது. வெள்ளிக்கிழமை ஸ்ரீ சந்திர மௌலீஸ்வாருக்கு பால் அபிஷேகம் செய்து கொண்டே இருந்தார்கள். என் மனது பூராவும் பூஜையிலேயே ஈடுபட்டு விட்டது. அலங்காரம் செய்து அர்ச்சனை செய்து கொண்டே இருந்தார். மணி போவதே தெரியவில்லை. அர்ச்சனை செய்து கொண்டே, உட்கார்ந்த நிலையிலேயே தண்டத்துடன் நமஸ்கரித்தபடியே 10-15 நிமிடங்கள் ஆகியும் எழுந்திருக்கவே இல்லை. எனக்கு மயிர் கூச்சலும் அதிர்ச்சியுமாக இருந்தது. 'பெரியவாள்' அம்பாளுடன் பிரத்யிக்ஷமாக ஈடுபட்டு, அந்த ஈடுபாட்டில் மனதை பூராவும் செலுத்தி, யோக நிலையில் இருந்தார். பிறகு மெதுவாக எழுந்து, தன் நிலைக்கு வந்து ஜலத்தினால் கண்களைத் துடைத்துக் கொண்டு மறுபடியும் அர்ச்சிப்பதில் ஈடுபட்டார். இந்த அற்புத காட்சியிலிருந்து எனது கண்களை எடுக்கவே முடியவில்லை. இந்த பெரிய சந்தர்ப்பமும், அபூர்வ காட்சியும், அனுக்ரஹமும் எதிர்பாராமல் எனக்குக் கிடைத்ததைக் குறித்து மானஸிகமாக என் நன்றியை செலுத்திக் கொண்டு, பூரா பூஜையும் முடியும் வரையில் அப்படியே தரிசித்துக் கொண்டிருந்தேன். பிறகு பிரஸாதம் பெற்று வெளியில் வரும் பொழுது, 'வில்லுப்பாட்டும்' முடிந்து, எல்லோரும் திரும்பி வந்து கொண்டிருந்தார். அன்று பெரியவாள் சுமார் மூன்று மணி காலத்துக்கு மேல் பூஜையில் ஆழ்ந்திருந்தார்கள். மறுநாள் இரு-பெரியவர்களிடமும் அனுக்ரஹம் பெற்று மெட்ராஸ் திரும்பினேன்.

5-9-1966: சிகண்ட்ராபாத் சங்கர மந்திர் கட்ட பணம் திரட்டுதல்

ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கர மந்திர், சிகண்ட்ராபாத்தில் கட்டுவிக்க பணம் சேகரிக்கும் திட்டம் எப்பொழுதும் எண்ணத்திலேயே

Koviloor Digital Library

Sri Thirumuruga Kripananda Variar giving a musical discourse at the Ramayana Festival held at the premises of Keys Girls High School, Secunderabad.

Koviloor Digital Library

Koviloor Digital Library



Sri Thirumuruga Kripananda Variar giving a musical discourse at the Ramayana Festival held at the premises of Keys Girls High School, Secunderabad.

Koviloor Digital Library

Koviloor Digital Library

Bangalore Krishna Bhagavathar

Koviloor Digital Library

Koviloor Digital Library



Hon'ble Sri Pattom Thanu Pillai, Governor of Andhra Pradesh, inaugurating the Ramayana Festival held at the premises of Keys Girls High School, at Secunderabad. Seated on his right is Srimathi Pattom Thanu Pillai and on his left Sri Thirumuruga Kripananda Variar. On the far left is Sri Anantharaman Chief Secretary of Government of Andhra Pradesh

Koviloor Digital Library

Koviloor Digital Library



Hon'ble Sri C. Subramaniam, Central Minister, taking leave after gracing his presence at the Ramayana Festival at Secunderabad.

Koviloor Digital Library

Koviloor Digital Library



Srimathi Pattom Thanu Pillai,

Hon'ble Sri Pattom Thanu Pillai, Governor of Andhra Pradesh, and Sri Thirumuruga Kripananda Variar, at the Ramayana Festival Celebrations held at the Keys Girls High School, Secunderabad.

Koviloor Digital Library

Koviloor Digital Library

Hon'ble Sri. C. Subramaniam, Minister, Central Government, graced the Ramayana Festival Celebrations held at the premises of Keys Girls High School, Secunderabad.

Koviloor Digital Library

Koviloor Digital Library

A Section of the audience at the Ramayana Festival held at the premises of Keys Girls High School. Secunderabad.

Koviloor Digital Library

Koviloor Digital Library

உள் இருந்து கொண்டிருந்தது. மறுபடியும் எந்த கதாகாலக்ஷேபம் செய்ய பண்டிதரை வரவழைப்பது என்று, ஸ்ரீமான் T.S. Balakrishna sastrigal- க்கு லெட்டர் எழுதியிருந்தேன். அவர் உடனே வர சௌகர்யமில்லையென்றும், Hyderabad-ல் தன் சங்கீத உபந்நியாசத்தை ஆதரிக்கும் பக்தர்கள் இருக்கிறார்களா என்ற சந்தேகம் கூட அவருக்கு. அவருக்கு வேண்டிய ஓர் நண்பரை விட்டு சிபார்சு செய்யச் சொல்லியிருந்தேன். நானும் மெட்ருஸிலிருந்து Hyderabad திரும்பு முன் நேரில் பார்த்து ஏற்பாடு செய்து (26-10-66 to 5-11-66) வந்தேன். அவரும் வந்தார். 10 நாட்களுக்கு இராமாயணம், நந்தனார். முதலிய சாஸ்திரங்கள் சங்கீத உபந்நியாஸம் அவருடைய கோஷ்டியுடன் வந்து நடத்திக் கொடுத்தார். ஏராளமான பக்தர்கள் தினமும் Keys Girls High School மைதானத்தில் கூடி பக்தி பரவசமானார்கள். கணிசமாக நன்கொடை வந்தது. இந்த மாதிரி சத்விஷயங்களில் பெரிய ஏற்பாடுகளில் இதுவரை இரட்டை மாநகரில் நடந்தது இல்லையென்று எல்லோரும் பேசிக் கொண்டார்கள். எங்களுக்கு இரண்டு வித நோக்கம். ஒன்று சங்கர மடம் கட்ட பணம் வசூலிக்க வேண்டும். மற்றொன்று, இந்த நகரத்துக்கு வராத, மெட்ருஸில் பேர் போன உபந்நியாஸகர்களை வரவழைத்து, இந்நகரில் உள்ள ஆஸ்திகர்களுக்கு இந்த வாய்ப்பை அளித்து மேன் மேலும் சனாதன தர்மம் வளரவேண்டும் என்பது. விழாவிற்கு ஆன சிலவுகள் போக பாக்கித் தகை பூராவும், 'சங்கர மந்திர்' கமிட்டியாரிடம் ஒப்புவிக்கப்பட்டது.

ஆகவே கதாகாலக்ஷேபம் நன்கொடையெல்லாம், சேர்த்து, ரூ 10,000 க்கு மேல் பணம் சேர்ந்து Bank-ல் போட்டாய் விட்டது. தக்க இடம் தேடி 'சங்கர மந்திர்' கட்டிடம் ஆரம்பிக்க வேண்டியது தான் பாக்கி. சர்க்கார் நிலம் 500 Sq.ft. Sardar Patel Road கொடுத்தது, சங்கரமந்திர்அமைக்க அவ்வளவு சௌகர்யமாக இல்லை பக்கத்தில் அனுசாரங்கள் ரொம்ப இருந்தது. மேலும் அது அதிக தூரம். பக்தர்கள் போய் வழிபட்டு வரவும் இயலாதது. ஆகையால் வேறு இடம் ஒன்று தேடிக் கொண்டிருந்தோம். அதேபோல், ஆடிகிருத்திகை லக்ஷார்ச்சனை கமிட்டி' ஸ்ரீ முருகன் சந்நதி ஒன்று அமைக்க, தகுந்த இடம் தேடிக் கொண்டிருந்தார்கள்.

காஞ்சி பரமாச்சார்யாள், என்னை காப்பாற்ற, பரிபூர்ண அனுக்ரஹமாய ஆச்சர்யம்

ஸ்ரீ காஞ்சி பரமாச் சார்யார்களின் அனுக்ரஹம் எப்படியெல்லாம் ஏற்படுகிறது, மனது ஏதோ காரணங்களால் கவலை கொண்டிருக்கும்

Koviloor Digital Library

பொழுது எப்படி 'பெரியவாள்' மனதுக்கு சாந்தியைக் கொடுக்கிருர் என்ற எனது அனுபவங்களையெல்லாம் எழுதவேண்டுமானுல் பெரிய புஸ்தகமே வேண்டும். முக்கியமாக 1 அல்லது 2 நிகழ்ச்சிகளை மாத்திரம் குறிப்பிடுகிறேன். சிகண்ட்ராபாடில், Defence-MES-காண்ட்ராக்ட் Station WorkShop (Rs.7 லட்சம்) கட்டிடம் கட்டிக் கொண்டிருந்தேன். அஸ்திவாரம் தூண்கள் (RCC Col) சுற்றிசுவர்கள் எல்லாம் எழும்பியாய் விட்டது. மேலே Trusses போட்டு, A.C. Sheet roofing போட வேண்டும். வாசற் படி (Rolling Shutters) இடம் விட்டு மேலே RCC lintel போட்டிருக்கிறது. கட்டிடத்து சுவர்கள் 300 அடிநீளம், குறுக்கே நடுவில் அதோடு பிணைக்க (சேர்க்க) சுவர்கள் கிடையாது. 300' X 70' விஸ்தீரிணம் உள்ள Work shop. ஒரு நாள் இரவு பெரிய புயல்காற்றும் மழையும் அடித்தது. காலையில் வழக்கம்போல் workshop கட்டடத்தைப் பார்க்கப் போனேன். R.C.C. தூணும்-சுவரும் இடைவெளி தெரிந்து. கட்டினபோது இரண்டும் ஒட்டிக் கொண்டிருந்தது. ஒரு வேளை R.C.C. Column, செங்குத்தாக Plumbing சரியாக இல்லேயோ என்று, சோதித்தோம். அது சரியாகவே இருந்தது கட்டிடம் Basement-ல் இடைவெளி இல்லே. மேலே போகப் போகத்தான். ஏற்பட்டிருக்கிறது. அதாவது 300 அடி நீளம், 22 அடி உயர சுவர் பூராவும்,(ஒரு மூங்கில் மேலே வளையுமே அதுபோல்) ஒரு பக்கம் சாய்ந்து சுமார் 9'' இடைவெளி சாய்ந்து நின்று கொண்டிருக்கிறது. மழையும் கொஞ்சம் பெய்து கொண்டே இருந்தது. மேலே என்ன செய்வதென்றே புரியவில்லே. மறுபடியும் காற்றும் மழையும் பெரிதாக ஏற்பட்டால் பூரா சுவரே விழுந்து விடலாம். MES Engineerக்கு மத்தியானம் விவரம் கூறிளேம். அவர்கள் எல்லோரும் வந்து பார்வையிட்டார்கள். 300' X 22' சுவரில் எங்கே யாவது பிளவு cracks ஏற்பட்டிருக்கிறதா என்று பார்த்தார்கள். ஒன்றும் இல்லே. அவர்களுக்கும் கொஞ்சம் ஆச்சர்யத்தை உண்டு செய்தது. உடனே Madras-ல் MES-Chief Engineerக்கு டெலிபோன் செய்து அவர்களே வரும்படி சொன்னேம். Madras ல் இருந்து இரண்டு Technical Officer இரவு plane-ல் புறப்பட்டு வந்தார்கள்.

இரவு மழை பெய்து கொண்டேயிருந்தது. எனக்கு ஒரே கவலே. சுவர் விழுந்தால் பண நஷ்டம் ஒன்று. இரண்டாவதாக வேலே சரியில்லே என்ற கெட்ட பெயர். மூன்ருவதாக அவ்வளவு பெரிய கட்டிடம் யதேச்சையாக திடீரென்று விழுந்தால், மனித சேதமும் ஏற்படலாம்.

Koviloor Digital Library

Watch-man வேலைசெய்யும் சில கூலிகள் பக்கத்திலேயே இருக்கிறார்கள். மேலும் இது Military விவ காரங்கள். கண்டிப்பு அதிகம். இரவு பூராவும் தூக்கம் வரவில்லை. காஞ்சி பெரியவாளை மனதில் தியானம் செய்து கொண்டு, ''அந்த சுவர் பூராவும் விழுந்தாலும் பரவாயில்லை. மறுபடியும் கட்டி விடலாம், ஆனால் உயிர்சேதம் ஒன்றும் ஏற்படாமல் காப்பாற்றிக் கொடுக்க வேண்டும். . .'' பிரார்த்தித்துக் கொண்டிருந்தேன். காலையில் ஸ்நானம் எல்லாம் முடித்து, வழக்கம்போல் பூஜை ரூமில் மறுபடியும் கண்கலங்கி பிரார்த்தித்தேன். வேலைக்குப் புறப்படும் சமயம். Work-shop-லிருந்து என் மேஸ்த்திரி வந்து 'சுவர் அப்படியேதான் நிற்கிறது' என்று சொன்னான். கொஞ்சம் சமாதானம் ஏற்பட்டது. உடனே தபாலில் Post வந்தது. பிரித்தால் காஞ்சி ஸ்ரீ காமகோடி மடத்திலிருந்து ஸ்ரீ பெரியவாள் அனுப்பிய பிரஸாதம் கிடைத்தது. என் ஜென்ம நட்சத்திரத்தை ஒட்டித்தான் மாதம் ஒரு முறை 'பிரஸாதம்' வரும். ஆனால் இன்று பிரஸாதம் எதிர்பாராமல் வேறு எதற்காகவோ, அனுப்பி வைத்திருந்தார்கள். என் மனது எவ்வளவு சந்தோஷம் அடைந்திருக்கமென்று ஊகித்துப் பாருங்கள். இன்னும் கொஞ்ச நேரத்தில் Madras-லிருந்து வந்த Engineer கள் பார்வையிட்டு, என்மேல் என்ன குற்றங்கள் சாட்டப் போகிறார்களோ என்ற வேதனை எல்லாம் பறந்து போய்விட்டது. தைரியத்துடன் Workshop கட்டிடத்துக்கு போனேன். CWE, மற்ற Engineerகள் எல்லோரும் வந்து கூடினார்கள்.பூராவும் சுற்றிப் பார்வையிட்டு விட்டு, Madras Engineer, ' என்ன காரணத்தால் இவ்வாறு ஏற்பட்டது என்று உங்கள் எண்ணம். . . என்று என்னைக் கேட்டார். ''300 அடி நீளமுள்ள சுவருக்கு குறுக்கே இணைக்க Cover walls, பிடிமாணம் இல்லாததால் ஏற்பட்டிருக்கலாம். கட்ட ஆரம்பிக்கும் முன்பே, இதில் design-ல் ஏதோ தவறு இருப்பதாகத் தோன்றியது. சில Junior Engineer களிடமும் சொல்லியிருந்தேன். Madras-லிருந்து design Section-ல் போட்டு, Chief Engineer approve செய்த Plan, நாம் என்ன சொல்ல முடியுமென்று, சாதாரணமாக பேசி முடித்துவிட்டோம் என்றேன். ஏதாவது Cracks ஏற்பட்டிருக்கிறதா என்று பார்த்தார்கள். துளிக் கூட இல்லை. இது அவர்களுக்கு ஆச்சர்யத்தை உண்டு செய்தது. என்னைக் கூப்பிட்டு, சாதாரணமாக சுவர் இப்படி வளைவு கொடுத்திருந்தால் எங்கேயாவது Weak Point-ல் Cracks ஏற்பட வேண்டும். அது ஒன்றும் காணவில்லை. அதிலிருந்து வேலை சுத்தமாகவும், சரிவரவும்

Koviloor Digital Library

நடந்திருக்கிறது. அதற்கு உங்களுக்கு எங்கள் நன்றி என்று சொல்லி கை குலுக்கினார்கள் (Shake hands) எங்கள் குரு நாதர் கருணைக்கு எல்லை உண்டா! இதைவிட அத்தாட்சி வேறு வேண்டுமா! இந்த சம்பவம் நடந்ததிலிருந்து Madras Chief Engineer க்கும், மற்றய Engineers களுக்கும் என்மேல் ஓர் மதிப்பு மரியாதை எல்லாம் எதிர் பார்க்காமல் ஏற்பட்டது. இது பல பிரயோசனங்களை கூட்டிக் கொடுத்தன.

காளஹஸ்தியில் ஸ்ரீ பெரியவாளிடம் MESலிருந்து Rs. 1.25 Lakhs எனக்கு பணம் வரவேண்டும். ஆனால் Central Govt க்கு சேர வேண்டிய Income-tax என் Bank க்கும் டிபார்ட்மெண்டும் Notice கொடுத்து என் Bill பணம் ஒன்றும் பட்டுவாடா செய்ய வேண்டாம் என்று வந்த விவரங்கள் தெரிவித்திருந்தேன் அல்லவா! தொடர்ந்து என்ன நடந்தது. ஆச்சர்யத்தைப் பாருங்கள் சிகண்ட்ராபாத் திரும்பிவந்து 4 அல்லது 5 தினங்களுக்குள், தபாலில் Income tax dept. அவர் Bank ம், Department-ம் கொடுத்த Notice தவறுஎன்றும் - அவ்வாறு அவர்கள் அவசரப்பட்டு செய்திருக்கக் கூடாது என்றும் என் Auditor கொடுத்த மனுவை அங்கீகரித்து Income-tax தங்கள் Notice மேல் யாதொரு action எடுக்க வேண்டாமென்றும், Bank-ம்,Department-ம் எழுதி விட்டார்கள். Copy of letter எனக்கு auditor அனுப்பி வைத்தார். என்ன சொல்வது! பெரியவாள் கருணைக்கு எல்லையுண்டா.

மேலும் Madras Chief Engineer, சிகண்ட்ராபாதுக்கு Camp வந்திருந்தார். எனக்கு Chief Engineer உங்களைப் பார்க்கவேண்டுமென்கிறார், Telephone வந்தது. சாதாரணமாக நாங்கள் Contractors, Chief Engineer ஐ பார்ப்பதே கிடையாது. அவசியமும் இல்லை. ஏதோ நான் செய்த வேலைக்கு Rs. 1.25 laks வரவேண்டியதைக் குறித்து போட்ட Claims Petition, ரொம்ப நாளாகியும் முடிவு எடுக்கவில்லையென்று அவர் கவனித்துவர, என்னைக் கூப்பிட்டு, எல்லா விவரங்களும் விசாரித்தார். ஏன் இவ்வளவு தாமதம் என்று கேட்டார். ஒரு Officer ஆவது 'தீர்மானம்' எடுக்க தைர்யமில்லை, முன் வரமாட்டேன் என்கிறார்கள். வேலை செய்யும்பொழுது அவசர அவசரமாக வேலை வாங்கின ஆபிஸர்கள் மாற்றுதல் ஆய்விட்டது அல்லது Retired ஆய்விட்டார்கள். நான் எவ்வளவு பிரயத்தனம் செய்தும் ஒன்றும் நடக்க

Koviloor Digital Library

வில்லை. பணம் உங்கள் கையில் முடங்கி இருப்பதால், மேல்கொண்டு Contracts செய்யவும் இயலாத நிலையில் இருக்கிறேன்! என்றேன். Chief Engineer ரொம்ப பரிதாபப்பட்டு, உடனே தன் Madras Office லிருந்து ஓர் பெரிய ஆபிஸரை அனுப்புவதாகவும்: அவர் Secunderabad ல் ஒரு வாரம் தங்கி, உங்கள் Claims விவரங்களை பூரா கவனிப்பார் என்றும் அவருக்கு உங்கள் குறைகள் பூராவும் விவரமாகத் தெரிவிக்கும் படியும், அந்த Officer Report லிருந்து தான் முடிவு எடுப்பதாகவும் எனக்கு ஆறுதல் கூறி சென்றார். அதுபடியே Madras Officer வந்தார். எல்லா விவரங்களையும் என்னிடமிருந்தும், MES-CWE இடமிருந்தும் தெரிந்து கொண்டு, Madrasக்குப் போய் பெரிய Chief Engineer இடம் Report கொடுத்திருக்கிறார். என்னை Madras வந்து, Chief Engineerஐ சந்திக்கும் படி 'தந்தி' வந்தது. நானும் போனேன். Chief Engineer சொன்னார். ''நான் உங்கள் Claims பூராவும் பார்த்தேன். எங்கள் Rules பிரகாரம் சுமார் ரூ.60,000 கொடுக்கலாமென்று தெரிகிறது. அதற்குமேல் என்றால் கொடுக்க முடியாது. தேவையானால் Arbitration போய்தான் நீங்கள் பார்க்க வேண்டும். ஒரு வேளை அதிகத்தொகை கிடைத்தாலும் கிடைக் கலாம், அல்லது குறைந்தாலும் குறையலாம். அந்த தீர்ப்பு ஆக சுமாராக 1 அல்லது 2 வருஷம் ஆகும். எது உங்களுக்கு சௌகர்யமோ அப்படிச் செய்யுங்கள் என்றார். நான் Chief Engineer கொடுக்க ஒத்துக் கொண்டதுகை பிரகாரம் பெற்றுக் கொள்ள சம்மதித்து லெட்டர் கொடுத் தேன். சுமார் ஒரு மாதத்துக்குள் பூரா பணம் ரூ.60,000/= உம் கையில் கிடைத்தது. சாதாரணமாக இம்மாதிரி முடிவு ஏற்பட வருஷக்கணக்கில் ஆகும். என் கஷ்டங்களையெல்லாம், ஸ்ரீ பெரியவாள் காளஹஸ்தியில் காதில் கேட்டு, எப்படி மானசீகமாக ஆக்ஞை இட்டிருக்கிறார்கள்! Income-tax ஆபீஸராக இருந்தால் என்ன, Military Chief Engineer ஆய் இருந்தால் என்ன, நாம் எல்லாம் காஞ்சி ஸ்ரீ காம கோடி தெய்வத்தின் கருணைக்கும் அன்புக்கும் கட்டுப்பட்டவர்கள் அல்லவா! ஒவ்வொரு மக் களும் பக்தனும், சிஷ்யனும் படும் துயரங்களை, தனதாகவே கருதி, அல்லும் பகலும் அவர்கள் கவலையை நீக்க அவர்களைக் கடைத்தேற, அரும்பாடுபட்டு, ஊண் உறக்கம் எல்லாம் துறந்து, ''அன்பு'' என்று அமுதத்தை அன்றாடம் அள்ளிக் கொடுத்து ஆதரிக்கும், 'ஆதிசங்கர குருவின்' மறு அவதாரமாக தோன்றி, காட்சி கொடுத்து கடாக்ஷிக்கும், ஸ்ரீ காமகோடி பெரியவாளை நினைக்கவும், தரிசிக்கவும் பார்த்துப் பழகவும், பேசிக் கேட்கவும், பாக்யம் பெற்ற நாம் நம்மைப் படைத்த தெய்வத்துக்கு நன்றி செலுத்துவோமாக!

Koviloor Digital Library

1967 to 1968 ஸ்ரீ காளஹஸ்தியிலிருந்து ஆந்திர பிரதேசம் முக்கியமாக ஸ்ரீ சைலம் ஆதிசங்கர பகவத் பாதாள் பிரதிஷ்டை உத்தேசித்து ஸ்ரீமடம் (HH. பெரியவாள் - HH. புதுபெரியவாள்) திக் விஜயம் வந்து கொண்டிருக்கிறார்கள். ''அஹோபிலம்'' சென்று தரிசித்து விட்டு ஸ்ரீ பெரியவாள் காமகோடி பீடத்தில் எழுந்தருளி 60 ஆண்டு நிறைவு விழா கொண்டாடி நந்தியால் (கர்நூல் ஜில்லா) லில் முகாம்! மஹாநந்தி என்ற ஓர் சிறிய இடம். தானுகவே நீர் ஓர்பாறையின் உள்ளிருந்து ஜலம் வந்துகொண்டே Perennial ஓர் குளம் மாதிரி தேக்கத்தில் விழுகிறது. ஸ்படிகம் போல் நீர் தெரிகிறது. 4 அல்லது 5 அடி ஆழம்தான். கீழே தண்ணீர் தரையில் இருக்கும் எந்த பொருளும் கண்ணுக்குத் தெரியும், அவ்வளவு சுத்தம். பிப்ரவரி மீ கடைசி மார்ச்சு மீ ஆரம்பம் நான் சிகண்ட்ராபாத்தில் பெரிய MES கண்ட்ராக்களில் ஈடுபட்டிருந்தேன். மார்ச்சு மீ ஒரு நாள் கூட ஊரை விட்டுப் போக முடியாதபடி அதிகமான வேலை. ஸ்ரீ பெரியவர்களை 'கர்நூல்' விஜயம் செய்ய அழைக்க வேண்டும். ஸ்ரீ பெரியவாள் ஆக்ஞையின் பேரில் மடம் ஒன்று ஸ்தாபித்து, பாதுகை பிரதிஷ்டையும் 1959-ல் நடந்திருக்கிறது. அழைக்க வேண்டியது எனது பொறுப்பும் கடமையும் கூட. ஆனுல் நேரில் போக வேலை இடம் கொடுக்கவில்லை. வக்கிலும், சங்கர மந்திர் President ஆன, ஸ்ரீ T.R. ராமச்சந்திர சாஸ்திரிகளுக்கு telephone மூலம் பேசி, என் சார்பாகவும் கமிட்டி சாரபாகவும் அவர்களைப் போய் அழைக்க சொன்னேன். அவர்களும் என் நிலைமையை தெரியப்படுத்தாத இரு பெரியவர்களையும் அவசியம் கர்நூல் விஜயம் செய்ய வேண்டுமென்று அழைத்தார்கள். ஸ்ரீ பெரியவாள் ஒப்புக் கொண்டார்கள். ஸ்ரீ சைலம் நந்தியாலிலிருந்து, நேரே போனுல் சமீபம். கர்நூல் வந்துபோனுல் 60 மைல் கூடுதல் ஆகிறது. மேலும் 'மஹாசிவராத்திரி' முன் கூடியே ஸ்ரீ சைலம் போகவேண்டும். இந்த நிலையில், ஸ்ரீ புது பெரியவாள் அந்த 'ஸ்படிக' மான ஜலத்தில் 2 தடவை வெகு நேரம் ஸ்நானம் செய்து, ரசித்து இருக்கிறுர்?. 'மலேரியா ஜுரம்' அதிகமாக வந்து விட்டது. கொஞ்சம் குறைவதும் - மறுபடியும் ஏறுவதுமாக இருந்தது. ஸ்ரீமடத்துக்கு கவலை ஏற்பட்டது. மஹாசிவராத்திரிக்குள் ஸ்ரீசைலம் போக வேண்டும்! கர்நூல் போய் போனுல் இன்னும் 4 அல்லது 5 நாட்கள் கூட ஆய்விடுமே என்று! நான் தினம் விடாமல் 3 அல்லது 4 தடவை கர்நூலுக்கு 'டெலிபோன்' செய்து ஸ்ரீ பெரியவாள் Programme விஜாரித்த படியே இருந்தேன். இரவு டெலிபோனில் இன்னும் 1 அல்லது 2 தினத்தில் கர்நூல் வருகிறுர்கள் என்பார். காலை டெலிபோனில் ஸ்ரீ புது பெரியவாளுக்கு

Koviloor Digital Library



Sri Santhana Gopalachariar at the Ramayana Festival, Secunderabad

Koviloor Digital Library

Koviloor Digital Library

உடல் நிலை சரியில்லாதலால் கர்நூல் முகாம் இருக்காது என்பார். மறுநாள் டெலிபோன் எப்படியும் கர்நூல் வருவதாக யோசனை இருக்கிறது என்பார். என் மனதும் யாதொரு ஆறுதல் இல்லாமல் செய்தி மாறி-மாறி வந்து கொண்டிருந்தது. கடைசியில் 1-3-67 காலை டெலிபோன் நாளை (2.3.77) காலை ஸ்ரீ மடம் கர்நூல் முகாம் என்று சொன்னார். கடைசியில் ஸ்ரீ பெரியவாளிடம் -புது பெரியவாள் உடம்பைப் பற்றி விக்ஞாபித்து, கர்நூல் முகாம் இல்லாமல் நேரே ஸ்ரீ சைலம், போகலாமா என்று மேனேஜர் கேட்டார்களாம். ''எது எப்படி இருந்தாலும் கர்நூல் போய் தான் போக வேண்டும். நான் சொல்லி முத்துசாமி சங்கரமடம் கட்டி பாதுகை, பரதிஷ்டை செய்திருக்கிறான். அதைப் போய் பார்க்காமல் போவது எப்படி. கர்நூல் போயே போவோம்'' என்றார்களாம். ஸ்ரீ பெரியவாள் என்ன கருணை என்ன அன்பு என்ன பாக்யம்.

நானும், என் சம்ஸாரம் பெண் மூவரும் 1-3-67 இரவு ரயிலில் புறப்பட்டு விடியற்காலை 2-3-67 கர்நூல் போய் சேர்ந்தோம். ஸ்ரீ T.R. ராமச்சந்திர சாஸ்திரி இல்லத்தில் காலை ஸ்நானம் முடித்துக் கொண்டு தயார் ஆகும் சமயம் ஸ்ரீ பெரியவாள் கர்நூலில் தங்க வேண்டிய இரவிலேயே வந்து சேர்ந்திருக்கிறார்கள். நாங்கள் எல்லோரும் காரில் அவசர அவசரமாக ஸ்ரீமடம் முகாம் சென்றோம். ஸ்ரீ புது பெரியவாளை முன் தரிசித்து வந்தனம் செய்து அவர்கள் உடல் நலம் விசாரித்தேன். 'பரவாயில்லை' என்றார்கள். அப்பொழுதே ஸ்ரீ பெரியவாள் மேனா உள்ளே நுழைந்தது. மேனாவின் கதவுகள் சாத்தினபடி இருந்தன. ''பூர்ணகும்பம், எல்லாம் தயாராக இருந்தது. சில விநாடிகளில் கதவை திறந்தார்கள். முதல் தரிசனம் 'எனக்கும் எங்கள் குடும்பத்துக்கும் தான். வணங்கினேன். சந்தோஷம் தாங்காமல் மெய் மறந்து நின்றேன்.

ஸ்ரீ பெரியவாள்: 'வந்து விட்டாயா' என்றார். காலையில்தான் வந்தோம் என்றேன். ஸ்ரீ பெரியவாள்: மேனாவில் உட்கார்ந்த படியே,'ஆமாம்- நீ ஒரு லெட்டர் எழுதியிருந்தாயே. அது ஞாபகம் இருக்கா' என்றார்கள், எனக்குப் புரியவில்லை. பேசாமல் இருந்தேன்.

பெரியவாள்: 'அந்த லெட்டரில்(பீடாரோகணவிழா சிகந்திராபாத்தில் நடந்த விவரங்களை பூராவும் விக்ஞாபித்த லெட்டர்) என்ன எழுதியிருந்தாய். இந்த மாதிரி விழா இந்த இரட்டை மாநகரில் எப்பொழுதும் நடந்தது இல்லையாம். அவ்வளவு அபூர்வமாக

Koviloor Digital Library
நகர்வலம், மேளதாளம் பஜனை, வேதகோஷ்டி, சுமங்கலிகள் கூட்டம் பாட்டுடன் நூற்றுக்கணக்கான ஜனங்கள் எப்பொழுதும் காணாத காட்சியாக ஊர்வலம் பூராவும் தொடர்ந்து வந்தது. இனி இந்த மாதிரி மஹோற்சவம் நடப்பது அரிது.'' என்று எழுதியிருந்தாய். எனக்கு உடனே என்ன தோன்றியது. Ajantha Ellora வில் (ஔரங்காபாத் சமீபம்) ஒரு ஸ்தபதி எழுதியிருந்தது என் முன் தெரிந்தது. அதாவது ஓர் ஸ்தபதி ஒரே ஒரு பெரிய பாறையில், (ஓர் பெரிய வைக்கோ போர் போல் என்று வைத்துக் கொள்ளேன்) ஓர் ''சிவன் கோவில்'' செதுக்கியிருக்கிறான். லிங்கம், தூண்கள், கர்ப்ப கிரஹம், முன் மண்டபம், பிரகாரம், கோபுரங்கள் எல்லாம் ஒரே பாறையில் செதுக்கியது. 2வது கல்லே அதில் கலப்பில்லே. பார்ப்பதற்கு கண் கொள்ளாக்காட்சி. அந்த வேலைப்பாடுகளை பூர்த்தி செய்து, கோவிலை செதுக்கி அமைத்து, வெளியில் வந்து நின்று தான் செதுக்கி எழுப்பிய கோவிலைப் பார்த்தானாம். தன் கையையும் பார்த்தானாம். (சமஸ்கிருதத்தில் மேலே செதுக்கியுள்ள ஒரு ஸ்லோகத்தைப் பெரியவாள் சொன்னார்கள்.) உனக்குத் தான் சமஸ்கிருதம் தெரியாதே என்று சொல்லி, அவன் என்ன எழுதியிருக்கிறான்-இந்த மாதிரி அற்புதமாகவே நான் செய்தேனா! என் கை தான் செய்ததா. இது என்னால் செய்யும் காரியங்களை இதைப்போல் இன்னொன்று செதுக்கும்படி சொன்னால், என்னால் முடியுமா, முடியாது' என்று இருக்கிறது. நீ Ellora போய் அதைப் பார்த்திருக்கையா என்றார். . .'' ஆம், பார்த்திருக்கிறேன் என்றேன். அந்த ஸ்தபதி எழுதியதும், நீ லெட்டர் எழுதியதும் ஒரே மாதிரியாக தோன்றியது, '' என்று சொல்லி, புன் முறுவல் செய்தார். எனக்கு எப்படியிருந்ததென்று நீங்களே யோசியுங்கள்''!.

துங்கபத்ரா நதியில் எங்கே ஸ்நானம் செய்ய இடம் சௌகர்யம் என்று பார்க்க சென்ற மனிதர் இடம் ஸ்நானத்துக்கு சௌகர்யமாக இருக்கிறது என்று வந்து சொன்னார்கள். ஸ்ரீ பெரியவாள் மேனாவிலிருந்து கீழ் இறங்கி ஸ்நானத்துக்குப் புறப்பட்டார். சங்கர மடத்தில் கிணறு முதலிய வசதிகள், பூஜைகள் ஏற்பாடு செய்ய இடம் சிறியதாக இருந்த படியால் டவுனில் பெரிய சிவன் கோவிலில் ஏற்பாடாயிருந்தது. ஆகையால் சாயந்திரம் ஸ்ரீ பெரியவாள் 'சங்கரமடம்' வருவதாக ஏற்பாடு என்ற தகவல் சொன்னார்கள். ஆகையால் சங்கர மடத்தில் நாங்களும் ஸ்ரீ பெரியவர்களை வரவேற்க வேண்டிய ஏற்பாடுகள் ஒன்றும் சரியாக செய்யவில்லை. அவர்கள் முகாம் இட்ட இடத்தில், வேண்டிய காரியங்கள் முதலில் கவனிக்க வேண்டுமல்லவா. ஆகையால், நான் ஸ்ரீ

Koviloor Digital Library

His Holiness Sri Jayendra Saraswathi.

Koviloor Digital Library

Koviloor Digital Library

H.H. JAGADGURU VIJAYENDRA SARASWATHI SWAMI-

Koviloor Digital Library

Koviloor Digital Library

ெ வாளுடன் நதிக்கு தொடர்ந்து செல்லவில்லை. ஸ்ரீ புது பெரியவாளை ுபடியும் தரிசித்து ஸ்ரீமடத்து மேனேஜர்களைப் பார்த்து, பூஜைக்கும் சந்தர்ப்பனை முதலியவைகளுக்கும் வேண்டிய வசதிகளைக் கவனித்துக் கொண்டிருந்தேன். கர்நூலில் என்னைத் தவிர வேறு ஒருவருக்கும் ஸ்ரீமடத்தின் தேவைகள், அனுஷ்டானங்கள் பூஜை அறை தயாரிப்பு தெரியாது. ஆதலில் அதில் ஈடுபட்டுக் கொண்டிருந்தேன்.

கர்நூல் சங்கர மந்திர்க்கு ஸ்ரீ பெரியவாள் விஜயம்

சுமார் ஒரு மணி சாவகாசத்துக்குள், ஒரு சிஷ்யன் நதிக்கரையில் ஸ்ரீ பெரியவாளிடம் இருந்து ஓடி வந்து, ஸ்ரீ பெரியவாள் 'சங்கர மடம்' போய்க் கொண்டிருப்பதாகவும் உடனே முத்துசாமியை வரும்படியாகவும் ஆக்ஞாபித்ததாக சொன்னான். அப்படியே அதிர்ச்சி அடைந்தேன். நானும் ஸ்ரீ ராமச்சந்திர சாஸ்திரி எங்கள் குடும்பங்கள், இன்னும் நான்கு பக்தர்கள் 2 அல்லது 3 கார்களில் ஓட்டமாக ஓடி 'சங்கர மடம்' வாசலில் தண்ணீர் தெளித்து, கோலம் இட்டு, வாழைமரம், மாவிலை தோரணங்கள் கட்டி ''பூர்ண கும்பம்'' ஏற்பாடுகள் எல்லாம் ஒரு நொடியில் முடித்தோம். எப்படி செய்ய முடிந்தது என்று நினைக்கவே, ஆச்சர்யம். ஸ்ரீ பெரியவாள் 1 மணி நேரத்திற்குள் வந்து சேர்ந்தார்கள். பாதயாத்திரையாக சுமார் நூற்றுக்கணக்கில் பக்தர்களும் கூடினார்கள். 'பூர்ண கும்பம்' மரியாதைகளுடன் அழைத்தோம். எல்லோரையும்,புன்சிரிப்புடன் அனுக்ரஹித்து வெகு நிதானமாக Compound Wall இருக்கும் முன் வாசல் வழியாக நுழைந்தார்கள். மெதுவாக வெளிப் பிரஹாரம் சுற்றி வந்தார்கள். பிறகு காலை அலம்பிவிட்டு முன் Verandah ஏறி, பிரதக்ஷிணம் வந்து உள்ளே வெகு அமைதியாக நுழைந்தார்கள். ஸ்ரீ ஆதி சங்கர பகவத் பாதாள், நான்கு சிஷ்யர்களுடன் Oil-painted Potrait ஐயும் சலவைக்கல் பாதுகைகளையும் பார்த்தபடி, தண்டத்தை முகத்திற்கு முன் வைத்த படி கொஞ்ச நேரம் ஆழ்ந்து குருவுக்கு பிரார்த்தனை செலுத்தினார்கள். பிறகு தண்டத்தால் பாதுகைகளை தொட்டு, வணங்கினார்கள். தேங்காய் உடைத்து நெய்வேத்யம் செய்து கற்பூர ஹாரத்தி, பூஜாரி எடுத்தார். கற்பூர ஹார்த்தியை கண்ணில் ஒத்திக் கொண்டார் மெதுவாக நகர்ந்தார். Hall நடுவில் ''ஹோம குண்டம்'' Permanant ஆக அமைக்கப்பட்டிருந்தது. அதில் குனிந்து உள் இருக்கும். பஸ்பத்தை எடுத்து நெற்றியில் இட்டுக் கொண்டார்கள். அங்கே ''ஹோமம்'' எப்பொழுதோ செய்திருக்கலாம். சமீபத்தில் ஒன்றும் செய்யவில்லை.

Koviloor Digital Library

உடைத்த தேங்காய் மூடிகளை கொண்டு வர சமிக்ஞை செய்தார்கள். என்னையும் என் மனைவியும் அழைத்து, ''ரொம்ப நன்றாக அமைந்திருக்கிறது. ஓர் பெரிய கார்யம் செய்து விட்டாய். இங்கே வந்து நேரில் பார்த்ததில் எனக்கு ரொம்ப சந்தோஷம். சகல க்ஷேமத்துடன் இருங்கள்'' என்று ஆசிர்வதித்து தேங்காய் மூடியை பெரியவாள் கையிலேயே எடுத்து எங்களிடம் கொடுத்தார். அதே போல் ஸ்ரீ ராமச்சந்திர சாஸ்திரிகளுக்கும் கொடுத்தார். எங்களுக்கு இதைவிட இந்த ஜன்மாவில் என்ன பாக்யம் வேண்டும். என்ன சொல்லுவது என்று திகைத்தேன்! கண்ணீர் விட்டேன். மெதுவாக தைர்யத்தை வரவழித்து, 'எல்லாம் பெரியவாள் அனுக்ரஹம் நடந்தது. என்னால் என்ன செய்ய முடியும். பெரியவாள் ஆக்ஞாபித்தீர்கள். அவ்வப்பொழுது சந்தேகங்களை தீர்த்து, அனுக்ரஹித்தீர்கள்.' பூர்த்தியாயிற்று. ஆனாலும், பெரியவாள் சுமார் 13 வருஷத்துக்கு முன் 1954-ல் சங்கரமடம் கட்ட ஆக்ஞை இட்டபொழுது ஏதோ பெரியவாள் செய்யச் சொன்னார்கள் செய்து விட வேண்டியது கடமை என்ற எண்ணத்தில் செய்தேன். காஞ்சி எங்கேயிருக்கிறது. கர்நூல் எங்கேயிருக்கிறது. அப்பொழுது பெரியவாள் இங்கே வருவார் என்று சொப்பனத்தில் கூட தோன்றியதில்லை. இன்று பெரியவாள், என் ஜீவித காலத்திலேயே, நேரில் வந்து அனுக்ரஹித்தீர்களே இந்த பாக்யத்திற்கு எல்லையே இல்லை. எங்கள் குடும்பம் பெற்ற பெரிய பாக்யம் என்று ஏதோ தட்டுத் தடுமாறி உளரினேன். ஸ்ரீ பெரியவாள் புன்முறுவலுடன் ''செய்து முடித்தாய்-வெகு அழகாகவும் அமைந்திருக்கிறது. . .'' என்று சொல்லிக் கொண்டே புறப்பட்டு விட்டார். அவர்களுடன் ஜெயஜெய கோஷத்துடன், ''ஜெய ஜெய சங்கர - ஹர-ஹர சங்கர'' என்ற கோஷத்துடன் முகாம் சென்றோம்.

இதில் நாம் புரிந்து கொள்ள வேண்டிய முக்கிய விசேஷம் என்ன கோவிலுக்கோ ஸ்ரீ மடம் மஹான்களை தரிசிக்க போகையிலோ, மடமட வென்று சத்திரம்-சாவடியில் சினிமாவில் நுழைவது போல் போகக்கூடாது. பயபக்தியுடன் நிதானமாக உள் நுழைந்து, எந்தெந்த சந்நிதிகளை முதலில் தரிசிக்க வேண்டுமோ, அங்கே தரிசித்து, நமஸ்கரித்து, பிரதக்ஷிணம் வந்து, பிறகு மெதுவாக மூலவர் எழுந்திருக்கும் கர்ப்பக்கிரஹ முன் போய் பிரார்த்தனை செலுத்த வேண்டும். நாம் செய்ய வேண்டிய கடமைகளை, முறைகளை தங்கள் அனுஷ்டானத்தில் எடுத்துக் காட்டுகிறார்கள். முன் ஒரு சமயம் இளையாத்தாங்குடி முகாம் சென்றிருந்தேன். சாயந்திரம் ஸ்ரீ பெரியவாள் ஒரு சிறிய பக்தர்கள்

Koviloor Digital Library

கோஷ்டி, சாயங்கால தீபம் ஏற்றும் பூஜையில் 'ஸ்ரீ மடம் அனுஷ்டிக்கும் விவரங்களையும் அப்பொழுது சொல்லும்' செய்யுள்களின் தாத்பரியத்தையும் எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தார் 'புது-பெரியவாள்' பூஜை செய்ய மணி அடிக்கவே பெரியவாள் எழுந்திருந்தார்கள். நாங்களும் எழுந்திருந்தோம். அவர் வாயிலிலிருந்து உள்நோக்கி பூஜை செய்யும் இடத்திற்கு போய்க் கொண்டிருந்தார். நானும் மடமட என்று எழுந்து வேகமாக பூஜை நடக்கும் மேடை சமீபத்தில் போய் அங்கும் இங்கும் பார்த்தேன். ஆனுல் பெரியவாள் எனக்கு முன்பு புறப்பட்டவர்களை அங்கே காணும். மெதுவாக பின் நகர்ந்து கவனித்தேன். அவாள் அப்போதுதான் நிதானமான முன் தாழ்வாரத்தில் நின்று பிரார்த்தித்து மெதுவாக பூஜை மண்டபத்தை நோக்கி வந்து கொண்டிருந்தார். நான் வெட்கி விலகி எட்டி இருந்து பூஜைகள் கவனித்தேன்.

ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசார் யார் குரு ஆராதனை

மறுநாள், வெள்ளிக்கிழமை (3-3-67) ஸ்ரீ பெரியவாளின் குருவுக்கு ஆராதனை நடத்த வேண்டிய நாள். நான் ஸ்ரீமடத்துக்கு எவ்வளவோ தடவை சென்று தங்கியிருந்தும், 'குரு ஆராதனை' பார்த்ததாக ஞாபகமில்லை. ஆதலால் ஆராதனை விசேஷங்கள் எல்லாம் கேட்டுத் தெரிந்து கொண்டேன். அதற்கு எனக்கு இட்ட கட்டளைப்படி செய்ய வேண்டிய ஏற்பாடுகளை செய்தேன். 16 பிராம்மணர்கள், 16 சுமங்கலிகளுக்கும் ஆராதனை வெகு விசேஷமாக சடங்குகள் எல்லாம் நடந்தன. நான் உள்ளே சென்று விவரங்கள் கவனிக்க இஷ்டப்படவில்லை. வெளியில் இருந்தே உள்ளே ஒருவரும் போகாவண்ணம் பார்த்துக் கொண்டேன். என் சம்சாரத்துக்கு பெரிய பாக்யம். அவளும் ஓர் சுமங்கலிஸ்திரீயாக ஆராதனையில் கலந்து கொண்டாள் ஸ்ரீமடம் அழைப்பின் பேரில். பிறகு அவள் வந்து கொஞ்சம் விவரங்களை எனக்கு எடுத்துச் சொன்னுள். ஆராதனை முடிந்த பிறகு பூஜைக்கு, பிறகு, ஸ்ரீமடம் கர்நூல் 2வது முறையாக முகாம் செய்த படியாலும், முகாம் இரண்டே நாள் இருந்த படியாலும், புது பெரியவாள் ஒருவர் அடுத்தபடி பட்டம் ஏற்று மடாதிபதியாக வருபவர்களை பார்க்கவும் ஏராளமான கூட்டம். கட்டுப்படுத்துவதே ரொம்ப சிரமமாக இருந்தது. நான் கொஞ்சம் கட்டு மீறி கூட கண்டிப்பாக ஜனங்களை அடக்கினேன். ஸ்ரீ மடம் சிப்பந்திகளைக் கூட கொஞ்சம் நிர்ப்பந் தம் செய்தேன். இதையெல்லாம் புது பெரியவாள் எங்கிருந்தோ கவனித்துக் கொண்டிருந்திருக்கிறுர்கள். சாயந்திரம் கூப்பிட்டு, புன் சிரிப்புடன்

Koviloor Digital Library

''நல்ல முறையில் ஜமாய்ச்சு விட்டீர்கள். உம்மாதிரி பேர்கள் ஸ்ரீ மடத்துக்கு தற்சமயம் தேவை . . .'' என்றார்கள். நான் உள்ளம் மகிழ்ந்து, ரொம்ப சந்தோஷமாக ஸ்ரீ மடத்திலேயே இருக்க ஆசைதான்,ஆனாலும் இன்னும் கொஞ்சம் குடும்ப பந்தமும், கடமைகளும் இருக்கிறதே என்று சொல்லவிரும்பாமல் சொன்னேன். (''பெரியவாள்', முதல் நாள் ஸ்ரீ சங்கர மடம் போய் தரிசித்து திரும்பிய உடனேயே, புதுபெரியவாளைப் போய் தரிசித்துவரச் சொல்லி இருப்பார் போலும்.) காலையிலேயே, பெரியவாள் முகாம் வந்து சேர்ந்தவுடன், புது பெரியவாள் ஸ்ரீ சங்கர மடத்துக்குப் புறப்பட்டார். நாங்கள் எல்லோரும் அவருடனே கோஷமிட்டுக் கொண்டு போனோம். அவரும் ஸ்ரீ சங்கர மடத்தை சுற்றி பார்வையிட்டு தரிசித்து திரும்பினார்கள். நல்ல மத்தியான வெய்யில் நானும் 'ஜெய ஜெய சங்கர-ஹர ஹர சங்கர' என்று சொல்லிக் கொண்டு ஜனங்களுடன் வந்து கொண்டிருந்தேன்! புது-பெரியவாள் என்னை அழைத்து நீங்கள் என்னுடன் வரவேண்டாம். வெய்யில் அதிகம். காரில் ஏறி முகாம் போங்கள் என்று கருணையுடன் ஆக்ஞாபித்தார்கள். ஆஹா! என்ன அன்பு! என்ன கருணை!!) ''சங்கர மடம் ரொம்ப விஷேமாக அமைந்திருக்கிறது'' என்று சொல்லி உள்ளே சென்றார்.

சுமார் மாலை மணி 5.00 இருக்கும் அன்று பெரியவர்கள் கர்நூலை விட்டுப் புறப்பட்டு அடுத்த ஊருக்கு, ஸ்ரீ சைலம் மார்க்கத்தில் போக இருக்கிறார்கள். ஆயிரக்கணக்கில் கூட்டம் 'பெரியவாள்' குரு ஆராதனையால் ரொம்ப களைத்திருந்தார். மெதுவாக அணுகி, பெரியவாளின் திவ்ய வாக்கின் சப்தத்தைக் கேட்க வெகு ஜனங்கள்' வந்து காத்திருக்கிறார்கள். அனுக்ரஹம் செய்ய வேண்டும் என்றேன். பூஜையின் அருகிலேயே,ஓர் பெரிய வெளி (open place) மத்தியில் ஓர் அரச மரம். சுற்றி மேடை திடீரென்று 'பெரியவாள்' அந்த அரசமர மேடையின் சமீபம் வந்து, ஏற பிரயத்தனம் செய்தார்கள். அது 4 அடி உயரம் இருக்கலாம். நான் உடனே ஓடிப்போய், பக்கத்திலிருந்து ஸ்ரீ மடத்தைச் சேர்ந்த காலி மரப் பெட்டி ஒன்றை கொண்டு போட்டேன். பெரியவாள் அதில் ஏறாமல் 'இதற்குள் என்ன இருக்கிறது என்றார்கள்! நான் ஒன்றும் இல்லை. காலி பெட்டிதான் என்றேன். பிறகு ஸ்ரீ மடத்து சிப்பந்தி ஒருவனைக் கூப்பிட்டு, 'இந்த பெட்டியில் என்ன வைப்பது வழக்கம்' என்றார்கள். அவன் ''புஸ்தகங்கள்-காலிநோட்டுகள் என்றான்.'' உடனே பெரியவாள் அதை எடுத்து விடும்படி ஜாடை செய்தார். அதற்குள் ஓர் மர (Stool) கொண்டுவரப்பட்டது. அதன்மேல் கால்வைத்து மெதுவாக மேடையில்

Koviloor Digital Library

ஏறி, ஜனங்கள் இருக்கும் பக்கம் திரும்பி உட்கார்ந்தார்கள். எல்லோரும் வந்தனம் செலுத்தினார்கள். எல்லோரையும் உட்காரும்படி கையால் ஜாடை காட்டினார்கள். பிறகு என்னை அழைத்து 'இங்கிருப்பவர்களின் உனக்கு யாரையெல்லாம் தெரியும்' என்றார். நான் இந்த சூழ்நிலை எதிர் பார்க்கவில்லை. எனக்கு பலபேர்களை நன்றாகத் தெரிந்தும், பெயர் தெரியாது. சுமாராக எல்லோருக்கும் என்னை நன்றாகத் தெரிந்திருக்கும். ஆனால் எனக்கு பெயர்சொல்லி, யார்யார் தெரியும் என்று சொல்ல இயலவில்லை. அதற்குள் ஒரு நபரைக் காட்டி 'இவர் யார்' என்றார். அவரே முன் வந்து தன் பேர் ஊர் விவரங்களைத் தெரிவித்தார். நல்ல காலம் , ஸ்ரீ ராமச் சந்திர சாஸ்திரி, உள்ளூர் பிரபல வக்கில். சங்கர மடம் President வந்து சேர்ந்தார். அவர் பெரியவாளிடம் நெருங்கி சில முக்கிய நபர்களை தெரிவித்தார்.

ஸ்ரீ பெரியவாள், அவருக்கே உள்ள பாணியில், உபந்நியாசம் செய்யப் போவதால் ஓர் அறிக்கையும் எண்ணமும் கொடுக்காமல், மெதுவாக பேச ஆரம்பித்து, ஆஸ்திகத்தையும், பக்தி மார்க்கத்தையும், கோவில்கள்-மடங்களின் அவசியத்தையும், மக்கள் செய்ய வேண்டிய கடமைகளையும் 'தெலுங்கில்' ஒரு மணி நேரம் பேசினார். ஜனங்கள் அப்படியே மெய்மறந்து கேட்டுக் கொண்டிருந்தார்கள். (Pin drop silence) புது-பெரியவாளும் எங்கேயோ ஒதுங்கி இருந்து, பெரியவாள் என்ன பேசுகிறார்கள் என்று கேட்டுக் கொண்டிருந்தார்கள். பெரியவாள் எல்லோருக்கும் அனுக்ரஹித்து அங்கிருந்த படியே அடுத்த முகாம் கிளம்பி விட்டார்கள்.

பிறகு புது-பெரியவாளை தரிசித்தேன்.'' அப்பா, பெரியவாள் பெரிய அபூர்வமான பேச்சு, தெலுங்கில் ஒரு மணி பேசி விட்டாரே. நான் இந்த மாதிரி பெரியவாள் பேசி கேட்டதேயில்லையே! . . .'' என்றார்கள். பிறகு புது-பெரியவாளும் சாயந்திர பூஜைகள் முடித்து ஸ்ரீமடம் திக்விஜயம் புறப்பட்டார்கள்.

எனக்கு பெரியவாள்-புதுபெரியவாள், ஸ்ரீமடத்தில் இருந்த ஈடுபாட்டுக்கும், அபிமானத்துக்கும் நான் பெரியவர்களை 'அஹோபிலத்திலிருந்தே' அழைத்து அவர்களுடனேயே ராயலசீமா தேசம் பூராவும் சென்று, ஸ்ரீ சைலம் வரையாவது போக வேண்டிய கடமைப்பட்டவன். அதற்கு நல்ல வாய்ப்பு ஏற்பட்டும் நான் அதை அங்கீகரத்துக் கொள்ளாதது, எனது துரதிர்ஷடம் தான்.MES அவசரமாக

Koviloor Digital Library

மார்ச்சு மீ முடிக்க வேண்டிய காண்ட்ராக்ட் தொழிலைப் பெரிதாக கருதி, ஓர் அறிய சந்தர்ப்பத்தை கை விட்டேன். இதற்குத் தான் ஈஸ்வர சங்கல்பம்' என்பார்கள் போலும்!!.

ஸ்ரீ மடம் ஜீபாடு, ஆத்மகூர், நாகலொட்டி, பெட்செருவு வழியாக, 9-3-67 நீ ஸ்ரீ சைலமாகிய திவ்ய சிவக்ஷேத்திரத்தை அடைந்தார்கள்.

ஸ்ரீ சைலத்தில் சங்கரர்

செகந்திராபாத்தில் சங்கர மடம் விஷயத்திற்கு திரும்புவோம். 1962 ஸ்ரீ இளையாத்தாங்குடி முகாம் ஸ்ரீ பெரியவாள் அனுக்ரஹம் கிடைத்ததை ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன். 1964 ஸ்ரீ பங்களூர் ஸ்ரீ கிருஷ்ண பாகவதர் கதை நடத்த இருந்த ஸ்ரமத்தினால், நவம்பர் ஸ்ரீ சங்கர மடம் செகந்திராபாத்தில் கட்டவேண்டும் என்று நானும் சிலபக்தர்களும் சங்கல்பம் செய்து கொண்ட விவரமும் ஏற்கனவே எழுதியிருக்கிறேன். அப்பொழுதிலிருந்தே ஸ்ரீ மடம் எந்தெந்த முகாம் சென்றாலும், ஸ்ரீ பெரியவாளை தரிசிக்கும் பொழுது, 'பெரியவாள்' ஹைதராபாத்-செந்திராபாத்தில் வந்து மக்களுக்கு அனுக்ரஹம் செய்ய வேண்டுமென்று தொடர்ந்து விடாமல் விக்ஞாபித்துக் கொண்டே இருந்தேன். ஆந்திர பிரதேச 'திக்விஜயம்' தொடங்கினவுடன் தலைநகரில் ஹைதராபாத்துக்கு அவசியம் ஸ்ரீ மடம் வருவார்கள் என்று நானே நிச்சயம் செய்து கொண்டேன். ஸ்ரீ மடம் சென்ற போதெல்லாம், மடத்து சிஷ்யர்கள் 'ஹைதராபாத்' எப்பொழுது எங்களுக் கெல்லாம் வருகை என்று என்னைக் கேட்பார்கள். காளஹஸ்தியில், Endowment மந்திரியும் பெரியவர்களிடம், தங்கள் திக்விஜயத்தில், ஹைதராபாத் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று, விக்ஞாபித்தார்கள். ஆகவே ஸ்ரீ சைலம் வந்து விட்ட படியால், அடுத்த படி ஹைதராபாத் தான் வருவார்கள் என்ற ஓர் நம்பிக்கை ஏற்பட்டது.

எனவே, ஹைதராபாத்-சிகண்ட்ராபாத் பக்தர்கள் ஸ்ரீ சைலம் சென்று சன்னி தானங்களை பாக்ய நகருக்கு திக் விஜயம் செய்யும் படி பிரார்த்தித்துக் கொள்ள, சில நண்பர் கூடி பேசினோம். சும்மா போய் அழைப்பதை விட ஓர் 'பாத பூஜை', ஓர் பிக்ஷை (சமஷ்டி) செய்து, இரட்டை மாநகரிலிருந்து, மஹா ஜனங்கள் போய் பிக்ஷா வந்தனம் செய்து அழைக்க கொஞ்சம் பணம் வசூல் செய்தோம்.

Koviloor Digital Library



His Holiness Sri Sankara Vijayendra Saraswathi Swamigal

Koviloor Digital Library

Koviloor Digital Library



Sankara Mantapam at Sreesailam
Standing R to L:
Sri Sanyasaiah, Executive Engineer
Sri Sambamurthy Sastrigal, Manager
Sri C.S. Viswanatha Iyer, Senior Manager
Staff of Kanchi Kmakoti Mutt
Sri Krishnamurthy Sastrigal, Camp Manager

Koviloor Digital Library

Koviloor Digital Library

His Holiness Jagatguru Paramacharyal when He graced His presence at the Kurnool Sankara Mandir

Koviloor Digital Library

Koviloor Digital Library



Sankara Mantapam at Sreesailam - a closer view

Koviloor Digital Library

Koviloor Digital Library

The devotees of Andhra Pradesh presented His Holiness with a Golden crown of Rudrakshas. Sri Jayendra Saraswathi is seen crowning His Holiness Paramacharya.

Koviloor Digital Library

Koviloor Digital Library

1967ம் ஆண்டு மார்ச்சு மாதம் 22 ஸ்ரீ சைலத்தில் சங்கர மண்டபத்தில் பிரதிஷ்டை நடக்க இருக்கிறது. நெல்லூரைச் சேர்ந்த ஸ்ரீமதி சுஜாதா அம்மையாரின் சிரத்தை பூர்வமான ஒத்துழைப்புடன் இந்த மண்டபம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் தேவஸ்தானத்தில் நிலம் கேட்டு வாங்குவதிலிருந்து, கட்டடம் கட்டுவது, ஸ்ரீ ஆதிசங்கரர் சலவை விக்ரஹங்களை காஞ்சியிலிருந்து லாரியில் தருவித்து, அங்கே பத்திரப்படுத்தி வைத்து, பிராதிஷ்டை வரை உள்ள பொறுப்பை என்னிடம் ஸ்ரீ பெரியவாள் ஆக்ஞாபித்து அனுக்ரஹித்த விஷயம் எல்லாம் ஏற்கனவே எழுதியுள்ளேன்.

சமஷ்டி பிக்ஷை - பாக்ய நகர் வாஸிகள்

ஆகவே மார்ச்சு மாதம் 23 தீ 'பாக்ய நகர்' வாஸிகளின்' சமஷ்டி பிக்ஷை குறித்து''ஸ்ரீ மடத்துக்கு எழுதி ஏற்பாடு செய்தேன். ஸ்ரீ மடத்து பூஜைகளும் ஸ்ரீ சைலத்தில் சாதாரணமாக கிடைக்கக் முடியாத முக்கிய சாமான்களை தெரிந்து கொண்டு, பிக்ஷா வந்தனத்துக்கு வேண்டிய பொருள்களை சேகரித்துக் கொண்டு சுமார் 70 பக்தர்கள் ரயிலிலும், பஸ்ஸிலும், கார்களிலும் மார்ச்சு மாதம் 21 தீ பகல் ஸ்ரீ சைலம் போய் சேர்ந்தோம். முக்கியமாக நான், எனது சம்ஸாரம் பையன் ஸ்ரீ V. நரசிம்ம அய்யர், ஸ்ரீ P.வெங்கடேஸ்வரலு, ஸ்ரீ சபதி, ஸ்ரீ வேல் நடராஜய்யர், பஜனை V.கெணேசய்யர் இன்னும் பலர் கூடினோம். சேர்ந்த பொழுது மணி சுமார் பகல் ஒரு மணி. எல்லோரும் அவசர அவசரமாக ஸ்நானம் பேருக்கு செய்து விட்டு (தண்ணீர் சௌகர்யம் எல்லோருக்கும் இல்லை.) ஸ்ரீ மடம் முகாம் ஓடினோம். பூஜை நடந்து கொண்டிருந்தது, முடியும் சமயம்.''கற்பூர ஹாரத்தி'' எடுக்கும் முன்பே எல்லோரும் கூடினோம். இதில் பலபேர் இதுவரை 'பெரியவாளைத்' தரிசனம் செய்ததே இல்லை. சிலர் தரிசனம் செய்து பல வருஷங்கள் ஆயின. எனக்கென்னவோ, ஸ்ரீ பெரியவாள் பாக்யம் அடிக்கடி அவர்கள் தரிசனம் 1954லிருந்து கிடைத்து வந்தது. எல்லோருக்கும் விபூதி-குங்குமம் பிரஸாதங்கள் விநியோகம் செய்தார்கள்.

பூஜையின் நடுவிலேயே நான் ஸ்ரீமடம் ஆராதனை கட்டளைக்கு சென்று, ஸ்ரீமான் S. சாம்ப மூர்த்தி சாஸ்திரிகளிடம், இப்படி சுமார் 70 பேர் வந்திருப்பதைத் தெரிவித்தேன். அவரும் உடனே நேரில் போய் எங்கள் எல்லோருக்கும் போஜனம் ஏற்பாடுகள் செய்தார். காலையிலிருந்து ஒருவரும் ஒன்றும் சாப்பிடவில்லை. வழியில் வசதியும் இல்லை. ஒரே பசி.

Koviloor Digital Library

ஆகையால் 'பூஜை' முடிந்தவுடன் எல்லோரையும் அழைத்துக் கொண்டு, போஜன சாலைக்கு போனேன். எல்லோரையும் உட்கார வைத்து, இன்னும் விட்டுப் போனவர்களை அழைக்க ஸ்ரீ மடம் முகாம் வந்தேன். பூஜை இடத்திற்கும் போஜன சாலைக்கும் சுமார் 1/2 furlong இருக்கும் வழியில் என் நெருங்கிய மெட்ராஸ் நண்பர் ஒருவர் என்னைப் பார்த்து 'சாப்பிட்டாய் விட்டதா! என்றார். 'இல்லை' என்றேன் சாப்பிடுவதற்கு முன் 'பெரியவாள்' பிக்ஷை செய்தபிறகு, அவர்களிடம்'' துளஸி'' பிரஸாதம் வாங்கிக் கொண்டு பிறகு தான், பிக்ஷை செய்பவர்கள் சாப்பிடுவது விசேஷம் என்றார்கள். ஒஹோ, அப்படியா ரொம்ப சந்தோஷம்' என்று 'பெரியவாள்' எங்கே பிக்ஷை செய்கிறார்கள் என்ற விவரம் தெரிந்து கொண்டேன்.

இதற்குள், ஸ்ரீ பெரியவாள், மடத்து பெரிய மேனேஜர் ஸ்ரீ விஸ்வநாதய்யரை கூப்பிட்டு, "Hyderabad-Secunderabad லிருந்து அநேகம் பேர் வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு போஜனக் கட்டில் சாப்பாடு இருக்கிறதோ என்னவோ! இங்கேயே பூஜை கட்டின் பின்னால் அவர்களுக்கு பூஜை பிரஸாதங்களைப் போட்டு, சாப்பாடு பண்ணிவை'' என்று ஆக்ஞாபித்தார்களாம். மேனேஜர் எங்களையெல்லாம் தேடி வந்து என்னைப் பார்த்து விஷயம் சொன்னார்கள். நான் எல்லோரும் போஜனக் கட்டிடத்துச் சென்றிருக்கிறார்கள்', என்றேன். மேனேஜர் பெரியவாளிடம் எல்லோரும் சாப்பிட போயிருக்கிறார்கள் என்றாராம். அதற்கு ஸ்ரீ பெரியவாள் 'அவர்களுக்கு அங்கு இடமிருக்கிறதா? போஜனம் செய்யாவிடால் அழைத்து வந்து விடு' என்று தாயின் பால் இருக்கும் அன்புடன் சொன்னார்கள். அங்கே போய் பார்த்ததில் எல்லோரும் சாப்பிட ஆரம்பித்தாய் விட்டது. ஏதோ சிலர் சாப்பிடாமல் இருந்தவர்களை மட்டும் அழைத்து வந்தேன். அவர்களை பூஜை கட்டிடம் பின்னால் போஜனத்திற்கு உட்கார வைத்துக் கவனிக்க ஏற்பாடு செய்து, நான் 'பெரியவர்கள்' தரிசனத்துப் போனேன். ஸ்ரீ பெரியவாள் பிக்ஷையை முடித்துவிட்டு, ரூமில் கட்டிலில் உட்கார்ந்திருந்தார். நான் ஒரு தட்டில் துளஸி, கல்கண்டு, திராட்சை எடுத்துக் கொண்டு போய் கொடுத்து நமஸ்கரித்தேன். ஏதோ யோக ஷேமங்கள் விஜாரித்து விடை கொடுத்தார்கள்.

நான் சாப்பிட்டு விட்டு, அங்கே ஸ்ரீ மடத்து மேனேஜரையும், ஸ்ரீ S. சாம்பமூர்த்தி சாஸ்திரிகளை கண்டு, 'பிரதிஷ்டை'க்கு என்னால் செய்ய வேண்டிய காரியங்களைக் கவனித்து கொண்டிருந்தேன். பிரசாத

Koviloor Digital Library

மூட்டைகளிலும், பொட்டலங்களிலும் பிக்ஷா வந்தனுத்துக்கு நாங்கள் கொண்டு வந்திருந்த சாமான்களை பார்வையிட்டார்கள். சமஷ்டி பிக்ஷை மறுநாள், பிரதிஷ்டைக்கு மறுநாள் துவாதசி அன்று ஏற்பாடு. ஸ்ரீ சாம்ப மூர்த்தி சாஸ்திரிகள் அவசர அவசரமாக 'வெண்ணெய்' கொண்டு வந்திருக்கிறீர்களா என்று கேட்டார், 'ஆமாம்' என்றேன். இப்படி எடுத்துக் கொடுங்கள். மீதி சாமான்கள் வந்தது அவ்வளவு முக்கியமில்லை. 'வெண்ணெய்' இப்பொழுது இல்லாவிட்டால், நாளை பிரதிஷ்டைக்கே ஸ்ரமம். 'வெண்ணெயும்-மருந்தும்' கலந்து இடித்து பிசைந்து தானே பிரதிஷ்டை செய்யும் விக்ரஙகளுக்கு கீழே போட்டு fix செய்ய வேண்டும் என்று சொல்லி ரொம்ப தேவையானது கிடைத்தது. சந்தோஷம்! என்றார்கள். பிறகு நீங்கள் கொண்டுவந்த திரவியங்களை சாமான்களை இன்றே பெரியவாளிடம் வைத்து விடுங்கள். நாளைக்கே சிலது தேவைப்படும் என்றார். சரியென்று, சாயந்திரம் எல்லா சாமான்களையும் பூஜை மேடைக்கு எதிரில் கொண்டு போய் வைத்தோம். ஸ்ரீ பெரியவாள் இரவு கோவிலிலிருந்து வந்தவுடன் எல்லாவற்றையும் பார்வையிட்டு விஜாரித்தார்கள்.

ஆதிசங்கர பகவத் பாதாளும் அவர்கள் நான்கு சிஷ்யர்களும் ப்ரதிஷ்டை

மறுநாள் ஸ்ரீ சங்கர பகவத்பாதாள், நான்கு சிஷ்யர்கள் பிரதிஷ்டை. ஏராளமான பக்தர்கள் கூட்டம். எங்கெங்கிருந்தோ வந்திருந்தார்கள். பரமேஸ்வரனின் அவதாரமாக கருதப்படும் ஸ்ரீ ஆதிசங்கர பகவத் பாதருக்கு, அவருடைய மறு அவதாரமாகக் கருதப்படும் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் தம் திருக்கரத்தால் அபிஷேகம் செய்வித்தார்கள். ஸ்ரீ ஆதி சங்கரரும் பத்ம பாதரும் ஹஸ்தாமலகரும் தோடகரும் சுரேசுவச் சாரியாரும் மீண்டும் உயிர் பெற்று வந்து விட்டார்களோ என்று நினைக்கும் படி, ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகளும், ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளும், அனந்தானந்த மைசூரிலிருந்து வந்திருந்த சங்காரனந்த ஸ்வாமிகளும், திரிவிக்ர மானந்த ஸ்வாமிகளும். அந்த மேல் மண்டபத்தில், (ஐந்து துறவிகளும்) ஸ்ரீ ஆசார்ய மூர்த்திக்கு தேங்காயில் கற்பூர ஹாரத்தி எடுத்தார்கள். என்றும் கிடைக்காத இந்த கண் கொள்ளா காட்சியைப் பார்க்க கொடுத்து வைத்தவர்கள் மிகவும் பாக்கிய சாலிகளே. மேல் மண்டபத்திலேயே ஆசார்யாளும் அருகில் நின்று தரிசித்துக் கொள்ளும் பாக்கியம் எனக்கு கிட்டியது, ஸ்ரீ பெரியவாளின் பரம அனுக்ரஹம். பிறகு மெதுவாக கீழ் இறங்கி வந்து, பாதுகைகளுக்கு

Koviloor Digital Library

தங்க புஷ்பதளத்தால் அர்ச்சித்தார்கள். எல்லோரையும் பெரியவாள் அனுக்ரஹித்தார்கள். அன்று பூராவும் ஒரே குதூகலம். விழாக் கூட்டம் இந்த வைபவத்தை விவரமாகத் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால், 'ஸ்ரீ சைலதில் ஸ்ரீ சங்கரர்! என்று புத்தக ரூபமாக, ஸ்ரீ பரஸீதரன் என்பவர் நேரில் கண்ட காட்சிகளை எடுத்துரைக்கிறார், அவசியம் படியுங்கள்.

மார்ச்சு மாதம் 23 ந் - துவாதசி - Hyderabad-Secunderabad பக்தர்களின் சமஷ்டி பிக்ஷை முதல் நாள் இரவே ஸ்ரீ பெரியவாளிடம் அணுகி, நாங்கள் எல்லோரும் பாதாள கங்கை சென்று விடியற்காலம் ஸ்நானம் செய்து விட்டு, பூஜைக்கு வருகிறோம் என்று விக்ஞாபித்துக் கொண்டேன். ஏனென்றால் பூஜைகளை வெகு சீக்கிரமே ஆரம்பித்து முடித்து விட்டால் என்ன செய்வது. அதே போல் எல்லோரும் பாதாள கங்கைச் சென்று ஸ்நானம் செய்துவிட்டு, ஸ்ரீ மடத்துக்கு சுமார் காலை 8.00 மணி வந்து சேர்ந்தோம். ஸ்ரீ பெரியவாளும் பூஜை பீடத்தில் வந்து அமர்ந்தார்.

'பாதாள கங்கையில்' ஸ்நானம் செய்துவிட்டு வந்தீர்களா என்று கேட்டார். 'ஆமாம்' என்றேன். முதல் கால பூஜை - பால் அபிஷேகம், சந்தன அபிஷேகம்,- அலங்காரம், அர்ச்சனை தீபாராதனைகள் எல்லாம் கண்டு மெய் மறந்தோம். நானும் என் சம்ஸாரமும், ஆதி சங்கர பகவத் பாதாள் பாதுகைகளுக்கு '' பாத பூஜைகள்'' செய்வித்தோம். இதுதான் முதல் தடவையாக நாங்கள் 'பாத பூஜை' செய்வித்ததாக நினைக்கிறேன். எங்கள் ஊரில்,எங்கள் ஆத்தில் லால்குடியில், என் தகப்பனார் செய்தது ஞாபகமிருக்கிறது.

'பிக்ஷா வந்தனம்' செய்ய வேண்டி எழுந்து, கோவில் கோபுர வாசல் பக்கம் சென்று யானையுடன், பூர்ண கும்பத்துடன், பால், பழம், தேங்காய், இதர சாமான்கள்களுடன் பாக்ய நகர் பக்தர்கள் எல்லோருமாக, வாத்திய கோஷ்டியுடன் வந்து, பூஜா மண்டபத்துக்கு முன் சமர்ப்பித்தோம். நகர வாசிகள் சார்பாக நானும் என் சம்ஸாரமும் தான் கர்த்தாக்களாக இருந்து ஸ்ரீ பெரியவ்ாள் முன் வந்தோம். அவர்களுடைய திவ்ய கரத்தால் 'தேங்காயை' எடுத்துக் கொண்டு, பிக்ஷை வந்தனத்தை அங்கீகரித்தார்கள். எனது வாழ்க்கையிலேயே நடந்த ஓர் திவ்ய சம்பவம், இது வரையில் ஏற்படாத பாக்யம். பிறகு இரண்டாம் கால பூஜை தொடர்ந்து நடந்தது. 'தீர்த்தபிரஸாதம்' ஸ்ரீ பெரியவாள் திரு கரங்களினாலேயே வழங்கினார்கள். விபூதி-குங்குமம் பிரஸாதங்கள் பெற்று அகம் மகிழ்ந்தோம்.

Koviloor Digital Library



Koviloor Digital Library

Koviloor Digital Library

His Holiness Sri Jayendra Saraswathi Swamigal

Koviloor Digital Library

Koviloor Digital Library



His Holiness Sri Jayendra Saraswathi Swamigal

Koviloor Digital Library

Koviloor Digital Library



A general view of the temple at Sreesailam, and the Sankara Mantapam

Koviloor Digital Library

Koviloor Digital Library

ஸ்ரீ பெரியவாள் அவ்வளவு அன்பாக அழைத்து பூஜை பிரசாதங்களை சாப்பிட ஏற்பாடுகள் செய்தும், நேற்று எங்களுக்கு கொடுத்து வைக்க வில்லையல்லவா!. இன்றுவது அந்த பிரஸாதத்தைப் பெறவேண்டி, பூஜை நைவேத்தியங்களை, அங்கேயே பின் கட்டில் உட்கார வைத்து எல்லோருக்கும் போஜனம், அளிக்கப்பட்டது. நானும் சிலரும் பெரியவாள் பிக்ஷை செய்த பிறகு 'துளசி பிரஸாதம்' பெற்றுத் தான் ஆகாரம் செய்ய இருந்தோம். ஒவ்வொருவராக எல்லோரும் பெரியவாள் முன் கூடி விட்டார்கள். ஒவ்வொருவரையும் தனித்தனியாக விஜாரித்து அனுக்ரஹம் செய்தார்கள். எல்லோரும் 'பெரியவாள்' Hyderabad-Secunderabad வரவேண்டுமென்று, பிரார்த்தித்தார்கள். 'பெரியவாள்' ஒன்றும் பதில் சொல்லவில்லை. எல்லோரும் வணங்கி விடை பெற்றோம். சாயந்திரம் எங்களில் சிலரைக் கூப்பிட்டு, சிகண்ட்ராபாத்தில், ஆஸ்திகர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள். ஸ்ரீ மடத்தைச் சேர்ந்தவர் எவ்வளவு பேர் இருப்பார்கள் என்று சில விவரங்களைக் கேட்டார். மேலும் ஒரு சபை ஒன்று ஏற்பாடு செய்து,அதில் மெம்பர்களை சேர்க்க வேண்டும் என்றும், 0.25 p or 0.50 p. subscription உங்களுக்கு என்ன தோன்றுகிறதோ, அதை ஏற்படுத்தி ஆஸ்திகர்கள். ஒவ்வொருவரையும் அதில் மெம்பர்களாக சேர்க்க வேண்டும். அப்படி சேகரித்து எத்தனை ஆயிரம் பேர்கள் அந்த சபாவில் மெம்பர்கள் என்று எனக்குச் சொல்ல வேண்டும்' என்று ஆக்ஞாபித்தார்கள். எல்லோரும் சரி-சரி என்று சொன்னோம். உடனே பெரியவாள், இப்பொழுது ஸ்ரீ சைலத்துக்குத் தான் இத்தனை பேர் வந்திருக்கிறீர்களே, உடனே இங்கேயே meeting போட்டு,அந்த சபை ஏற்பாடு செய்து, எல்லோரையும் மெம்பர்கள் ஆக்கவும். ஒவ்வொருவரும் தினம் சில மெம்பர்களை சேர்க்க வேண்டும். அந்த மாதிரி ஏற்பாடுகள் செய்து, meeting போட்ட விவரங்களை, 'புது-பெரியவாளிடம்' சொல்லி விட்டுப் போங்கள் என்றார்.

எல்லோரும் முகமலர்ந்து, இரவு 9.00 மணிக்கு. சாயங்கால பூஜை முடிந்தவுடன், கூடி பேசி பெரியவாள் அபிப்ராயத்தை எல்லோருக்கும் எடுத்துரைத்து, ஏற்பாடுகள் செய்தோம். காலை பஸ்ஸிலும், கார்களிலும் எல்லோரும் ஊர் திரும்ப இருந்தார்கள். நான் மட்டும் ஸ்ரீ சைலத்தில் தங்கினேன். காலையில் புது-பெரியவாளை தரிசித்து, ஸ்ரீ பெரியவாள் ஆக்ஞையையும் நாங்கள் இரவு meeting போட்டு நடந்த தீர்மானங்கள் எல்லாவற்றையும் சொன்னேன். சந்தோஷப்பட்டு 'சரி,சந்தோஷம், இன்னும் நிறைய மெம்பர்கள் சேர்த்து பெரியவாள்

Koviloor Digital Library

சொன்ன பிரகாரம் செய்யுங்கள்' என்றார். தொடர்ந்து, புது-பெரியவாளிடம் ஸ்ரீ மடம் Hyderabad-Secunderabad விஜயம் செய்ய வேண்டுமென்று பிரார்த்தித்துக் கொண்டேன். அதற்கு புது-பெரியவாள் இன்று சாயந்திரம் அல்லது நாளை காலை ஸ்ரீ சைலத்திலிருந்து புறப்பட வேண்டும். அடுத்த முகாம் எங்கேயென்று ஒரு வித அபிப்ராயமும் பெரியவாளிடமிருந்து தெரிந்து கொள்ள முடியவில்லை. நீங்கள் போய் கேட்டுத் தெரிந்து வந்து சொல்லுங்கள் என்று ஆக்ஞாபித்தார்கள். 'சரி' என்று ஸ்ரீ பெரியவாள் இருக்கும் கட்டிடத்துக்கு சென்றேன். பெரியவாள் அறையிலிருந்து, பூஜை மண்டபத்துக்கு வந்து கொண்டிருந்தார். நான் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தேன். நேற்று இரவே meeting போட்டு, எல்லா விவரங்களையும் ஸ்ரீ புது-பெரியவாளிடம் விக்ஞாபித்துள்ளேன் என்று சொல்லி, தொடர்ந்து, ஸ்ரீ பெரியவாள்' ஸ்ரீ சைலத்திலிருந்து Hyderabad-Secunderabad விஜயம் செய்ய வேண்டுமென்று தாழ்மையுடன் பிரார்த்தித்தேன். 'பெரியவாள்' ஸ்ரீ மடத்து சிப்பந்தியிடம் பிரஸாதம் கொண்டு வரச் சொல்லி அதைக் கொடுத்து விட்டு, அனுகிரஹித்து, 'நீ போய் நான் சொன்னதையெல்லாம் கவனி. நான் எப்பொழுது எனக்குத் தோன்றுகிறதோ, அப்பொழுது வருகிறேன்' என்று சொல்லி பூஜைக்கு சென்று விட்டார்கள். புது-பெரியவாளிடம் நடந்ததைக் கூறி, அவரிடமும் விடை பெற்றுக் கொண்டு, ஸ்ரீ சைலத்திலிருந்து புறப்பட்டேன்.

விஜயவாடாவிலிருந்தும் பல பக்தர்கள் கும்பாபிஷேகத்துக்கு வந்திருந்து, அவர்களும் ஸ்ரீ மடம் 'பெஜவாடா' ஆந்திர பிரதேசங்களில் இக் விஜயம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். ஆகவே முகாம் பெஜாவாடாவாக முடிந்தது.

"ஹைதராபாத்-சிகந்த்ராபாத் விஜயம்"

பிறகு, பெரியவாள்-ஸ்ரீமடம் ஆந்திர பிரதேசத்தில் பல இடங்கள் முகாம் இருந்து விட்டு, Hyderabad-Secunderabad-ல் 1968 ஏப்ரல் மாதம் வந்து ஸ்ரீ சங்கர ஜெயந்தி நடத்தி 5 மாத காலம் தங்கி பக்தர்கள் அனைவருக்கும் தரிசனம் கொடுத்து அனுக்ரஹித்தார்கள்.

சுபம்

கோவிலூர் ஆண்டவர் நூலகம், கோவிலூர்
A. No. 8971
R65 (8/5)

Koviloor Digital Library

Koviloor Digital Library